Registered as a Newspaper
பக்கம் -20 விலை 12/=

# தமிழ் அலை

வாரமலர்
TAMILALAI
அலை - 01 ஞாயிற்றுக்கிழமை, 14-12-2003 ஓசை -37

## சாண் ஏற முழம் சறுக்கும் சமாதானப்பேச்சு



## இந்தியாவுக்கு நேசக்கரம்

## திருமலை வன்முறைகளில் வெளிநாட்டுச்சதி!



## காணாமல் போனோர் எங்கே?

தமிழ் அலை வாரமலர் Tamilalai

பிரதான வீதி,
கொக்கட்டிச்சோலை.
தொ. பே,
தொலைநகல் 065.2226110
E-MAIL. tamilalai32@yahoo.com.
www.tamilalai.net
14.12.2003

## ஜனாதிபதியே பொறுப்பு

யாழ்குடா நாட்டில் இரு தமிழர்களின் உடலங்களில் சிறிலங்கா படையினரின் துப்பாக்கிக் குண்டுகள் துளைத்து குருதி வடிந்துள்ளது கண்டிக்கப்பட வேண்டியது.

வன்னி பெரு நிலப்பரப்பில் போர்ச் சூழல் காலத்திலும் சரி தற்காலத்திலும் சரி சிறிலங்கா அரச ஊடகங்கள் உண்மைக்குப் புறப்பான செய்திகளை ஒலி, ஒளி பரப்பி இருட்டடிப்புச் செய்த காலகட்டத்தில் வன்னி மக்களுக்கு உண்மைத் தகவல்களை வழங்கி வரும் ஈழநாதம் பத்திரிகையின் விற்பனையாளர் மீது சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகம் மிலேச் சத்தனமானது. தமது இனவாத வெறித்தனத்தை வெளிப்படுத்திய ஒரு காட்டுமிராண்டித் தனமான செயலாகும். ஜனாதிபதி படைத்துறை அமைச்சைப் பொறுப்பேற்றிருக்கும் இக் கால சூழ் நிலையில் இச்சம்பவத்தைப் படைத் தரப்பு மேற் கொண்டுள்ளதால் இதன் முழுப் பொறுப்பையும், ஜனாதிபதியே ஏற்க வேண்டும், அதே சமயம் இச்சம்பவம் தொடர்பாக சிறிலங்கர்ப் படைத்தரப்பினர் மீது பாரபட்சமற்ற விசாரணைகள் நடத்தப்பட்டு தண்டனை வழங்கப்பட வேண்டும்.

மாலை 5.30மணியளவில் சன நடமாட்டம் மிக்க பஸ்தரிப்பு நிலையத்தில் இச்சம்பவம் நடைபெற்றுள்ளது. படைத்தரப்பு அனாவசியமாகத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளதைப் பொதுமக்கள் கண்ணாரக் கண்டுள்ளனர்.

எனினும் முழுப் பூசணிக் காயை சோற்றுக்குள் மறைப்பது போல துப்பாக்கிப் பிரயோகத்தில் காயமடைந்த நபரிடம் கைக்குண்டு இருந்ததாகக் கூற முனைவது சோடிக்கப்பட்ட பொய்.

புரிந்துணர்வுடன் படிக்கை கைச் சாத்திடப்பட்ட பின்னர் கூட யாழ்குடா நாட்டில் படையினர் பொதுமக்கள் மீது நம்பிக்கையை ஏற்படுத்தக் கூடிய எந்த ஒரு செயற்பாடுகளிலும் ஈடுபடவில்லை.

மாறாகப் புரிந்துணர்வுடன் படிக்கைக்கு மாறாக முரணான நடவடிக்கைகளில் ஈடுபட்டமை நோக்கத்தக்க விடயம். இவ்வாறான சூழலில் தற்போது படைத் தரப்பின் துப்பாக்கிச் சூடு இன்னும் பொதுமக்களிடையே அச்சத்தையும், படைத்தரப்பு மீது ஆத்திரத்தையும் ஏற்படுத்தியுள்ளது. எனவே இவ்வாறான சம்பவங்களுக்கு ஜனாதிபதியே பொறுப்பேற்க வேண்டும்.

# இந்தியாவுக்கு நேசக்கரம் நீட்டிய கலாநிதி அன்ரன் பாலசிங்கம்

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறை ஆலோசகரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் கடந்த மேமாதம் 11ம் திகதி .சுகவீனம் காரணமாக வன்னியிலிருந்து லண்டன் சென்றிருந்தார். இதன் பின்னர் அவர் மௌனம் காத்து வந்ததுடன் வெளிப்படையாக எந்த நிகழ்வு கலந்துரையாடல் களிலும் கலந்து கொள்ளவில்லை. கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்களின் அஞ்ஞாதவாசத்திற்குத் தென்னிலங்கை இனவாத ஊடகங்கள் பல்வேறு கட்டுக்கதைகளை கட்டவிழ்த்து விட்ட நிலையில் இம்மாதம் 6ம்திகதி லண்டன் எக்லெஸ் மண்டபத்தில் மாவீரர் தின நிகழ்வில் உரையாற்றியிருக்கிறார்.

கடந்த வருடங்களில் உரையாற்றியது போல அதே உற்சாகம், தொனியில் கலாநிதி பாலசிங்கம் உரையாற்றியிருப்பது அவர் இனிமேல் புலிகளின் அரசியல் நடவடிக்கைகளில் கலந்து கொள்வார் என்பதைக் கட்டியம் கூறுவதாக அமைந்திருக்கிறது.

லண்டன் மாவீரர் தின உரை வழமைபோல தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் மாவீரர் தின செய்திக்கு வியாக்கியானம் செய்வதுடன் நிற்காது இந்தியாவுக்கும் வேண்டுகோள் விடுப்பதாகவும் அமைகிறது.

இந்தியாவை நட்பு சக்தியாக



நேச சக்தியாக அணுக விரும்புகிறேன் இந்தியாவின் தேசிய நலன்களுக்கோ, கேந்திர நலன்களுக்கோ, பொருளாதார நலன்களுக்கோ, புவியியல் நலன்களுக்கோ துரோகம் செய்ய நாம் தயாராக இல்லை. அதேவேளை மக்களின் உண்மையான பிரதிநிதிகளான புலிகளை ஓரங்கட்டாது அனுசரித்து பழைய வெளியுறவுக் கொள்கையை ஓரங்கட்டிவிட்டு புதிய அணுகுமுறைகளைக் கையாள வேண்டுமென்று கலாநிதி அன்ரன் பாலசிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கை, இந்திய ஒப்பந்தத்தை நிராகரித்து 1987 செப்டெம்பர் மாதம் இந்திய படைகளுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையே ஏற்பட்ட முறுகல் நிலை ராஜிவ் காந்தி கொலையையடுத்து புலிகள் அமைப்பைத் தடைசெய்யுமளவிற்கு தீவிரம் பெற்றது.

இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் இந்திய அரசாங்கம் புலிகளை ஓரங்கட்டிவிட்டு கையாளும் வகையான இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் கீழ் ஒன்றையாட்சி வரையறைக்குள் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை நிராகரிக்கும் அனுகு முறையைக் கையாண்டு வருகிறது.

அத்தோடு இந்தியாவை நிராகரித்த ஜே.வி.பி. உள்ளிட்ட தென்னிலங்கை கட்சிகளோடு நல்லுறவை பேணி வரும் இந்தியா தமிழீழ விடுதலைப் புலிகளோடு விரோதப் போக்கைக் கடைப்பிடித்துவரும் நிலையிலேயே புலிகளின் தத்துவாசிரியரும், அரசியல் ஆலோசகருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.



இலங்கை இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது என்பது இந்தியாவின் நலன்களோடு சம்மந்தப்பட்ட விடயமாகி விட்டது. முன்னர் அண்ணன் தம்பி பிரச்சினையென்று கூறி இந்திய தலையீட்டை நிராகரித்த சிங்கள தேசம் இப்போது பயங்கரவாதப் பிரச்சினையென்று பரப்புரை செய்து இந்தியா அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச சமூகத்திற்கு தடைவிதித்துள்ளது.

இந்தியாவின் கடைக்கண் பார்வை கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் தொல்லை ஏற்படுவது தமிழ் மக்களுக்கு பாத கமாகவே அமையும். இந்த நிலையில் இந்தியாவின் நீண்ட கால நேச சக்திகளான தமிழ் மக்களது வேண்டுகோளை ஏற்று புதிய அணுகுமுறையை ஏற்படுத்த வேண்டு மென்பதே கலாநிதி பாலசிங்கம் அவர்களது மாவீரர் தினச் செய்தியாகும்.

லண்டன்மாவீரர் தின உரையில் கலாநிதி பாலசிங்கம் அவர்கள் ஸ்ரீலங்காவின் தற்போதைய அரசியல் நிலை தொடர்பாகவும், சமாதான பேச்சுவார்த்தையின் எதிர்க்கருத்துப் பற்றியும் தெரியப்படுத்தி இருக்கிறார்.

தேசியத்தலைவர் மாவீரர் தின உரையில் குறிப்பிட்டது போல பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சமாதான பேச்சுவார்த்தையைச் சாட்டாக வைத்து சர்வதேச பாதுகாப்பு வலைப் பின்னலில் சிக்கவைத்திருக்கிறார் சர்வதேச சமூகங்களை எமது பிரச்சினையில் தலையிட வைத்து தீர்வுக்கானவரையறைகளையும் போட முற்பட்டதாலேயே நிலைமை சிக்கலடைந்தன. என்று தெரிவித்த கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தமிழ் மக்களே தமது தலைவிதியை எழுத வேண்டுமென்று சூழுரைத்திருக்கிறார்.

அத்தோடு தற்போதைய யாப்பு பற்றியும் பிரஸ்தாபித்திருக்கிறார். இனப்பிரச்சினைக்கு நீடித்துநிலைக்கக் கூடிய நிரந்தர அரசியல் தீர்வு காணப்படவேண்டுமெனில் புதிய யாப்பு உருவாக்கப்பட வேண்டும். அத்தோடு சிங்களப் பெரும்பான்மை மக்கள் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்தோடு பேச வேண்டும். அந்த அரசுக்கு நிறைவேற்று அதிகாரங்கள் இருக்க வேண்டுமென்றும் தெரிவித்திருக்கிறார். அத்தோடு இடைக்கால நிர்வாகம் ஸ்ரீலங்காவின் தற்போதைய யாப்புக்குப் புறம்பாக இடைக்கால நிர்வாகம் வழங்கப்பட்டாலே போர் நிறுத்த ஒப்பந்தம் நீடிக்கும் நிலை தொடருமென சொல்லாமல் சொல்லியிருக்கிறார்.

அதேவேளை ஸ்ரீலங்காவின் பிரதான கட்சிகள் நிறைவேற்று அதிகாரங்களை துறப்பதற்குத் தயாரில்லை என்று தெரிவிக்கும் அரசியல் ஆலோசகர் இதனை உலக நாடுகளும் அறியத் தொடங்கியிருப்பதாகவும் கூறியிருக்கிறார்.

ஆறுமாத அஞ்ஞாதவாசத்திற்குப் பின்னர் வெளிப்படையாக நிகழ்வில் கலந்த கலாநிதி பாலசிங்கம் தனக்கே உரிய பாணியில் 60நிமிடங்கள் உரையாற்றியிருப்பது அவரது உடல் ஆரோக்கியத்தைப் புலப்படுத்துகிறது. அத்தோடு ஊடகங்களின் வதந்தி புரட்சிக்கு ஆப்பு வைப்பதாகவும் அமைகிறது.

எது எப்படியிருந்தாலும் ஸ்ரீலங்காவின் அரசியல் நிலை சமாதான பேச்சுவார்த்தைகளின் எதிர்காலத்திற்குச் சாதகமாக இல்லை என்பதை அவர் தெளிவாக்கியிருக்கிறார்.

இலங்கையில் மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிப்பதற்கு நிறைவேற்று அதிகாரமும் பாராளுமன்ற சட்டமாக்கத் தத்துவமும் ஒரே கட்சியிடம் இருக்க வேண்டும். ஆனால் இங்கு இரண்டுமே இருதரப்பினரிடம் உள்ளது.

இந்த நிலையில் இரண்டும்

**ஜி. நடேசன்**

ஒருதரப்பிடம் வர யாப்பு மாற்றப்பட வேண்டும். அல்லது இன்றைய ஜனாதிபதியின் பதவிக்காலம் முடிந்து ஜனாதிபதித் தேர்தல் நடைபெற வேண்டும். அல்லது பாராளுமன்றத் தேர்தல் நடந்து பொதுஜன ஐக்கிய முன்னணிப் பாராளுமன்றப் பலத்தை பெறவேண்டும்.

இதில் ஏதாவது ஒன்று நடந்தாலே இரண்டும் ஒரு கட்சியின் வசம் இருக்கும். இதற்குக் காலம் தேவை. எனவே சமாதான பேச்சுவார்த்தைகள் உடனடியாக ஆரம்பமாகும் சாத்தியமில்லை என்பதையே லண்டன் மாவீரர் தின உரை புலப்படுத்துகிறது.

# நெருக்கடிகளை எதிர்நோக்கும் வவுனியா நகர அபிவிருத்தி

வவுனியா நகரின் வளர்ச்சி நீண்ட கால திட்டமிடல் இல்லாமையினால் பல்வேறான நெருக்கடிகளைக் கொண்டதாகவுள்ளது. பெரும் நிலப்பரப்புடைய நகரில் குறுகிய நிலப்பரப்புக்குள் நகர அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் உள்ளன. இதனால் உள்ள சிக்கல்களைப் பிறிதொரு சந்தர்ப்பத்தில் பார்ப்போம். இந்தப் பத்தியினூடாக வவுனியாவில் விபத்துக்கள் நடைபெறாது தடுக்க பொலிஸ் தலைமைக் ·காரியா லயத்தில் நடைபெற்ற கூட்டத்தையும் வவுனியாவில் விபத்துக்களைத் தடுப்பதற்கு மேலும் மேற்கொள்ள வேண்டிய நடமுறைகளையும் பார்ப்போம்.

10.12.2003 அன்று வவுனியா பொலிஸ் தலைமைக் காரியாலயத்தில் சிரேஸ்ர பொலிஸ் அத்தியட்சகர் மிஸ்கின் தலைமையில் நடைபெற்ற கூட்டத்திற்கு அரச பணிமனை, நகரசபை, மின்சாரத் திணைக்களம், தொலை த்ததொடர்பு நிலையம், கல்வித் திணைக்களம, தனியார் சிற்றூர்தி சங்கம், முச்சக்கரவண்டி சங்கம், பல்வேறு தரப்பைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இங்கு நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களில் சில வர்வேற்கத்தக்கன அவசியமாக நடைமுறைக்கு கொண்டுவரப்படவும் வேண்டியன.

1) நகர எல்லைக்குள் இருபது கிலோ மீற்றர் வேகத்தில் வாகனம் செல்லவேண்டுமென்ற அறிவுறுத்தல் செய்யவேண்டும்.

2) நடைபாதை வியாபாரிகளைத் தடுக்க வேண்டும்.

3) முச்சக்கர வண்டிகள் சங்கத்திலும், நகரசபை யிலும் பதிவு செய்ய வேண்டும். முச்சக்கரவண்டி ஓட்டுநர்கள் அனுமதிப்பத்திரம். இல்லாது ஓடுவதை சங்கமும் கண்காணித்துத் தடுக்க வேண்டும்.

இந்தத் தீர்மானங்கள் உண்மையில் நகர வளர்ச்சிக்கும், விபத்துக்களைத் தடுப்பதற்கும் உடனடியாக நடைமுறைக்கு வரவேண்டியது காலத் தின் தேவையாகும்.



ஆனால் இவை போன்று இன்னும் பல விடயங்களையும் கவனத்தில் எடுத்து நடைமுறைப்படுத்துவது அவசியமானதாக தெரிகிறது. அதனையும் இங்கு விபரமாகப் பார்ப்போம்.

1) நகரின் பல வீதிகள் புனரமைக்கப்படாமலுள்ளன. குறிப்பாக ஹொறவப்பொத்தான வீதி புனரமைப்பு செய்வதற்குப் பள்ளிவாசல் பக்கமாக பதினான்கு கடைகள் ஹொரவப்பொத்தானை வீதியை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ளது. இந்த வீதி புனரமைக்கப்பட வேண்டுமென்றால் கடைகள் இடிபடும். இதனை அரசியல் தலையீட்டின் மூலம் தடுக்கப்பட்டுள்ளதை அறியமுடிகின்றது. இதனைப் புனரமைப்பதன் மூலம் விபத்துக்களைத் தடுக்க முடியும்.

2) நகரின் பல வீதிகள் திருத்தவேலைகள் செய்யப்படாமல் உள்ளன. சில வீதிகள் திருத்த வேலைகள் செய்யப்பட்டு குறுகிய காலத்துக்குள்ளேயே பள்ளமாக சிதைவடை ந்திருப்பதைக் காணமுடிகிறது. குறிப்பாக நகரின் மத்தியில் மணிக்கூட்டுக் கோபுரம் உள்ள இடத்தில் மேடு பள்ளமாக வீதி காணப்படுகின்றது. மழைக் காலத்தில் நீர் வடிந்தோடாமல் காணப்படுகின்றது. இது போன்றவற்றைக் கவனத்திலெடுத்து திருத்துவதன் மூலம் விபத்துக்களைத் தடுக்கலாம்.



3) கால் நடைகள் பட்டிகளில் அடைவது போல நகரமையத்திற்கு இருளத் தொடங்கியதும் வந்து விடுகின்றன. பகலிலும் நகர இரைச்சலுக்குப் பழக்கப்பட்டு அசையாமல் நின்று விடுகின்றன. கட்டாக்காலிகளாக நகரில் திரியும் கால் நடைகளைப் பிடிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதன் மூலம் விபத்துக்களைத் தடுக்கலாம்.



4) வீதிகளைத் தனியார் வாகனங்களின் தரிப்பிடமாக வைத்திராமல் மாற்று வழிகளை ஏற்படுத்துவதன் மூலம் விபத்துக்களைத் தடுக்க முடியும். (முதலாம் குறுக்குத்தெரு, இரண்டாம் குறுக்குத் தெரு என்பன முழுமையாக வாகனத் தரிப்பிடமாக மாறி விட்டன. சிந்தாமணிப்பிள்ளையார் கோவில் வீதிவாகனங்களில் மணல் வியாபாரம் செய்யப்படும் இடமாக மாறிவிட்டது.

புகையிரத நிலைய வீதியின் மணிக்கூட்டுக் கோபுரம் உள்ள பக்கமாக சிற்றூர்தி தரிப்பிடமாக மாறி வருகிறது. குட்செட் வீதி கனரக எண்ணைத் தாங்கிகள் தரித்து நின்று போக்குவரத்திற்கு இடையூறாகவுள்ளன) இவற்றையும் கவனத்தில் எடுத்து திட்டமிட்ட வகையில் நகரில் இது தொடர்பான பணிகளை முன்னெடுப்பதன் மூலம் விபத்துக்களைத் தடுக்கலாம்.

போக்குவரத்துக் கண்காணிப்புப் பொலிசார் ஆவணங்களைச் சோதனை செய்வது தொடக்கம் ஏனைய போக்குவ்ரத்து விடயங்களைக் கண்காணிப்பது தேவையானதே. இதனைக் கூடிய வரை இவர்கள் செய்தும் வருகின்றனர். அதில் எந்த மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை. ஆனால் ஒரு அதிகார தோரணையில் மிரட்டுவது போல பேசிக் கொண்டும், கடுமையான முக பாவனையை வைத்திருப்பதும், வாகனங்களை நிறுத்திவிட்டு இறங்கி தமக்கருகே வருமாறு அழைப்பதும், எல்லா ஆவண ங்களையும் வைத்திருந்தாலும் ஏதாவது ஒரு குறை காண முற்படுவதும், தெரிந்த முகம் பார்த்து சேவையை புறம் தள்ளுவதும் கடமையின் ஆரோக்கியத்தை வெளிப்படுத்துவதாக இல்லை. இப்படியான செயலைப் போக்குவரத்து கண்காணிப்புப் பொலிசார் செய்வதால் காக்கி உடையைக் கண்டவுடன்.... பலரிடம் கருத்துக் கேட்ட போது வெறுப்புணர்வுதான் 'வருகின்றது எனக் கூறினார்கள். சட்டத்திற்கு

**- கனகரவி -**

உட்பட்டதாக நடவடிக்கை எடுப்பதற்கு மிரட்டல் தேவையில்லை போலவே எனக்குத் தென்படுகின்றது. இதனை வவுனியா மாவட்டத்தில். சட்டத்தை ஒழுங்கு முறையாகக் கையாளும் நீதியாளர் எம். இளஞ்செழியனைப் பார்த்தாவது திருந்துங்கள். அவர் மிரட்டவில்லை. சட்டத்தை ஒழுங்கு முறையாகக் கடைப்பிடியுங்கள் என்றே கேட்கின்றார்.

தொடர்ச்சி 19ம் பக்கம்...

## போடியார் [illegible]

காலம் கடத்த காய்
நகர்த்தும் ஜனாதிபதியும்,
பிரதமரும்

-செய்தி-

அவங்க காய்
நகர்த்தினாலும் சரி, நாய்
நகர்த்தினாலும்
சரி பேய் நகர்த்தினாலும்
சரி நாங்க விழிப்பா
இருந்தாசரிதான்...



# திருமலை வன்முறைச் சம்பவங்களின் பின்னணியில் வெளிநாட்டு சதி

## ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்ட அனைவரும் முஸ்லீம்களே.

இரா. துரைரத்தினம்

தமிழீழத்தின் தலைநகரான திருகோணமலையை ஆக்கிரமிக்க வேண்டும் என்பதில் சிங்கள தேசியவாதிகள் மட்டுமல்ல வெளிநாட்டு சக்திகளும் கங்கணம் கட்டிச் செயற்படுகின்றன.

திருகோணமலையின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் என சர்வதேச மட்டத்தில் காட்ட வேண்டிய தேவை முஸ்லிம், முஸ்லிம்காங்கிரஸ் கட்சிக்கு ஏன் திடீரென ஏற்பட்டது? அதுவும் இந்தியப் பயணத்தை அக்கட்சியின் தலைவர் மேற்கொண்டிருந்த வேளையில் திருகோணமலைக்கு ஆபத்து அது அண்டைநாடான இந்தியாவுக்கும் நல்லதல்ல எனக் கூறியிருக்கிறார்.

சீனன்குடா, உள்ளிட்ட திருகோணமலையின் துறைமுகப்பகுதிக்கு விடுதலைப்புலிகளால் ஆபத்து, விடுதலைப்புலிகளை திருகோணமலை மாவட்டத்திலிருந்து முற்றாக வெளியேற்ற வேண்டும் என்றும் அமைச்சர் ஹக்கீம் இந்தியாவில் வைத்து கூறியிருக்கிறார். குரங்குபாஞ்சான் முகாம் முஸ்லிம்களுக்குச் சொந்தமான பிரதேசம். அங்கிருந்து வெளியேற வேண்டும் என்று முன்னர் அமைச்சர் ஹக்கீம் கூறிவந்தார். சில மாதங்களுக்கு முதல் முன்னாள் வெளிவிவகார அமைச்சரும் ஜனாதிபதியின் ஆலோசகருமான கதிர்காமரும் இந்தியாவுக்குச் சென்று இதே காவடியைத் தூக்கியிருந்தார்.

திருகோணமலை மாவட்டத்தில் கிண்ணியா, மூதூர், பிரதேசங்களில் கடந்த சில வாரங்களில் தொடர்ச்சியாக நடைபெற்றுவரும் சம்பவங்களையும், அங்கு ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்டவர்களையும் பார்க்கும் போது திருகோணமலை சம்பவங்களுடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆகியவற்றின் ஆதரவுடன் இயங்கும் முஸ்லிம் ஆயுதக்குழுவும், ஜே.வி.பி, மற்றும் சிஹல உறுமய ஆகியவற்றுக்கு நெருங்கிய தொடர்பு இருப்பது தெரியவந்திருக்கிறது.

திருகோணமலையில் இதுவரை ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்டவர்கள் முஸ்லீம்களே. ஆயுதங்களை எடுத்துச்சென்றவர்கள் ஏதோஒரு வன்முறைச் சம்பவங்களைப் புரிவதற்காகவே அதை எடுத்துச்சென்றார்கள் என்பது எவரும் இலகுவில் தெரிந்து கொள்ளக் கூடிய விடயம். இந்த வன்முறையாளர்களைச் சரியாக விசாரித்தால் பல உண்மைகள் வெளிவந்திருக்கும். துரதிஷ்டவசமாக இலங்கையில் உள்ள பொலிஸ் படை அரசியல்வாதிகளின் அழுத்தத்திற்கு கட்டுப்பட்டு நடப்பவர்களாக இருப்பதால் அந்த உண்மைகள் வெளிவருவதில்லை. உண்மைகள் வெளிவருவதை முஸ்லிம் அரசியல்வாதிகள் தடுத்துவிட்டார்கள். உண்மைகள் வெளிவருகின்ற போதுதான் அதன் சூத்திரதாரிகள் இனங்காணப்பட்டு வன்முறைகள் தடுக்கப்படும்.

திருகோணமலை சம்பவங்களுக்கு இந்த மூன்றாம் சக்தியே காரணம் என ஸ்ரீலங்கா பொலிஸாரும், விடுதலைப்புலிகளும் தெரிவித்



திருந்தார்கள். இதை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தலைவர் மறுத்ததுடன் அது கனவுலக சஞ்சாரக்கதை எனக் கூறியிருந்தார். புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர் திருகோணமல்லயிலேயே அதிக வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன. அங்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என காட்டுவதற்காக வெளிநாட்டுச் சக்தி ஒன்றின் துணையுடன் இச்சம்பவங்கள் நடைபெற்றுவருவதாகக் கூறப்படும் தகவல்களில் உண்மையில்லை என நிராகரித்து விடமுடியாது. தங்கள் நலனுக்காக எதையும் செய்யக்கூடிய இந்த வெளிநாட்டு சக்திகள் திருகோணமலைப் பிரதேசத்தில் வன்முறைச் சக்திகளை பயன்படுத்துவது அவர்களுக்கு கஸ்ரமான காரியமல்ல.

கிண்ணியா மூதூர் பிரதேசத்தில் உசமா குறூப் என்ற பெயரில் ஹக்கீம் என்பவரின் தலைமையில் ஆயுதக்குழு ஒன்று இயங்கிவருகிறது. பல வன்முறைச்சம்பவங்களில் இவர்கள் ஈடுபட்டு வருகின்ற போதிலும் இவர்களை ஏன் ஸ்ரீலங்கா பொலிஸார் கைது செய்யவில்லை? ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளர் ஹசன் மௌலவி என்பவரின் தலைமையிலும் ஒரு ஆயுதக்குழு இயங்கிவருகிறது. இவர்களே அண்மையில் திருகோணமலையில் உள்ள ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளைச் சேதமாக்கினர்.

கடந்த முதலாம் திகதி கிண்ணியாவிலிருந்து திருகோணமலைக்கு முச்சக்கர வண்டியில் வந்த மூன்று முஸ்லிம்களை பொலிஸார் சோதனையிட்ட போது அவர்களிடம் கிரனைட் குண்டுகள் 6, வாள் ஒன்று, மற்றும் வெடிக் கவைக்கும் பொருட்கள் என்பன அவர்களிட மிருந்து கைப்பற்றப்பட்டன.

திருகோணமலை மட்கோ சந்தியில் வைத்து கைது செய்யப்பட்ட இவர்கள் வன்முறையில் ஈடுபடுவதற்காகவே இந்த ஆயுதங்களைக் கொண்டுவந்தார்கள் என்பது எல்லோருக்கும் இலகுவாகப் புரியக்கூடிய விடயம். இவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி விளக்கமறியலில் வைத்ததோடு பொலிஸார் தங்கள் கடமையை முடித்துக் கொண்டனர். இவர்கள் கைது செய்யப்பட்ட உடன் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தலையிட்டு இவர்களை விசாரிக்க வேண்டாம் என்றும், விடுதலை செய்யுமாறும் பொலிஸாருக்கு அழுத்தம் கொடுத்ததாகவும் தெரியவருகிறது. இவர்கள் வன்முறைகளைப்புரிவதற்காக ஆயுதங்களைக் கொண்டு வரவில்லை என்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

இவர்கள் பயங்கரஆயுதங்களை, கைக்குண்டுகளை வைத்திருந்தது வன்முறைகளைப்புரிவதற்கு அல்ல என்றால் விளையாடுவதற்காகவா இந்தக் குண்டுகளை வைத்திருந்தார்கள்? இவர்கள் தாக்குதல் நடத்த இருந்த இலக்கு எது? யாரின் பின்னணியில் இயங்குகிறார்கள்? ஏற்கனவே எத்தகைய வன்முறைகளில் ஈடுபட்டார்கள்? எங்கிருந்து இந்த ஆயுதங்கள் கிடைக்கின்றன? போன்ற விபரங்களை பொலிஸார் எடுத்திருந்தால் பல உண்மைகள் வெளிவந்திருக்கும். வன்முறைகளின் சூத்திரதாரிகள் யார் என்பது தெரியவந்திருக்கும். ஆனால் இவர்களை விசாரிப்பதற்கோ அல்லது இந்த உண்மைகளை வெளிப்படுத்துவதற்கோ பொலிஸாரால் முடியாமல் போய்விட்டது. இதற்குக் காரணம் முஸ்லிம் அரசியல்வாதிகள். எனவேதான் இந்த உண்மைகள் வெளிவராமல் தடுத்த முஸ்லீம் அரசியல்வாதிகளுக்கு திருமலை வன்முறை சம்பவங்களில் தொடர்பு இருக்கிறது என் ஆணித்தனமாக நான் கூறுகின்றேன். கடந்த நான்காம் திகதி மூதூர் பள்ளிவாயலுக்கு அருகில் அப்துல் ராஜிக் என்பவர் குண்டுவெடிப்பில் பலியானார். இவர் இறந்த உடன் குண்டுவீச்சில் பலியானதாக கூறினார்கள். ஆனால் இவர் தனது இடுப்பில் இரு குண்டுகளைக் கொண்டுவந்த போது அதில் ஒன்று வெடித்ததால் இறந்தாகவும், குண்டுவீச்சில் அல்ல குண்டை வயிற்றுப்பகுதியில் மறைத்துக்கொண்டு வந்ததால் அது வெடித்ததால்தான் வயிற்றுப்பகுதி சிதைந்திருப்பதாகவும் பிரேத பரிசோதனையில் தெரியவந்திருக்கிறது. மூதூர் பள்ளிவாயல் பிரதேசத்திற்குள் எந்த ஒரு தமிழரும் செல்ல



முடியாது. அவ்வாறான ஒரு பிரதேசத்திற்குள் தமிழ் தரப்பு சென்று குண்டை வீசிவிட்டுச் செல்ல முடியுமா? இறந்தவர் உசாமா என்ற பெயரில் இயங்கும் முஸ்லிம் பயங்கரவாத இயக்கத்தின் தலைவர் ஹக்கீம் என்பவரின் சகோதரர். இவரிடம் ஆயுதங்கள் இருப்பதாகவும் இவர் பல வன்முறைச்சம்பங்களில் நேரடியாக தொடர்பு கொண்டவர் என்றும் அன்றைய தினமும் வன்முறை ஒன்றில் ஈடுபடுவதற்காகச் சென்ற வேளையிலேயே குண்டுவெடித்து பலியானதாகவும் தெரியவந்திருக்கிறது.

கிண்ணியாவில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இரு முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர். துப்பாக்கி பிரயோகத்தைச் செய்தவர்கள் முஸ்லிம்கள் நெருக்கமாக வாழும் பகுதிக்குள்ளேயே சென்று தலைமறைவானார்கள். இவர்கள் கைது செய்யப்படவில்லை. கடந்த வாரம் மூதூர் சோனகத் தெருவில் தமிழர்களும் சிங்களவர்களும் உரையாடிக்கொண்டிருந்த போது கைக்குண்டு வீசப்பட்டது. இது முஸ்லிம் குழு ஒன்றினால்தான் செய்யப்பட்டது.

சிங்கள லொறிச்சாரதி ஒருவரும் தாக்கப்பட்டிருக்கிறார். லொறியை வழிமறித்த சிலர் லொறிச்சாரதியிடம் நீ சிங்களவனா முஸ்லிமா என விசாரித்துள்ளனர். சிங்களவர் எனக் கூறியதும் அவர் தாக்கப்பட்டுள்ளார். தாக்கியவர்கள் சிங்களத்தில் சரளமாக உரையாடியதாகவும், அவர்கள் முஸ்லிம்கள் என்றே தான் நம்புவதாகவும் அச்சாரதி தெரிவித்திருக்கிறார்.

கடந்த சில தினங்களுக்கு முதல் திருகோணமலை ஜின்னா நகரில் இராணுவத்தினரை நோக்கி கைக்குண்டு வீசப்பட்டதுடன் துப்பாக்கிப்பிரயோகமும் செய்யப்பட்டது. இதில் இராணுவ சிப்பாய் ஒருவர் காயமடைந்தார். இராணுவத்தினரை தமிழருக்கு எதிராகவும் முக்கியமாக விடுதலைப்புலிகளுக்கு எதிராக திருப்பி விடும் சதி நோக்கத்திலேயே இச்சம்பவம் நடைபெற்றுள்ளது. கைக்குண்டை வீசி துப்பாக்கிப் பிரயோகத்தைச் செய்தவர்கள் சாரன் அணிந்திருந்ததாகவும், அவர்கள் விடுதலைப்புலிகள் அல்ல என்பதை தாங்கள் உறுதியாகக் கூறமுடியும் என்றும் இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த முதலாம் திகதி நள்ளிரவு வேளையில் அக்கரைப்பற்றில் குண்டு வெடிப்பில் இரு முஸ்லிம் இளைஞர்கள் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். அக்கரைப்பற்றைச் சேர்ந்த எம்.எம்.சரியூன் (21வயது), நாகூர் தம்பி (40வயது) ஆகிய இருவருமே காயமடைந்திருக்கிறார்கள். அக்கரைப்பற்றில் உள்ள மறைவிடம் ஒன்றில் குண்டுகளை தயாரித்துக்கொண்டிருந்த வேளையிலேயே இவர்கள் காயமடைந்திருக்கிறார்கள். இவர்களைப் பொலிஸார் விசாரிக்க முற்பட்ட போது அமைச்சர் அதாவுல்லா தலையிட்டுத் தடுத்துவிட்டார். அவர்களை விசாரித்திருந்தால் பல உண்மைகள் வெளிவந்திருக்கும். விடுதலைப்புலிகளைத் தொடர்ச்சியாக குற்றச் சாட்டிவரும் அதாவுல்லா ஏன் இந்த விசாரணைகளைத் தடுத்தார்? அக்கரைப்பற்றில் அதாவுல்லா கிண்ணியாவில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளர் ஹசன் மௌலவி தலைமையில் இயங்கும் ஆயுதக்குழுவும், திருகோணமலையில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் தௌபிக் ஆகியோர் தலைமையில் இயங்கும் ஆயுதக்குழுக்களுடன் இப்போது ஜே.வி.பி, சிஹல உறுமய ஆகியனவும் சேர்ந்து இந்த வன்முறைகளைப் புரிந்து வருகின்றன.

திருகோணமலையில் ஜே.வி.பியின் ஆதிக்கம் அதிகரித்து வருகிறது. திட்டமிட்ட குடியேற்றத்தின் மூலம் திருகோணமலையில் சிங்களவர்களின் தொகை அதிகரித்து வருகிறது. தமிழ் பிரதேசத்தை ஆக்கிரமிக்க வேண்டும் என்ற எண்ணம் இனவாத எண்ணம் கொண்ட சிங்களவர்களுக்கே ஏற்படும். இனவாத நோக்கம் கொண்டு திருகோணமலையில் குடியேறியிருக்கும் சிங்களவர்கள் ஜே.வி.பியின் பக்கம் நிற்பது இயல்பான ஒன்று. கடந்த மாவீரர் தினத்தின் போது திருகோணமலை நகரில் சிவப்பு, மஞ்சள் நிறத்திலான கொடிகளை தமிழ் மக்கள் கட்டியிருந்தார்கள். அங்கு வந்த ஜே.வி.பியினரும் முஸ்லிம்கள் சிலரும் அக்கொடிகளை அறுத்து எறிந்து விட்டு ஸ்ரீலங்காவின் தேசியக்கொடியைக் கட்டிவிட்டுச் சென்றார்கள். இது எங்கள் நாடு. உங்கள் கொடியைக் கட்டமுடியாது என அவர்கள் அறுத்து எறிந்ததாக தமிழ் மக்கள் கூறுகின்றனர். குரங்குபாஞ்சான் முகாமுக்குச் செல்லப்போவதாக சிஹல உறுமய அப்பிரதேசத்தை நோக்கிச் சென்ற போது சூரன்கல் பகுதியில் உள்ள முஸ்லிம்கள் சிஹல உறுமயவுக்கு ஆதரவு அளித்ததும், அதன் பின்னர் கடந்த வாரம் சூரன்கல் பிரதேசத்திற்கு சிஹல உறுமய சென்று முஸ்லிம்களைச் சந்தித்ததும் தமிழ் முஸ்லிம் ஒற்றுமையை முற்றாகச் சீர்குலைப்பதற்காகவே ஆகும். இது வெறும் சிஹல உறுமயவினதும், முஸ்லிம்களினதும் எண்ணத்தில் உதித்த வேலைகள் அல்ல. வெளிநாட்டுச் சக்தி ஒன்றின் தூண்டுதலிலேயே இவர்கள் இதனைச் செய்துவருகின்றனர். சமாதான முயற்சிகளைக் குழப்பும் நோக்கில் செயற்படும் வெளிநாட்டுச் சக்திகள் உள்ளூர் அரசியல்வாதிகளை தங்கள் கைகளுக்குள் போட்டுக் கொண்டனர். அந்த வெளிநாட்டு சக்திகளின் கைகளில் சிஹல உறுமய, ஜே.வி.பி என்ற வரிசையில் இப்போது முஸ்லிம் அரசியல்வாதிகளும் விழுந்துள்ளனர்.

# சாண் ஏற முழம் சறுக்கிய சமாதானப் பேச்சுவார்த்தை!

**மீண்டும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதானால் சகல அதிகாரங்களும் கொண்ட அரசாங்கம் ஆட்சி நடாத்த வேண்டும். அவ்வாறு அதிகாரப் பலமிழந்த அரசுடன் பேச்சுக்கள் நடாத்தப்படுவதால் எவ்வித பிரயோசனமும் ஏற்படப் போவதில்லை. இதுவே விடுதலைப்புலிகளின் நிலைப்பாடுமாகும். தற்போது சிறிலங் கா நாடாளுமன்ற த்தில் வரவு செலவுத் திட்ட கூட்ட த் தொடர் நடைபெற்று வருவதால் அவை நிறைவுற்றதும் நாடாளுமன்றம் கலைக்கப்படலாம்.**

ஜனாதிபதிக்கும் பிரதம ருக்குமிடையில் கடந்த புதன் கிழமை நடைபெற்ற நேரடிச் சந்திப்பு எவ்வித இணக்கப்பாடுமின்றி முடிவுற்றது.

அடுத்தகட்டப் பேச்சுக்களை நடாத்துவது பற்றியோ அரசு க்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பது பற்றியோ இரு தலைவர்களாலும் ஒரு இணக்கப் பாட்டிற்கு வர முடியவில்லை.

ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுக்கள் குறித்து அதிருப்தி தெரிவித்து வந்த ஜனாதிபதியும் பொதுஜனஐக்கிய முன்னணியும் இறுதியாக அரசிடமிருந்து படைத் துறை, உள்துறை, ஊடகத்துறை ஆகிய மூன்று அமைச்சுக்களையும் தன்வயப்படுத்திக் கொண்டது.

இதன் பின்னர் ஜனாதிபதி க்கும், பிரதமருக்குமிடையில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடிகள் ஒருபுற மிருக்க சர்வதேச சமூகத்தின் அழுத்தம் காரணமாக ஜனாதிபதி தன்னையும் ஒரு சமாதான விரும்பியாக வெளிக்காட்டத் தொடங்கினார்.

விடுதலைப் புலிக ளுடனான பேச்சுவார்த்தைகளை தான்



முன்னெடுத்துச் செல்லப் போவதாகவும் ஊடகங்களுக்கு அடிக் கடி அறிக்கை விட்டுக் கொண்டி ருந்தார்.

எனினும் மக்கள் விடுதலை முன்னணிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்குமிடையிலான கூட்டு உடன்படிக்கை கைச்சாத்தி டுவதில் தற்போது இணக்கம் எட்டப்பட்டதை அடுத்து சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பது தொடர்பாக ஜனாதிபதி கொண்டிருந்த நிலைப்பாடு மாறி மீண்டும் இறுக்கமான நிலையில் உள்ளதாக அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுடன் ஜனாதிபதி நடாத்திய பேச்சுக்களில் பிரதிப் படைத்துறை அமைச்சினை வழங்கு வதற்கு இணக்கம் தெரிவித் திருப்பதுடன் சமாதானப் பேச்சுக்களை விடுதலைப்புலிகள் ஆரம்பிக்கும் பட்சத்தில் புரிந்துணர்வு உடன்படிக்கையைத் தொடர்ந்து கடைப்பிடிப்பது சமாதானப் பேச்சுக்களைத் தொட்ர்வது போன்ற விடயங்களுக்கு படைத்துறை சார்ந்த அதிகாரங்களைப் பிரதமரிடம் கையளிப்பதற்கும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கியிருந்தார்.

ஆனால் தற்போது நிலமை தலைகீழாய் மாறிவிட்டது. படைத்துறை அமைச்சின் அதிகார ங்களை கடுகளவேனும் வழங்கு வதற்கு ஜனாதிபதி விரும்பவில்லை.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டு உடன்படிக்கை கைச்சாத்திட ஆயத்தமாக இருக்கும் இனவாதக் கட்சியான ஜே.வி.பி.மீண் டும்

**வேணிதன்**

பொதுத் தேர்தல் நடைபெற வேண்டும் என்பதிலே ஆர்வமாய் இருக்கிறது. இந் நிலையில் படைத்துறை அமைச்சை பிரதமரிடம் ஒப்படைக்கும் திட்டத்தை நிராகரித்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பி.க்குமிடையிலான கூட்டு முன்னணி அமைக்கும் விடயம் கடந்த பல மாதங்களாக இழுபறி நிலையில் காணப்பட்டதும் உண்மை.

பொதுஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் இடது சாரிக்கட்சிகள் ஜே.வி.பி யுடன் கூட்டுச்சேர்ந்து தேர்த்லில் போட்டியிட விரும்பவில்லை தற்போது கம்யூனிஸ்ட் கட்சி தவிர ஏனைய கட்சிகளே இணக்கம் தெரிவித்துள்ளன.

மற்றைய விடயங்கள் இருதரப்பினரும் தேர்தலில் போட்டியிட முன்பு பதவிகளைப் பகிர்ந்து கொள்வதிலும், தேர்தலில் வெற்றியீட்டி ஆட்சி அமைக்கும் பட்சத்தில் அமைச்சுப் பொறுப்புக்களைப் பகிர்ந்து கொள்வதிலும் இணக்கம் காணப்படாமலிருந்தது. தற்போது அமையப் போகும் ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணி எனும் புதிய கட்சியின் பிரதம அமைப்பாளர் பதவியை ஜே.வி.பி க்கு வழங்குவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளதுடன் இதன் தலைவியாக ஜனாதிபதியே இருப்பதுடன் பொதுச் செயலாளர், பொருளாளர் பதவிகளும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு வழங்குவதற்கும் தீர்மானிக் கப்பட்டுள்ளது.

இரு வாரங்களுக்குள் உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்குத் தயாரான நிலையில் சமாதானப் பேச்சுவார்த்தையை மீள ஆரம்பி ப்பதற்கு அரசுக்கு விட்டுக்கொ டுப்புக்களை மேற்கொள்வதிலிருந்து ஜனாதிபதி சந்திரிகா கடுமையாகப் பின்வாங்கியுள்ளதாக அரசியல் நோக்கர்கள் தெரிவிக்கின்றனர்.

மாவீரர் தின உரை யில் தேசியத் தலைவர் சமாதானப் பேச்சுக்களைத் தொடர முடியும் என தனது நம்பிக்கையை மிகத் தெளிவாக விளக்கியிருந்தார். கடந்த 9ம்திகதி தமிழ்க் கூட்டமைப்பினரை வன்னிக்கு அழைத்து விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொண்டிருந்தார்.இதில் சமாதானத்தில் தாம் கொண்டிருக்க வேண்டிய அதீத அக்கறையை , நிலைப்பாட்டை தெளிவாக விளக்கி யிருந்தார்.

இவ்வாறான நிலை யிலும் கடுகளவேனும் விட்டுக் கொடுக்காத ஒரு கடும் போக்குத் தனத்தை ஜனாதிபதி மேற்கொண்டி ருப்பதுடன் தேர்தலுக்கு முகம் கொடுக்கக் கூடிய வகையில் தமது கட்சியினரை பலப்படுத்தும் நடவடிக் கையில் ஈடுபட்டு வருவதாகவும் செய்திகள் கசிந்துள்ளன.

ஒட்டு மொத்தமாக பார்க்கப் போனால் விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்கள் மிகத் தொலை தூரத்திற்கு நகர்ந்து கொண்டிருக்கின்றது என்பது உண்மை.

மீண்டும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதானால் சகல அதிகாரங்களும் கொண்ட அரசாங்கம் ஆட்சி நடாத்த வேண்டும். அவ்வாறு அதிகாரப் பலமிழந்த அரசுடன் பேச்சுக்கள் நடாத்தப்படுவதால் எவ்வித பிரயோசனமும் ஏற்படப் போவதி ல்லை. இதுவே விடுதலைப்புலிக ளின் நிலைப்பாடுமாகும். தற்போது சிறிலங்கா நாடாளுமன்றத்தில் வரவு செலவுத் திட்டக் கூட்டத் தொடர்



நடைபெற்று வருவதால் அவை நிறைவுற்றதும் நாடாளு மன்றம் கலைக்கப்படலாம்.

இவை ஒரு புறமிரு க்க யாழ் குடாநாட்டில் ஈழநாதம் பத்திரிகை விற்பனையில் ஈடுபட்டி ருந்த ஒருவரும், தனியார் பஸ் நடத்துனர் ஒருவருமாக இருவர் சிறிலங்கா படைத் தரப்பினரின் துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்துள்ளனர்.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க படைத்துறை அமைச்சைப் பொறுப் பேற்ற பின்னர் தமிழ் மக்களின் இரத்தக் கறைபடிய வைத்த சம்பவம் இதுவாகும்.

யாழ் குடா நாட்டு மக்களிடையே பீதியையும் படையினர் மீது ஆத்திரத்தையும் ஏற்படுத்தும் வகையில் நடந்துள்ள சம்பவத்திற்கு ஜனாதிபதியே முழுப் பொறுப்பேற்க வேண்டுமென்பது யாழ்மக்களின் ஒட்டுமொத்த கருத்தாகும்.

இத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தவறுதலாக நடந்த சம்பவம் என்றோ அல்லது தாம் செய்யவில்லை என்றோ படைத் தரப்பு எந்தச் சாட்டும் சொல்லி தப்பிக்க முடியாத நிலையில் ஜனாதிபதி மீது தமிழ் மக்கள் கொண்டிருக்கும் அவ நம்பிக்கையை வலிமைப்படுத்து வதாக அமைந்துள்ளது இச்சம்பவம் என்பது குறிப்பிடத்தக்கது.

## சொன்னாலும் குற்றம்



**மீன்பாடும தேனாட்டில் காப்புக்கு உறுதி கொடுக்கும் கூட்டமான உறவுள்ள ஒரு கந்தோருக்குப் பொறுப்பான பிந்திய ஆள் ஒருவர் அங்கு கடமைபுரியும் சகல ஊழியர்களுடனும். ''சள்புழ்''. என்று நாய் போல் குரைப்பதால் அங்கு கடமைபுரியும் ஊழியர்கள் அச்சத்துடன் இருக்கவேண்டிய நிலையுள்ளதாம்.**

**அங்கு கடமைபுரியும் இரண்டு பெண்மணிகளுடன் மட்டும் கண்மணிகள் போல் கலகலப்பாய் பழகும் இவர் ஏன் மற்றப் பெண்களைக் கண்டால் பிடிப்பில்லாமல் இருக்கிறார்.**

**ஊழியர் யாரும் ஏதும் கேட்டால் வேலையை நிற்பாட்டு வதாகவும் எச்சரிக்கின்றாராம். இவ்வாறானவர் ஏற்கனவே எலும்புத் துண்டுக்காக குரைக்கிற ஒரு இயக்கத்தில இருந்தவராம்.**

**அந்த ஆணவத்தால் தான் இந்த மனிசன் இப்படி நடப்பதாகவும் சிலர் கூறுகின்றனர்.**

**இங்குள்ளவர்கள் எல்லாம் மடையர்கள் என்று மட்டம் தட்டும் இந்த கெட்டிக்காரரின் கொட்டத்தை அடக்க அங்கு கடமை புரிபர்கள முயற்சியில் ஈடுபட்டிருப்பதிலும் தப்பு இல்லைத் தானே.**

# இளைஞர் வாழ்வைச் சூறையாடும் தற்கொலை

இன்றைய நமது இலங்கையானது உலகளாவிய மட்டத்திலே ஒரு சாதனையினை நிகழ்த்தி அச் சாதனைய்யிலே முதலாம் இடத்தினையும் பெற்றுள்ளது. அது என்ன தெரியுமா? தற்கொலை. இன்று தற்கொலை என்பது இலங்கையில் காணப்படும் ஒரு பாரிய பிரச்சினைகளில் ஒன்றாகவும், சமூகப் பிரச்சினையாகவும் தீர்வு காணப்படாத பிரச்சினையாகவும் எமது சமூகத்தில் இடம் பிடித்துள்ளது. அத்தோடு தற்கொலை என்பது ஒருவர் மரணம் ஏற்படும் எனத் தெரிந்தும் அதனைச் செய்ய முற்படுதல். ஒருவர் தான் சுயமாகச் செய்து கொள்ளும் செயற்பாடு எனவும் கொள்ளலாம்.

இன்று எமது சமூகத்தில் இடம் பிடித்துள்ள தற்கொலை அசம்பாவிதங்களை எடுத்து நோக்குகையில் 1998ம் ஆண்டிற்கு முன்னுள்ள 15ஆண்டுகளில் எமது வடகிழக்கு யுத்தத்தில்



மரணம் சம்பவித்த பொதுமக்கள் தொகை (70,000) எழுபதாயிரத்துக்கு மேல் ஆகும். இலங்கையில் தற்கொலை மரணமானோர் 106,000 (ஒரு லட்சத்தி ஆறாயிரம்) ஆக காணப்படுகிறது. அடுத்து 1950ம் ஆண்டு காலப்பகுதியில் தற்கொலை மூலம் மரணமானோர் ஆண்டொன்றிற்கு 100,000 (ஒரு லட்சம்) பேருக்கு 6 பேரே மரணமானார்கள். ஆனால் இன்று ஆண்டொன்றிற்கு 100,000 (ஒரு லட்சம்) பேருக்கு 49 பேர் வீதம் தற்கொலையின் மூலம் தன்னுயிரை மாய்த்துக் கொள்வதாக வைத்திய அறிக்கைகளினூடு அறியலாம். அடுத்து அகில உலக ரீதியிலே 14-25 வயதிற்கு இடைப்பட்ட இளைஞர், யுவதிகள் கூடுதலான அளவு தற்கொலையினைத் தளுவும் நாடாகவும், பெண்கள் கூடுதலாக தற்கொலையில் ஈடுபட்டு மரணம் சம்பவிக்கும் நாடாகவும் உலகளாவிய ரீதியில் பிரபல்யம் அடைந்து காணப்படுவது கவலைக்குரிய தொன்றாகும்.

இன்றைய காலத்தின் முதன்மை பெறும் தற்கொலையானது. எவ்வாறான வழிகளில் நடக்கின்றன. எனப் பார்க்கையில் இங்கு கூடுதலாக களைகொல்லி, கிருமி நாசினிகள் அருந்துதல், நச்சுக்காய் உண்ணல் (அலரிவிதை), தூக்கு இட்டுக் கொள்ளல், நீரில் மூழ்குதல் (கடலில் அல்லது ஆற்றில் பாய்தல்) தன்னைத் தானே தீ மூட்டிக் கொள்ளல், புகையிரதத்தின் முன்பாய்தல், மாடிகளிலிருந்து பாய்தல், துப்பாக்கிகளின் மூலம் தன்னைத், தானே சுட்டுக் கொள்ளல் போன்ற முறைகளினால் செய்து கொள்கின்றனர்.

மேற்படி முறைகளினால் தற்கொலையினை செயற்படுத்தினாலும் இன்று கூடுதலாக நஞ்சு அருந்துதல், நஞ்சுக்காய் உண்ணல், தீ மூட்டிக் கொள்ளல் போன்ற முறைகளினாலே கூடுதலானோர் தற்கொலையில் ஈடுபடுவதாக தரவுகள் கூறுகின்றன. அத்தோடு இத் தற்கொலையில் இலங்கை முன்நிற்பதற்கும் தற்கொலையினைக் கூடுதலானோர் தனதாக்கிக் கொள்ளவும் பல காரணங்களினைக் குறிப்பிடலாம். உளவியல் பிரச்சினை, போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாதல், சமூக மட்டத்தில் தனிமைப்படுத்தப்படல், குடும்பப் பிரச்சினை, காதலில் தோல்வி, உடல் நோய்கள், பரீட்சையில் தோல்வி, (எதிர் பார்ப்புகள் நிறைவேறாமை) படித்த இளைஞர் மட்டத்தில் தொழில் இன்மை, பொருளாதார பிரச்சினை, கடன் தொல்லை, தொழிலில் நஷ்டம் போன்ற காரணங்களினால் இன்று அனேகமானவர்கள் தற்கொலையில் ஈடுபடுகின்றனர்.

இவற்றில், இளைஞர் யுவதிகளினைத் தற்கொலைக்கு இட்டுச் செல்லும் பிரதான காரணங்களில் ஒன்று குடும்ப, வீட்டுப் பிரச்சினைகளாகும் அதாவது வறுமை கோட்டின் கீழ் உள்ள குடும்பத்தில் தந்தை ஒவ்வொரு நாளும் மதுபோதையில் வந்து தாய்க்கு அடித்தல், தமது மக்களிற்கு ஏசுதல், அடித்தல் போன்ற பல செயல்களினாலும் குடும்பக் கஷ்ரம் காரணமாகவும் இக்குடும்ப பிள்ளை தற்கொலை செய்து தனது உயிரைப் போக்க முற்படுவர்.

அடுத்து, எமது இளைஞர் மட்டத்தில் உள்ள ஒரு பெரும் பிரச்சினை கல்வியில் ஏற்படும் போட்டிப் பரீட்சையில் வெற்றி பெறாவிட்டால் இளைஞனோ அல்லது

**- இ.வரதராஜன் -**

தோல்வியினை தாங்க முடியாமல் யுவதியோ எதிர்காலத்தினை எண்ணாமல் உடனே தனது உயிரைப் போக்கிக் கொள்ள துணிகின்றனர். அடுத்து இளைஞர் வாழ்வினை தற்கொலைக்கு இட்டுச் செல்ல இளமைக் காதலும் ஒரு காலாக அமைகின்றது. கட்டிளம் பருவ இளைஞர்கள் காதல் தோல்வியைத் தளுவுதல், பெற்றோர் எதிர்ப்பு போன்ற காரணங்களினால் அவ்யுவதி மட்டுமோ அல்லது இளைஞர் மட்டுமோ அல்லது இருவருமே தற்கொலையினைத் தேடி மரணம் எனும் நெடும் தூக்கத்திற்கு நுழைய எத்தனிக்கின்றனர். மற்றும் சமூகத்தினாலும் குடும்பத்தினாலும் தனிமைப்படுத்தப்பட்ட ஒருவன் தன்னுடைய எதிர் பார்ப்பு நிறைவேறாமையினால் உளவியல் அவஸ்தைக்கு உண்டாகி இவ் உலக வாழ்க்கையில் பிடிப்பற்ற தன்மையுடன் தனது உயிரைத் துறக்க நினைத்து தற்கொலையினைத் தளுவிக் கொள்வான்.

இவ்வாறாக எம் இளைஞர் மட்டத்தில் தாக்கத்தினை ஏற்படுத்தும் தற்கொலையானது மூன்று கட்டங்களில் அமைவதாய் உள்ளது.

01. முதலாம் கட்டம்- தற்கொலை புரியும் எண்ணம் உண்டாவது. இதனைப் பற்றி பேசுதல், இது எழுத்து மூலமும், பேச்சு மூலமும் அமையலாம்.

02. இரண்டாம் கட்டம்- இத் திட்டத்தினை செயற்படுத்த ஏற்ற இடங்களினைத் தெரிவு செய்தல் நேரத்தைத் தீர்மானித்தல்.

03. மூன்றாம் கட்டம்- தற்கொலைக்கு முயற்சித்தல் இதன் விளைவு இறப்பினாலோ அல்லது பிழைப்பினாலோ முடிவடையலாம்.

இவ்வாறாக தற்கொலையில் ஈடுபட முயற்சிப்போர். பின்வரும் அறிகுறிகளினை காட்டுபவராயும் காணப்படுவர்.

01. நெருங்கி பழகிய நண்பர்களிடம் நட்பினைத் துண்டித்தல்.

02. தம்முடன் பழகுபவர்களிடம் கூறுவர். (இன்று இலங்கையில் நடந்த தற்கொலையில் 70வீதமானோர் தம்முடன் பழகியவர்களுடன் இந் நிலையினைக் கூறி உள்ளனர்.)

03. குடும்ப அங்கத்தவரிடம் இருந்து பிரிந்து தனிமையாக வாழ்வர்.

04. ஏற்கனவே தற்கொலையில் ஈடுபட்டு தப்பியவர்கள்.

05. வாழ்வில் வெறுப்புற்றவராயும், பிடிப்பற்றவராயும் காணப்படுவர்.

06. கதை பேச்சுக்களில் ஒரு வெறுப்புற்ற தன்மை.

07. மனநோயாளியாயின் போதிய சிகிச்சை கிடைக்காமல் இருத்தல்.

போன்ற தற்கொலைக்கான அறிகுறிகளினை வெளிக்காட்டுபவர்களாய் காணப்படுவர். இவ்வாறு இத் தற்கொலையில் ஈடுபடுவோரின் அறிகுறிகள் காணப்பட்டாலும் இவர்களினைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பும், தடுக்க வேண்டிய பொறுப்பும், சிறந்த ஆலோசனை வழிகாட்ட வேண்டிய தன்மையினையும் சமூக அங்கத்தவர்களாகிய நாம்

இளைஞர் யுவதிகளினை தற்கொலைக்கு இட்டுச் செல்லும் பிரதான காரணங்களில் ஒன்று குடும்ப, வீட்டுப் பிரச்சினைகளாகும் அதாவது வறுமை கோட்டின் கீழ் உள்ள குடும்பத்தில் தந்தை ஒவ்வொரு நாளும் மதுபோதையில் வந்து தாய்க்கு அடித்தல், தமது மக்களிற்கு ஏசுதல், அடித்தல் போன்ற பல செயல்களினாலும் குடும்பக் கஷ்ரம் காரணமாகவும் இக்குடும்ப பிள்ளை தற்கொலை செய்து தனது உயிரைப் போக்க முற்படுவர்.

தெரிந்து வைத்துக் கொள்ளல் அவசியமாகும். அந்த வகையில் முதலில் மிக ஆபத்தானவர்களினை இனம் காணல் வேண்டும். இனம் காணப்பட்டோரைத் தனிமைப்படுத்தாமல் தம்முடன் இணைத்து நடக்க முற்படுதல், அவர்களுடைய பிரச்சினையினை



கலந்தாலோசிக்க வேண்டும். அவர்களிற்கு அப் பிரச்சினை ஒரு பெரிய பிரச்சினை அல்ல என்ற மனநம்பிக்கையினையும், மனத்திடத்தினையும் ஏற்படுத்த முயற்சித்தல் வேண்டும்.

அடுத்து களை கொல்லிகளினைப் பாதுகாப்பான இடங்களில் களஞ்சியப்படுத்தல் வேண்டும். முதலுதவிகள் பற்றி அறிந்திருத்தல் வேண்டும். மற்றும் தற்கொலை எண்ணக் கருவினை மாற்றி அமைத்தல் வேண்டும். அதாவது அதனை தரக் குறைவான செயலாக கணிக்காதிருத்தல். அதாவது தற்கொலை செய்து பிழைப்போரை அவமதிக்காமல் சிறப்பாகக் கவனித்தல் வேண்டும். மேற்படி கூறப்பட்ட நடவடிக்கைகளினை உடன் எடுப்பதன் மூலம் ஒருவர் தற்கொலை செய்வதில் இருந்து பாதுகாக்கலாம். ஏனெனில் இலங்கையில் நாள் ஒன்றிற்கு 20பேர் தற்கொலை செய்து. கொள்கின்றனர். இதனைத் தடுப்பதும் குறைப்பதும் எமது கைகளிலே.

## கந்தப்போடியும் கலந்தர்லெவ்வையும்

கந்தர்:- என்ன மச்சான் சந்திரிகா அம்மையார் கிறுகிறுப்புல கதைக்கிற மாதிரி உங்கட ரவூஹக்கீம் ஐயா புறுபுறுக்கிறாரே....

கலந்தர்:- 'எத வச்சி செல்லிறா? முஸ்லிம் இளைஞர்கள் ஆயுதம் தூக்கோணும் எண்டு இந்தியாவில வச்சு சொன்னகதயா....

கந்தர்:- இந்தியாவுக்குப் போக ஆமுக்கு உஷார் கிளம்பித்துப் போல ....

கலந்தர்:- அவங்கட உஷார் எல்லாம் நாடாளுமன்ற ''நாற்காலி பிடிக்கும்'' மட்டும்தானே மச்சான்....

கந்தர்:- இந்தியாவுல ஒருகத, இலங்கையில ஒருகத, காத்தான் குடியில ஒருகத, கல்முனைக்குடியில ஒருகத, எண்டு கதைக்கக்குள்ளயும் நிதானமாக் கதைக்கோணும்.....

கலந்தர்:- அவரு ஆயுதம் தூக்கச் சொன்னா முஸ்லிம் இளைஞர்கள் என்ன மடையனுகளா ஆயுதத்த தூக்க.....

கந்தர்:- ஆயுதம் தூக்கினா ஆபத்து வரும் எண்டத உணர்ந்தாச் சரிதான்...

துரோகங்களின் அத்தியாயங்கள் - 37

இந்தியாவும் ஈழத்தமிழரும்

வடக்குக்கிழக்கு மாகாண இடைக்கால நிர்வாகசபை தொடர்பாக இடம்பெற்றுவந்த சர்ச்சைகளுக்குப் புலிகள் ஒரு முற்றுப் புள்ளியை வைத்ததைத் தொடர்ந்து, இந்தியப் படையினருக்கும் புலிகளுக்கும் இடையில் காணப்பட்டு வந்த விரிசல்கள் அதிகரிக்க ஆரம்பித்தன.

இந்த- விரிசல்களை மேலும்

தகவலை ஸ்ரீலங்கா கடற்படையினரின் காதுகளில் போட்டு வைத்தார்கள். உடனடியாகவே ஸ்ரீலங்கா கடற்படையின் ரோந்துக் கப்பல் ஒன்று புலிகளின் படகை வழிமறிக்கப் புறப்ப ட்டது.

அக்காலத்தில் புலிகள் தற்பொழுது உள்ளது போன்ற 'கடல் புலிகள்' என்ற பிரமாண்டமான ஒரு கடற்படைக் கட்டமைப்பைக் கொண்டிருக்கவில்லை. ஈழத்திற்கும், இந்தியாவிற்கும் இடையிலான போக்குவரத்திற்கும், ஆயுத மற்றும் உணவு வினியோகத்திற்கும் என்று சிறிய அளவிலான கடற் பிரிவொன்றையே கட்டமைத்திருந்தார்கள். 'கடல் புறா' என்ற பெயரில் சில வள்ளங்களில், உயர்

ஸ்ரீலங்காப் படையினருடன் புறப்பட முடிவுசெய்தார்கள். அத்தோடு, காங்கேசன் துறை தளத்தில் இந்தியப் படையினரும் நிலைகொண்டிருந்ததால், தமது பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான எதுவும் நடைபெறச் சந்தர்ப்பம் இல்லை என்றும் அவர்கள் எண்ணியிருந்தார்கள். புலிகளை அழைத்துச் சென்ற ஸ்ரீலங்கா கடற்படை அதிகாரியான ஆரியதாசவும், புலிகளுடன் மிகவும் நட்புடன் தான் நடந்துகொண்டார்.

காங்கேசன்துறை தளத்தில் புலிகள் தரையிறங்கியபோது, அங்கிருந்த ஒரு இராணுவவீரன் புலேந்திரனை அடையாளம் காணும்வரை நிலமை சுமுகமாகவே இருந்தது.

# ஸ்ரீலங்கா கடற்படையினருக்கு தகவல் வழங்கிய இந்திய அமைதி காக்கும் படையினர்

அதிகரிப்பது போன்ற மற்றொரு சம்பவம், 03.10.1087 அன்று பாக்கு நீரிணைக் கடற்பரப்பில் இடம்பெற்றது.

இந்தியா மீது முற்றாகவே நம்பிக்கையை இழந்திருந்த விடுதலைப் புலிகள்; புலிகளை அடிமைப்படுத்த



அல்லது அழித்துவிடத் தருணம் பார்த்துக் கொண்டிருந்த இந்தியா; இந்தியாவையும் விடுதலைப் புலிகளையும் மோதவிட்டு வேடிக்கை பார்க்க நினைத்த ஸ்ரீலங்கா - இந்த மூன்று தரப்பினருமே எதிர்பார்த்திராத நிகழ்வொன்று அக்டோபர் மாதத்தின் ஆரம்பத்தில் பருத்தித்துறைக் கடற்பரப்பில் இடம்பெற்றது.

ஒரு மோசமான இன அழிப்பை



மேற்கொண்ட படையினர் என்று இந்தியாவை சர்வதேசத்தின் முன்னால் தலைகுனிய வைக்கும்படியாக அமைந்திருந்த புலிகள்-இந்திய யுத்தத்திற்கு அத்திவாரம் போட்டதாக ஆய்வாளர்களால் குறிப்பிடப்படுகின்ற அந்த நிகழ்வு, ஜே.ஆருக்கு மட்டுமே நன்மை பயக்கும்படியாக அமைந்திருந்தது.

## படகில் வந்த புலிகள்

3.10.1987 அன்று அதிகாலை 2 மணியளவில், பருத்தித்துறைக் கடற்பரப்பில் சில விடுதலைப் புலிகள் ஆயுதங்களுடன் படகொன்றில் வந்துகொண்டிருப்பதாக இந்திய அமைதிப்படைக்கு, இந்தியக் கடற்படையினரிடம் இருந்து தகவல் வந்து சேர்ந்தது. புலிகள் தொடர்பாக அதிருப்தி கொண்டிருந்ததுடன், புலிகளின் ஆயுதங்களைக் களையும் நோக்கத்திலும் இருந்த இந்திய அமைதி காக்கும் படையினர், இந்தத்

வலு இயந்திரங்களையும், எல்.எம்.ஜி. இயந்திரத் துப்பாக்கிகளையும் பொருத்தி, சிறிய படைப்பிரிவொன்றையே கொண்டிருந்தார்கள். (பிரபல சரித்திர எழுத்தாளர் சாண்டில்யன் எழுதியிருந்த 'கடல் புறா' என்ற சரித்திர நாவலில், தமிழருக்குச் சொந்தமான பாரிய கடற்படையின், பிரதான கப்பலுக்கே 'கடல் புறா' என்று பெயரிடப்பட்டிருந்தது. சாண்டில்யனின் அந்த நாவலை மிகவும் விரும்பிப் படித்த புலிகளின் தலைவர், புலிகளின் கடற் பிரிவுக்கும், 'கடல் புறா' என்ற பெயரைச் சூட்டியிருந்தார்)

'கடல் புறா' என்று பெயர் பொறிக்கப்பட்ட புலிகளின் அந்தப் படகை ஸ்ரீலங்கா கடற்படையினர் வழிமறித்தார்கள். புலிகளின் படகில், மட்டக்களப்பு மாவட்ட தளபதி குமரப்பா மற்றும் திருகோணமலை மாவட்டத் தளபதி புலேந்திரன் உட்பட 17

**- நிராஜ் டேவிட்-**

போராளிகள் பயணம் செய்துகொண்டிருந்தார்கள்.

ஆரியதாச என்ற அதிகாரியின் தலைமையில் சென்ற ஸ்ரீலங்கா கடற்படைப் படகு, புலிகளின் படகை வழிமறித்தது. புலிகளின் படகை கரையை நோக்கித் திருப்பும்படி கட்டளையிட்டது.

புலிகள் தம்மீது தாக்குதல் நடத்தக்கூடும் என்றே கடற்படையினர் ஆரம்பத்தில் எதிர்பார்த்திருந்தனர். ஆனால் புலிகள் அவ்வாறு நடந்துகொள்ளவில்லை. யுத்தநிறுத்தம் அமுலில் இருந்த காரணத்தி னாலும், இலங்கை இந்திய ஒப்பந்தம் நடைமுறையில் இருந்ததன் காரணமாகவும், புலிகள் தாக்குதல் முயற்சிகள் எதிலும் ஈடுபடவில்லை. ஸ்ரீலங்காப் படையினரின் கட்டளைக்குப் பணிந்து நடந்து கொண்டார்கள்.

படகில் இருந்து 17 புலி உறுப்பினர்களும், காங்கேசன்துறை கடற்படைத் தளத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். புலிகள் தமது பாதுகாப்பிற்கென்று கொண்டு சென்ற சில துப்பாக்கிகளையும், படகில் பொருத்தப்பட்டிருந்த இரண்டு இலகு இயந்திரத் துப்பாக்கிகளையும் தவிர, படகில் வேறு ஆயுதங்கள் எதுவும் கடத்திச் செல்லப்படவில்லை. எனவே பாரதூரமாக எதுவும் நடைபெறமாட்டாது என்ற நம்பிக்கையில்தான் புலிகள்

## புலேந்திரனின் பிரபல்யம்

விடுதலைப் புலிகள் அமைப்பின் திருகோணமலை மாவட்டத் தளபதி புலேந்திரன், சிங்கள மக்கள் மத்தியில் மிகவும் பிரபல்யமானவர்.

சிறிது காலத்தின் முன்னர் ஹபரணை பிரதேசத்தில் உள்ள கித்துலொட்டுவ என்ற இடத்தில், இரண்டு பஸ்களில் பயணம் செய்துகொண்டிருந்த 126 சிங்கள மக்கள் ஆயுததாரிகளினால் கொலை செய்யப்பட்டிருந்தார்கள். இந்தச் சம்பவத்திற்கு புலிகளே காரணம் என்று ஸ்ரீலங்கா அரசு கூறியிருந்ததுடன், திருகோணமலைப் பிரதேசப் பொறுப்பாளர் புலேந்திரன் தலைமையிலேயே இந்தத் தாக்குதல் நடைபெற்றதாகவும் செய்தி வெளியாகி இருந்தது. இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து புலேந்திரன் சிங்கள மக்கள் மத்தியில் மிகவும் பயத்துடனேயே நோக்கப்பட்டுவந்தார்.

காங்கேசந்துறை துறைமுகத்தில் ஸ்ரீலங்காப் படையினரால் அழைத்துவரப்பட்ட 17 விடுதலைப் புலிகள் மத்தியில் புலேந்திரனும் இருந்ததை, ஒரு சிங்களச் சிப்பாய் அடையாளம் கண்டுவிட்டார். அதன் பின்னரே, தாங்கள் கரைக்கு அழைத்துவந்த நபர்களின் பெறுமதியை ஸ்ரீலங்கா கடற்படையினர் உணர்ந்து கொண்டார்கள்.

## கைது உத்தரவு

செய்தி கொழும்புக்குப் பறந்தது. கொழும்பில் இருந்து கடற்படையினருக்கு ஒரு உத்தரவு வந்தது. 'உடனடியாக படகில் வந்த 17 பேரையும் கைது செய்து, ஸ்ரீலங்கா இராணுவத்தினரிடம் ஒப்படைக்கும்படி' உத்தரவு வந்தது. படகில் வந்த புலி உறுப்பினர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டார்கள். ஸ்ரீலங்கா இராணுவத்தின் வடபிராந்திய துணைக் கமாண்டர் பிரிகேடியர் ஜயரட்னா (பின்னாளில் இவர் மேஜர் ஜெனரலாகப் பதவி உயர்த்தப்பட்டு, 1988 அக்டோபரில் மரணம் அடைந்தார்) புலி உறுப்பினர்கள் 17 பேரையும் தனது பொறுப்பில் கொண்டு வந்தார்.

புலிகள் உட்பட ஈழப் போராளிகள் அனைவருக்கும் ஸ்ரீலங்கா அரசினால் ஏற்கனவே பொதுமன்னிப்பு வழங்கப்பட்டிருந்ததால், தாம் கைது செய்யப்பட்டதையோ, அல்லது தம்வசமிருந்த ஆயுதங்கள், சயனைட் குப்பிகள் என்பவை பறிமுதல் செய்யப்பட்டதையோ

புலிகள் ஆட்சேபிக்கவில்லை. தாங்கள் விரைவிலேயே விடுதலை செய்யப்பட் டுவிடுவோம் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையில், புலிகள் முரண்டு பிடிக்கவில்லை.

அதனைத் தொடர்ந்து ஸ்ரீலங்கா அரசிடம் இருந்து ஒரு அதிர்ச்சிகரமான உத்தரவு, பிரிகேடியர் ஜயரெட்ணாவிற்கு வந்தது. 'கைது செய்யப்பட்ட விடுதலைப் புலிகளை உடனடியாகவே கொழும்புக்கு அனுப்பி வைக்கும்படியும், அவர்களைக்



கொழும்புக்குக் கொண்டு வருவதற்கு ஒரு விஷேட விமானம் அனுப்பிவைக்கப் பட்டுள்ளதாகவும்' அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்தியாவின் வரலாற்றிலும், ஈழத்தமிழர் வரலாற்றிலும் ஒரு பாரிய அனர்த்தம் இடம்பெற இருப்பதைக் கட்டியம் கூறுவது போன்று அந்தச் செய்தி அமைந்திருந்தது.

'இந்தியாவின் வியட்னாம்' என்று சரித்திரத்தில் குருதியினால் பொறிக்கப்பட்டுள்ள, புலிகளுடனான இந்தியாவின் யுத்தத்திற்கு வித்திட்ட அந்தச் சம்பவம், ஜே.ஆரின் விருப்பப்படியே நடைபெற்றது.

இந்த சம்பவம் பற்றி பின்நாட்களில் ஜே.ஆர். ஒரு பேட்டியில் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்: ''நான் போடவேண்டிய குஸ்தி சண்டையை தான் போடுவதற்காக மத்தியஸ்தரான ராஜீவ் காந்தி கோதாவில் குதித்திருந்தார்'' என்று கிண்டலுடன் குறிப்பிட்டிருந்தார்.

புலிகளுக்கும், இந்தியாவிற்கும் இடையில் நீண்டகால விரோதத்திற்கு வித்திட்ட அந்தச் சம்பவத்தின் சுவையான, பரபரப்பான பக்கங்களை அடுத்துவரும் அத்தியாயங்களில் சற்று விரிவாகவே பார்ப்போம்.

*(துரோகம் தொடரும்.....)*

> நாம் தனித்து நின்று இந்தியத் தலையீட்டை எதிர்த்தோம். நாம் தனித்து நின்று உலகின் மிகப் பெரிய இராணுவத்தை எதிர்த்தோம். நாம் தனித்து நின்று எமது சுதந்திரத் தீயை அணையவிடாது போராடினோம், இறுதியில் நாம் வெற்றிகொண்டோம். இந்த வெற்றிக்குக் காரணம் எமது மனந்தளராத உறுதி: சாவுக்கு அஞ்சாத எமது வீரம் சத்தியத்திலும் தர்மத்திலும் எமக்குள்ள நம்பிக்கை.
>
> *- விடுலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன்.*

**தவறுக்கு வருந்துகின்றோம்**

அலை 36இல் பிரசுரமாகியிருந்த இந்தியத்துரோகம் தொடர் சிறு தவறின் காரணமாக இரண்டு பகுதிகள் தலைகீழாக அச்சடிக்கப்பட்டுள்ளன. எனவே அதனை திருத்தி வாசிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

(ஆ-ர்)

# மட்டக்களப்பு மக்களின் வயிற்றில் அடிக்கும் சிறிலங்கா அரசு

போர்க் காலத்தில் பல பொருளாதாரத் தடைகளை தமிழ் பிரதேசங்களில் மேற் கொண்ட சிறிலங்கா அரசானது போர் ''ஓய்ந்த இன்றைய வேளையிலும் தமிழ் மக்களின் உணவைப் பறித்து எடுத்து சிங்கள சமூகத்தின் வயிற்றை நிரப்பும் செயலில் ஈடுபட்டுள்ளதைக் காண முடிகிறது.

இந்தக் கீழ்த்தரமான சிறில



ங்கா அரசின் ஒரு நடவடிக்கையாகவே வடக்குக் கிழக்கு மாகாணங்களில் இலங்கை சமுர்த்தி அதிகார சபையினால் சமுர்த்தி நிவாரணம் தமிழ் மக்களுக்குப் பாரபட்சமான முறையில் வழங்கப்படுவது நிரூபணமாகியுள்ளது.

ஒரே நாட்டில் வாழும் இலங்கைப் பிரஜைகளில் ஒரு மாகாணத்தைச் சேர்ந்தவர்களுக்குக் குறிப்பிட்ட ஒரு தொகை நிவாரணமும், இன்னொரு மாகாணத்தில் வசிப்பவர்களுக்கு வேறு விதமான தொகை நிவாரணமும் வழங்கப்படுகின்றன.

இதன் படி வடக்கு, கிழக்கு

**- பாத்திரன் -**

மாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் உள்ளவர்களுக்கு மூன்றுக்கு மேற்பட்ட குடும்ப அங்கத்தினர் உள்ளவர்களுக்கு அறுநூறு தொடக்கம் ஆயிரம் ரூபா வரை பெறுமதியான முத்திரைகள் வழக்கப்படுகின்றது. ஆனால் வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ளவர்களுக்கு நாநூறு ரூபா பெறுமதியான முத்திரையே வழங்கப்படுகின்றது. குறிப்பாக இப் பாகுபாடு மட்டக்களப்பு மாவட்டத்தில் காணக் கூடியதாக இருக்கிறது.

இது தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கவனத்திற்குக் கடந்த டிசம்பர் 1ம் திகதி மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தில் இடம் பெற்ற மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் கலாநிதி ராதிகா குமாரசுவாமியிடம் மேலதிக அரச அதிபர் கே.புண்ணியமூர்த்தி சுட்டிக் காட்டிய போதும் எத்தகைய பலனும் கிடைக்கவில்லை.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 84872 குடும்பங்கள் சமுர்த்தி நிவாரணம் பெறுகின்றனர். இக் குடும்பங்களுக்கு 26.82 மில்லியன் ரூபாய்கள் நிவாரணமாக வழங்கப்படுகின்றன.

இதன் அடிப்படையில் 400 ரூபாய், 47432குடும்பங்களுக்கும், 350ரூபாய் 8173 குடும்பங்களுக்கும்,250ரூபாய் 8144 குடும்பங்களுக்கும், 140ரூபாய் 21153 குடும்பங்களுக்கும் சமுர்த்தி நிவாரண முத்திரைகளாக வழங்கப்படுகின்றன.

இந்தத் தொகையானது குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கை மாதாந்த வருமானத்தைப் பொறுத்தே வழங்கப்பட்டபோதும், குடும்ப அங்கத்தவர் மூன்று பேரைக் கொண்ட குடும்பங்களுக்கு 400ரூபா மட்டுமே வடக்குக் கிழக்கில் உள்ளவர்களுக்கு வழங்கப்படுவது அறிய முடிகிறது. ஆனால் ஏனைய மாவட்டங்களின் மூன்று அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்களுக்கு ஆயிரம் ரூபா வரை வழங்கப்பட்டு வருவது உண்மையிலேயே பாரதூரமான மனித உரிமை மீறலாகும்.

இந்தப்பாரபட்சம் வடக்குக் கிழக்கில் இடம் பெறுமானால் ஏனைய மாவட்டங்களைப் போன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் வழங்கப்படுமானால் ஆயிரம் ரூபா 9905 குடும்பங்களுக்கும், 600ரூபா 17519 குடும்பங்களுக்கும், 400 ரூபா 35515 குடும்பங்களுக்கும், 350 ரூபா 8505 குடும்பங்களுக்கும், 150 ரூபா 9105 குடும்பங்களுக்கும், சமுர்த்தி முத்திரையாக பெறும் குடும்பங்களாகத் தகுதி பெற்ற போதும் மட்டக்களப்பு மாவட்டத்தில் பாரபட்சம் சிறிலங்கா அரசினால் காட்டப்படுவது வெளிப்படையாகத் தெரிய வந்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டம் இதற்கு ஓர் உதாரணம் மட்டுமே இது போன்று தான் வடக்கு கிழக்கில் உள்ள ஏனைய தமிழ் மாவட்டங்களிலும் புறக்கணிப்பு சமுர்த்தி நிவாரணத்தில் இடம் பெறுவதாக அறிய முடிகின்றது.



உண்மையில் ஏனைய மாவட்டங்களை விட வடக்குக் கிழக்கு மாகாணமான கடந்த போர்ச் சூழலி னால் பல துன்ப துயரங்களையும், அழிவுகளையும், பொருட் சேதம், உயிர் சேதங்களை சந்தித்த மாகா ணமாகும். சமுர்த்தி நிவாரணம் என்ற போர்வையில் வடக்கு கிழக்கில் வாழும் மக்களை பட்டினிச் சாவுக்குள் தள்ளும் பொருட்டே திட்டமிட்டு சிறிலங்கா அரசினால் மிகவும் மோசமான முறையில் பாரபட்சம் காட்டப்படுவது தமிழன் என்ற ஒரே காரணம் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

கடந்த இருதசாப்தங்களுக்கு மேலாக இடம் பெற்ற இனப் போர் காரணமாக தமிழன் என்ற ஒரே காரணத்தினால் சிறிலங்காப்படைகளினால் கொல்லப்பட்ட எமதினம் இன்று படைகளால் கொல்லப்படாத இந்த போர்ச்சூழல் ஓய்ந்த வேளையில் ஏற்பட்டாலும் பட்டினிச் சாவை எதிர் நோக்கும் திட்டமாகவே வறிய மக்களின் வயிற்றில் சிறிலங்கா அரசு சமுர்த்தி நிவாரணம் மூலமாக பாரபட்சம் காட்டுகின்றது.

சமுர்த்தி நிவாரணத்தைப் போன்றே ஏனைய பல திட்டங்களும் வடக்குக் கிழக்கு மக்களுக்கு காலம் காலமாக பாரபட்சமான முறையில் நடாத்தப்படுகின்றன. உலர் உணவுத் திட்டம் என்ற போர்வையிலும் தென்பகுதிகளிலும் வழங்கப்படும் தொகைகளை விட வடக்குக் கிழக்குப் பகுதிகளில் மிகவும் குறைவாகவே வழங்கப்படுகின்றது.

ஒரு நாடு ஒரு தேசம் என கூறும் சிறிலங்கா அரசியல் வாதிகள் இதற்கு என்ன பதில் கூறப்போகின்றார்கள். ஒரு நாடு எனில் வடக்கு கிழக்கு மக்களுக்கு பாரபட்சம் ஏன்.

இவ்வாறான பாராபட்சம் உண்மையில் எதனை வெளிக்காட்டுகின்றது என்றால் இரண்டு நாடுகள் இங்கு உள்ளன என்பது தான்

சிறிலங்கா அரசால் தமிழ் மக்களுக்கான உரிமைகள் மட்டும் பறிக்கப்படவில்லை. உணவுப் பொருட்களைப் பறிப்பதும், பொருளாதாரத் தடைகளை வகுப்பதும் காலம் காலமாக தமிழ் மக்களுக்குக் கட்டவிழ்த்து விடப்பட்ட அடக்கு முறைகளாகும். இது இலங்கை சுதந்திரம் அடைந்ததாகக் கூறப்படும் 1948ம் ஆண்டு தொடக்கம் இன்று வரையும் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றது.

சமுர்த்தி நிவாரணம் இதற்கு சின்ன உதாரணமாக அமைந்தாலும், சகல அபிவிருத்தி மற்றும் கொடுப்பனவு எல்லாமே பாரபட்சமாகத்தான் தொடர்கிறது.

பாடசாலை மாணவர்களுக்கான இலவச உடு துணி, புத்தகங்கள் வழங்கப்படுவதிலும் வடக்கு கிழக்கில் உள்ள தமிழ்ப் பாடசாலைகளுக்கு ஏனைய மாகாணப்பாடசாலைகளுக்கு வழங்கிய பின்பு தான் கடைசியாக வழங்கப்படும் நிலையை காணலாம்.

இவ்வாறான நிலைகள் ஏற்படாமல் இருக்க வேண்டுமானால் தமிழ் மக்கள் தமது தலை விதியைத் தாமே தீர்மானித்து தமது சுயநிர்ணய உரிமையைப் பெறுவதற்கான பலத்தைப் அதிகரிப்பதைத் தவிர வேறு வழியில்லை.

இந்த உண்மையை சகல தமிழ் மக்களும் புரிந்து செயற்படும் போது தான் எமக்கு எல்லா வளமும் தானாகவே வரும்.

---

பகிரங்கமடல்

அலைமகன் எழுதும் பகிரங்கமடல்.



## பிணக்குகளுக்கு தீர்வு கண்டு இணக்கத்துக்கு வாருங்கள்

பிரதமர்ரணில் விக்கிரமசிங்காவுக்கு!

சக்தி பெரிதா, சிவன் பெரிதா என வாதிட்டு தக்கஷடைய யாகம் நடைபெற்றது போன்றதொரு இக்கட்டான சூழ்நிலைக்கு சிங்கள தேசத்தின் அரசியல் களம் சென்று கொண்டிருக்கிறது. சமாதானத்தை இலக்கு வைத்து ஆட்சி நடத்திய தாங்கள் விடுதலைப்புலிகளை சர்வதேச ரீதியாக வலைப்பின்னலுக்குள் வீழ்த்தி உப்புச்சப்பற்ற ஒரு அரசியல் பொதியைத் திணித்து இவ்வளவு தான் ஏற்றுக் கொள்ளுங்கள் என்ற அதிகாரத்தை அனைத்துலக நாடுகளின் ஆசீர்வாதத்துடன் மேற்கொள்ள எடுத்த முயற்சிகள் இடை நடுவில் ''பிறேக்'' போட்டு நிற்கிறது.

சிவன் பெரிதல்ல சக்திதான் பெரிதென்று அம்மணி இப்போது வரிந்து கட்டிக் கொண்டு நிற்கின்றார். நீங்கள் ஒரு வாயாடி என்றால் வார்த்தையால் கூட அம்மணியை மடக்கிவிடலாம். நீங்கள் நூறு வார்த்தை பேசினால் அம்மணி ஆறாயிரம் வார்த்தைகள் பேசுவார். இப்போது யானை துதிக்கையை மட்டும் சீறிப்பிரயோசனமில்லை. ஏனெனில் யானைக்குப் பாகனுண்டு. அந்த யானைப் பாகன் தான் சந்திரிக்கா. அங்குசம் அம்மணியிடமிருக்கும் போது சமாதானப் பேச்சுகளில் அசைய முடியாது.

இந்த ரணில் நாம்பனுக்கு மூக்காணாம் கயிறு போட்டாச்சு. இப்போது மூக்கணாங்கயிறு அம்மா கையில் தான். சும்மா சொல்லக் கூடாது. எல்லாம் வல்ல சகல கலா வல்லியாக சந்திரிக்கா இருக்கும் போது புலிகளுடனல்ல. வேறு எவருடனாவது நாங்கள் பேச நினைத்தால் அது முடியாத காரியம்.

தமிழ் மக்கள் சமாதானம் வரும் எனக் கண்ட கனவுகள் நடுக்கடலில் நங்கூரமிடப்பட்ட கப்பல் போல் நின்று கொண்டிருக்கிறது. உலக நாடுகள் சமாதானம் வரவேண்டுமென்று தான் கூறுகிறதே தவிர சந்திரிக்காவை பதவியிலிருந்து அகற்றுவதற்கான ஆலோசனைகள் கூறமாட்டார்கள்.

இப்போது உங்கள் ஆட்சி பொம்மையாட்சி. இந்த ஆட்சியை இழுத்து இழுத்து காலத்தைக் கடத்திக் கொண்டிருந்தால் தமிழினம் காணப்போகின்ற பலன் ஒன்றுமில்லை. மரண அவஸ்தையில் கிடக்கும் சீவன் போல் தான் உங்கள் ஆட்சி. எப்போதும் கண்ணை மூடும் அபாயம். இப்போதும் சந்திரிக்கா நினைத்தால் கண்ணை மூடவைக்கலாம்.

இனியும் தமிழினம் ஏமாறாது. எங்கள் தேசியத்தலைவன் யசீஅரபாத் அல்ல ஏமாந்து போவதற்கு. பொறுத்துக் கொண்டு சகித்துக் கொண்டு அரசியல் சதுரங்கத்தில் காய்களை நகர்த்திக் கொண்டிருக்கிறார்.

சமாதானத்திற்குத்தான் மக்கள் ஆணைவழங்கியிருந்தால் மக்களை ஒன்று திரட்டுங்கள் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரப் பலத்துக்கு எதிராகப் போர்க் கொடி தூக்குங்கள் வெட்டொன்று துண்டு இரண்டாகப் பேசுங்கள். மாறாக ஜனாதிபதியுடன் இழிச்சி இழிச்சி நீங்கள் செல்வது எமக்குச் சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. இருவரும் சேர்ந்து இனப்பிரச்சினையை இழுத்துப் பிடிக்கிறீர்களோ என்ற சந்தேகம் தான் அது.

டட்லி, ஜே.ஆர், பிரேமதாஸா, விஜயதுங்கா, ரணில் எல்லா யூ.என்.பி. தலைமைகளும் தமிழினத்தின் உரிமைகளை வழங்க மறுத்தவர்களாக வரலாற்று பதிவேடுகளில் இடம் பிடிக்க வாய்ப்புள்ளது.

எனவே சர்வதேச வலைப்பின்னலுக்குள் விடுதலைப்புலிகளை வீழ்த்தி அரசியல் லாபம் தேடி உலக அரங்கில் நற்பெயரைத் தேடும் காரியங்களில் ஈடுபடாது சமாதான வழிமுறைகளில் உங்கள் பிணக்குகளுக்குத் தீவு கண்டு புலிகளுடனான பேச்சுக்கு வழி கோலுங்கள்.

*இங்ஙனம், அலைமகன்*

# பாரதி காட்டிய புதுமைப் பெண்ணை விழித்தெழ வைத்த விடுதலைப்புலிகள்



மனித இனத்தில் பிரதானமாக ஆண் ஜாதி, பெண் ஜாதி என இரு ஜாதிகள் உண்டு. இறைவனின் படைப்புக்களில் சிறப்பானதாக மனிதப் பிறவி காணப்படுகிறது. இவ்வாறு பிறப்பெடுத்த மனிதன் எப்போது சமூகமாக வாழ முன் வந்தானோ, அப்போதே சமுதாயச் சட்டங்களும், சம்பிரதாயங்களும் தோற்றம் பெற்றன. இச் சட்டம் சம்பிரதாயங்களிலே யே கலாசாரம் என்ற ஒரு பண்பாடு தோன்றியது என்பது அறிஞர்கள் கருத்து. இவ்வாறு தோன்றிய பண்பாட்டு விழுமியங்கள் ஆணை விட பெண்ணுக்கே இறுக்கமாக சமூக வழக்காறுகளில் காணப்பட்டன. இதன் காரணத்தினாலேயே தற்காலம் தொடக்கம் கணனியுகம் வரைக்கும் பெண் என்பவள் சமுதாய அடக்கு முறைக்குள் ஒடுக்கப்பட்டு வந்துள்ளாள் என்பது வரலாற்று ஆதாரங்கள் எமக்குப் புலப்படுத்துகின்றன. இதற்கு முக்கியமான காரணம் பெண்கள் மீது மூர்க்கத்தனமாகக் கட்டவிழ்த்து விடப்பட்ட மூட நம்பிக்கையான சமுதாயச் சட்டதிட்டங்களே ஆகும்.

தற்கால மனிதன் உண்ணல் உறங்கலுடன் வேட்டையாடுதல் ''பலாத்கார உடல் உறவு, விலங்குகளைக் கொன்று உண்ணல் போன்றவற்றையே தமது கடமையாகச் செய்து வந்தான். காலப் போக்கில் அவனது சிந்தனையின் செயற்பாட்டின் காரணமாக அவனின் தேவைகளும், கடமைகளும் பல்கிப் பெருகி வந்துள்ளன. இவ்வாறு ஒரு மனிதன் கால தேச வர்த்தமானங்களுக்கு அமைவாக செயற்பட்டு வாழ்வில் வெற்றியடைந்து வந்தாலும் பெண் அடிமை முறை என்பது பண்டுதொட்டு இன்று வரைக்கும் விரிசல் அடைந்த வண்ணமே இருக்கின்றது என்பது மனித விருத்திக்கு அனுதாபமான செயற்பாடாகவே காணப்படு கின்றது.

ஏ.கருணா

பெண் ஒடுக்கு முறை என்பது காலங் காலமாக எல்லா நாடுகளிலும், எல்லாச் சமூகங்களிலும், எல்லாப் பண்பாட்டுமரபுகளிலும் நிலவி வருகின்றமை சமுதாயக் கண் ணோட்டத்தில் நாம் கண்டு கொள்ளலாம். ஆனால் இந்த ஒடுக்கு முறை இன்னும் இந்த சமூக அமைப்பில் இருந்து வருவது தான் மனித விருத்தியின் வாழ்க்கைத் தத்துவத்தைக் கேள்விக்குறியாக்கியுள்ளது. மனித இனத்தின் சமூக அமைப்பைப் பொறுத்த மட்டில் மிகவும் பிற்போக்குத் தனமான , மூட நம்பிக்கையான, கடும் இறுக்கமான பழமைவாத சிந்தனைகளின் வெளிப்பாட்டு நடைமுறைகளையே கொண்டு காணப்படுகின்றன. அதுவும் பெண்கள் மீது மிகவும் அழுத்தமான நடைமுறையை சமுதாய அமைப்பு கொண்டுள்ளமை தான் வேதனைக்குரிய ஒன்றாகும். இதனால் பெண்கள் தமது தனித்துவத்தை இழந்து காலங் காலமாக அடக்கப்பட்டு வந்துள்ளனர்.

பெண்கள் ''மனித (ஆண்) நாகரீகத்தின்" வளர்ச்சிப் போக்கில் ஓரம் தள்ளப்பட்டும், உரிமைகள் கட்டுப்படுத்தப் பட்டும், அடக்கு முறைகள் உட்படுத்தப்பட்டும் ஆணின் பாலிய சுகபோகப் பொருளாகவும், கையாட்களாகவுமே அடக்கப் பட்டு வந்துள்ளனர். பெண் என்பவள் எப்போதும் பயந்தவள். அச்சங் கொண்டவள் என்றும், மென்மையும் கூச்சமுந்தான் அவளின் இயல்பு என்றும், சமையலும் துணி துவைப்பதும், கணவனின் ஆசாபாசங்களுக்குக் கட்டுப்பட்டு ஆட்படுவதுமே அவளின் தொழில் என்றும், சமையல் அறைதான் அவளின் வாழ்விடம் என்றும், அவளின் வீடு தான் முழு உலகமும் என்ற மூர்க்கத்தனமான கணிப்பும் பாழ் கெட்ட மனித சமூதாயத்தில் புரையோடி வந்துள்ளன. பாலியல் வல்லு றவு, வரட்டுக் கௌரவம் என்ற போர்வையில் சீதனக் கொடுமை, ஆணாதிக்கம் நிருவாக விடயங்களில் ஈடுபடக் கூடாது என்ற எண்ணம் என்பவற்றால் பெண் சமூகம் அடக்கப்பட்டும் ஒதுக்கப்பட்டும் வந்துள்ளது.

பெண்களின் பருவங்களை பேதை என்றும், பெதும்பை என்றும், மங்கை என்றும், மடந்தை என்றும், அரிவை

அடுத்த வாரம் தொடரும்.....

## நரை முடி கருப்பாகத் தைலம்



இளம் வயதில் நரை ஏற்பட்டு விட்டால் கவலை வேண்டாம்.அதைப் போக்கிக் கொள்ள நல்ல மருத்துவம் உள்ளது. அந்தத் தைலத்தை நீங்களே தயாரித்து வைத்துக் கொள்ளலாம்.

எண்ணெய் அதிகமாக வரக்கூடிய வேப்பம் விதைகளைப் பொறுக்கியெடுத்துச் சேர்க்கவும்.250 கிராம் வேப்பம் பருப்பை கையாந்தகரை இலைச்சாற்றில் ஐந்து நாட்கள் வரை நன்கு ஊற வைக்கவும். அதன் பிறகு ஊறிய வேப்பம் பருப்புகளைத் தனியாக எடுத்து வெய்யிலில் நன்றாகக் காய வைத்துப் பொடி செய்து வைத்துக் கொள்ளவும்.

இந்தப் பொடியைத் தண்ணீரில் கலந்து அடுப்பிலேற்றிக் கொதிக்க வைக்கவும். அப்பொழுது நீரின் மேல் மிதக்கும் எண்ணெய் கிடைத்து விடும்.

இந்த எண்ணெயைத் தலைக்குத் தடவி வரவேண்டியதில்லை. இரண்டு சொட்டுக்கள் எடுத்து காலையில் குளிப்பதற்கு முன் மூக்கினுள் விட்டு வந்தால் போதும்.

அது மூளைக்கு ஏறி நன்றாக வேலை செய்யத் தொடங்கி விடும். நரை கறுப்பதற்கு உள்ள இடையூறுகள் அனைத்தையும் அது கலைத்து விடும். இருக்கும் நரை முடியையும் கறுப்பாக்குவதோடு கூந்தலும் நன்கு வளரத் தொடங்கி விடும்.

## பெண்களின் முக அழகுக்கு காதணிகள்



அழகான உங்கள் முகத்தை இன்னும் அழகாக்கிக் கொள்ள நீங்கள் வாங்க வேண்டியதெல்லாம் காதணிகள் தான் என்று சொன்னால் உங்களுக்கு நம்புவது கஸ்ரம் தான். ஆனால் அது தான் உண்மை. வட்டமான முகம் உடைய பெண்கள் ஸ்டட் அல்லது காதை ஒட்டின காதணிகளும், நீண்ட முகம் உடையோர் தொங்கும் காதணியையும், கூந்தல் பின்னாமல் அப்படியே பரவலாக விட்டுக் கொள்பவர்கள் தொங்கும் பெரிய காதணிகளையும் அணிந்து கொண்டால் அழகாக காணப்படுவார்கள். கறுப்பாக இருப்பவர்கள் பளபளப்பான காதணிகளை அணியக் கூடாது.

உ. சசிரேகா, பழுகாமம்

## இலட்சியப் பெண்

அடிமையாகி அல்லலுற்று.
தாயின் கருவறை தனிலே
உருவாகிய நாம்
கண்ணீர் சிந்தியது
போதும் பெண்ணே!
கண்ணீரைத் துடைத்துவிடு
சீதனக் கொடுமையால்
சிறகுடைந்தது போதும்
சாதனைகள் பல புரிந்து
சீதனம் எனும்
சிறைக் கம்பியை
தூக்கி எறிந்திடவா
பெண்ணே! உன் இலட்சியப்
பாதங்களைத் தூக்கி

எஸ். தவரீபன்
கொக்கட்டிச்சோலை




## மருத்துவக் குறிப்புக்கள்

### குழந்தை மண்ணைத் தின்கிறதா



குழந்தை மண், சாம்பல் இவைகளைத் தின்கிறதா? கவலை வேண்டாம். துளசி ஐம்பது கிராம், கடுக்காய் தோல் ஐம்பது கிராம், கிழா நெல்லி வேர் இருபத்தைந்து கிராம், இவைகளை நன்றாக அரைத்து வைத்துக் கொண்டு ஒரு பாலாடை அளவு புளித்த மோரில் பத்துக் கிராம் மருந்தைக் கலக்கி மூன்று நாட்களுக்கு காலை , மாலை வேளைகளில் கொடுக்கவும். அதன் பிறகு மண், சாம்பலைத் தின்ன மாட்டார்கள்.

### மரு மறைய

சில சமயங்களில் உடலில் ஆங்காங்கு மிளகு அளவில் 'மருவு' ஏற்படுவதுண்டு. ஆனால் அதிக தொந்தரவு ஒன்றும் இல்லாவிட்டாலும் பார்ப்பதற்கும் அருவருப்பாய் தோன்றுகிறதல்லவா? அதற்கு எருக்கன் இலையை உடைத்தால் பால் வரும். அதை எடுத்து அந்த மருவின் மேல் தடவி வரவும். தோலில் படாமல் மருவின் மேல் மாத்திரம் தடவி வரவும். தடவி வந்தால் போதும். அந்த மருவு தானாகவே விழுந்து விடும். உடல் பின் பழைய நிலைக்குத் தென்படும்.

### பித்த வெடிப்பு குணமாக



கால்களில் ஏற்படும் பித்த வெடிப்பு குணமாக 10 கண்டங்கத்தரி இலைகளைக் கொண்டு வந்து அதை ஒரு சட்டியில் போட்டு அரை டம்பிளர் அளவுத் தேங்காய் எண்ணையை அதில் விட்டு, அடுப்பில் வைத்துக் காய்ச்சினால் இலை வெந்து சருகாகிய உடன் இறக்கி எண்ணெயை வடிகட்டி ஒரு போத்தலில் விட்டு வைத்துக் கொள்ள வேண்டும். இரவு படுக்குமுன் கால்களிலுள்ள வெடிப்புக்களின் மேல் எண்ணையைத் தடவி வந்தால் வெடிப்புக்கள் ஆறி மறைய ஆரம்பிக்கும். ஆறும் வரை தொடர்ந்து பூசி வந்தால் பித்த வெடிப்பு குணமடையும்.

ந.வசந்தா, மருங்கைநகர்

## இட்லி

### தேவையான பொருட்கள்

| | |
|---|---|
| உடைத்த உளுந்து | 1/4 கிலோ கிராம் |
| ரவை | 1/2 கி.கி |
| சிறிதாக வெட்டிய வெங்காயம் | 1தேக்கரண்டி |
| சிறிதாக வெட்டிய கறிவேப்பிலை | தேவையான அளவு |
| பெருஞ் சீரகம் - | 1சிட்டிகை |
| கடுகு- | 1சிட்டிகை |
| தே. எண்ணெய் - | 2மேசைக்கரண்டி |
| உப்பு நீர் | தேவையான அளவிற்கு |

### செய்முறை:-

உளுந்தை 3மணி நேரம் ஊற வைத்துக் கழுவி பசுந்தையாக அரைத்து எடுத்துக் கொள்க.

* ரவையை அரித்து நீராவியில் அவித்து மீண்டும் அரித்துக் கொள்க.
* பின்பு அரைத்த உளுந்தை வாயகன்ற பெரிய பாத்திரத்தில் போட்டு ரவையையும் இட்டு அளவாக தண்ணீர் விட்டு இறுக்கமான கூழ்ப்பதமாகக் கரைத்து 6மணி நேரம் வரை புளிக்க வைத்துக் கொள்க.
* பின்பு தாச்சியில் எண்ணெயை விட்டு காய வைத்து, காய்ந்த பின் கடுகைப் போட்டு வெடிக்க வைத்து அதனுள் வெட்டிய வெங்காயம், கறி வேப்பிலை பெருஞ் சீரகம் என்பவற்றை இட்டு தாளித்து எடுத்துக் கொள்க.

*. பின்பு புளிக்க வைத்துள்ள மாக் கலவையில் தாளித்ததையும் அளவிற்கு உப்பு நீரையும் இட்டு நன்கு அடித்துக் கரைத்துக் கொள்க.
*. பின்பு இட்லிச் சட்டியை அடுப்பில் வைத்து நீர் நன்கு கொதித்ததும் தட்டுக்களிற்கு மேல் லஞ் பேப்பரை விரித்துக் கொண்டு இட்லிகளை வார்த்து அவித்தெடுத்துக் கொள்க.
*. இட்லிகளைப் பரிமாறும் போது சட்னி அல்லது சாம்பாருடன் பரிமாறலாம்.

எஸ் . சறோ

# எண்ணத்தை மாற்றினார் ஜோதிகா

புதுப்படங்கள் ஒப்புக் கொள்ள ஜோ ஆர்வம்! புதுப்படமா? இப்போதைக்கு நோ...'' என்று ஆங்கிலத்தில் மறுத்து முட்டைக் கண்ணால் முழித்து தயாரிப்பாளர்களை விரட்டி வந்த ஜோதிகா தற்போது தன் எண்ணத்தை மாற்றிக் கொண்டுவிட்டாராம். 'ஜோவின் கால் ஷீட் வேணுமா? படத்தில் யார் யாரெல்லாம் எப்போதெல்லாம் கால்ஷீட் கொடுத்திருக் காங்க? அத்தனை விபரத்தையும் கொண்டா... மேடத்திடம் பேசிப் பாக்குறேன்''என்று பங்குக்கு தன் முட்டைக் கண் விரித்த அவரின் மனஜரும் இப்போது அடக்கம் காட்டுகிறார். காரணம், ஜோவிற்கும் அவரின் கதலாருக்கும் இப்பவே கண்ணாலம் என்ற உடனடித் திட்டம் தள்ளிப் போனதானாம். அதுவரைக்கும் வலை விரித்து அகப்பட்டதைத் தேற்றலாம் என்பது அம்மணியின் ஐடியா தமிழ் சினிமாவில் ஹீரோயின் பஞ்சமும் தலை விரித்தாட ஆரம்பித்து விட்டது. சினிமாவிற்கு குட்டை சொல்லி விட்டார் சிம்ரன். தள்ளாத தொப்பையை வைத்துக் கொண்டு தடுமாறிக் கொண்டிருக்கிறார் கிரண்.



விஜய குமாரின் இளைய மகள் ஸ்ரீதேவி .மரம் மட்டை கல் .கட்டி எதுவாக இருந்தாலும் இமேஜைக் கெடுத்துக் கொண்டார் ஒரேயொரு போட்டி த்ரிஷா இந்த நேரத்தில் எதற்கு இருக்கிற மார்க் கெட்டை விடுவானேன்? ஜோவின் இந்த மனமாற்றம் தமிழ் சினிமா தயாரிப்பாளர்களுக்கு பால் வார்க் கிற அதே நேரத்தில் அவர் கேட்கிற சம்பளம் வேறொரு பாலை நினைவு படுத்துவதுதான் துர திருஷ்டம்.

## திரை பிம்பங்கள்

## ஆச்சிரமத்தை நாடும் சினிமா கலைஞர்கள!

ஏ.வி .ஏம் ராஜன் ஜீனியர் கவர்ச்சி நடிகை தீபாவை தொடர்ந்துகிறிஸ்துவராக மாறிய சினிமாக்காரர்கள் விஸ்டில் தன்னையும் இணைத்துக் கொண்டிருக்கிறாராம்

பாரதவிலாஸ் சொல்லத்தான் நினைக்கின்றேன் அபூர்வராகங்கள் போன்ற பல படங்கள் ஜெயசுதாவின் அழகையும் நடிப்பையும் உலகுக்கு அறிமுகப் படுத்தின கிட்டதட்ட 200படங்களில் நடித்திருக்கிறார் இவர். இம்மாம் பெரிய ஹீரோயின் அம்மா வேடங்களுக்கு இறங்கிய பின் அவர் மனசு ஆறுதல் தேடி அலைந்தது. விளைவு கர்த்தரின் கரங்களில் தன்னை ஒப்படைத்து விட்டர் மன அமைதிக்காவும் கர்த்தருக்கு சேவை செய்வதற்காகவும் தான் மதம் மாறியதாக கூறியிருக்கிறார் ஜெகதா இவரைப் போலவே இன்னொரு நடிகை பற்றிய செய்தி ஒன்று குள்ள வனிதா குள்ள வனிதா என்று ஒரு நடிகை இருந்தாரே தெரியுமா? அவர் இப்போது அன்னைஅமிர்தானந் தமயி ஆச்சிரமத்தில் தொண்டாற்றிக் கொண்டிருக்கிறார் நடிகை செளக்கார் ஜனாகி சென்னையில் இருக்கும் தன்னுடைய சொத்து பத்துக்களையெல்லாம் சொந்த பந்தக்களுக்குக் கொடுக்காமல் எல்லாவற்றையும் புட்டபர்த்தி சாய்பாபா ஆசிரமத்தில் ஒப்படைத்து விட்டு அங்கேயே சாமியாரகி விட்டர் சர்வம் பக்தி மயம் என்று இவர்கள் ஒதுங்கிக் கொண்டிருக்க டி.வியை



திறந்தால் இவர்கள் பாடும் பாடல்களை ஒளிபரப்பி இந்த சாமியாரிணிகளை காம ராணிகளாக்கிக் கொண்டிருக்கிறார்கள் இன்னொரு பக்கம் அடக் கடவுளே...

## வாசகர் இதயம்

### தித்திக்கும் தமிழ் அலையே!

தெவிட்டாத தமிழ் அரசே
வண்ணமயமாக – வந்து
என்னைப் போன்ற
வாசக நெஞ்சங்களை
கொள்ளை கொள்கின்றாய்.
புதிய புதிய அம்சங்கள்
புல்லரிக்க வைக்கும் உண்மைகள்
கற்று சேகரிக்க– கலை நயமான இதழ்கள்
கொட்டி முழங்கிடு தமிழ் அலையே
வையகத்தில் வாழ வளர தொடர்ந்து
தலைநகரில் வலம் வரத் தொடர்ந்து
வாழ்த்தும் அலைப்பிரியன்.

எஸ்.பி.சுதா
கடுக்காமுனை.

என் அன்புள்ளம் பொருந்திய தமிழ் அலைக்கு வணக்கம்!

அலையே நீ சுமந்து வரும் ஆக்கங்கள் யாவும் தரமானவை. தமிழ் அலை என்றாலே தமிழ் பேசும் நெஞ்சங்களைக் கொள்ளை கொண்ட சேவை மட்டுமல்லாமல் இலங்கையில் நடக்கும் தீய சக்திகளின் திருட்டு வேலைகளையும் கபடி விளையாட்டுகளையும் உடனே எடுத்து மக்களுக்கு தெரியப் படுத்துகிறாய். எனவே உன் பணி பல கோடி ஆண்டுகள் தொடர என் இனிய வாழ்த்துக்கள்.

எஸ்.என். ஆர்த்தீபன்

**அன்பிற்கினிய தமிழ் அலைக்கு வணக்கம்!**

அலையே நீ சுமந்து வரும் ஆக்கங்கள் யாவும் தரமானவை. அதிலும் இந்தியாவும் ஈழத்தமிழரும் என்ற பகுதி என்னை மிகவும் கவர்ந்தவை. எனவே வையகம் எங்கும் அலை பாய என் வாழ்த்து.

எம்.சுமதி, கதிரவெளி.

### தவறி விட்டதாக தவறு விட்ட தாமரைமைந்தனுக்கு.

"தமிழ் அலை" வாரவெளியீட்டில் கடந்த அலையின் வாசகர் பகுதியில் ''தாமரைமைந்தன் தாண்டவன்வெளி'' என்ற பெயரினில் எழுதிய நட்புள்ளத்திற்கு து.கோமளமைந்தன் பின்வருமாறு பதிலுரைக்கிறார்.

கடிதத் தொடக்கத்தில் ''தவறிவிட்ட'' என்று குறிப்பிட்டதில் பெருந்தவறு இருப்பதை குறிப்பிட விரும்புகிறேன். ஏனெனில் ''தமிழீழத்தைத் தெரிந்து கொள்வோம்'' என்ற பகுதி ஒரு தொடர் பொது அறிவு வினா-விடைத் தொகுப்பே ஒழிய தனிக்கட்டுரை அல்ல. எனவே அது குறிப்பிட்ட தொடர் முடிந்தாலே புலப்படும் விடயத்தைத் தொகுத்தே வருகிறோம் ''அசண்டையீனமா?'' என குறிப்பிட்டு எதைத் தாமரை மைந்தன் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தேடிக் கொடுத்த விடயங்களையே தொகுத்துத் தருகிறேன். தொகுக்கும் விடயங்கள் அனைத்தும் பத்திரிகை பிரசுரிப்பதில்லை,.இடம் கருதி குறித்த தொகையையே பிரசுரிப்பார்கள்.ஏலவே பல வினாக்கள் தொகுக்கப்பட்டுள்ளது. அவற்றுள் பல விடயங்கள் இருக்கும் மேலும் வினாக்கள் காலக்கிரமமாகத் தொகுக்கப்படுவதில்லை என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.

பல சிரமங்களுக்கு மத்தியில் பல்வேறு அழுத்தங்களுக்கு மத்தியிலும் வள நெருக்கடி களுக்கு மத்தியிலும், இத் தொகுப்பைச் செய்து வருவதையும் குறிப்பிடலாம். ஏதும் தகவல் சேர்க்க விரும்பின் தகுந்த ஆதாரங்களுடன் ''தமிழ் அலை ''க்கு அனுப்பி உதவவும். எது எவ்வாறினும் தங்கள் மடலுக்கு நன்றி.

து.கோமளமைந்தன்.

### தமிழ் அலைக்கு எனது கோடி வந்தனங்கள்!

அலையே நீ சுமந்து வரும் ஆக்கங்கள் யாவும் என் மனதைக் கவர்ந் தது.அதிலும் சிறுவர் சிகரம், கவிதைக்களம், காலத்தால் அழியாத மாவீரர் வரலாறு,சிறுகதைகள் எல்லாமே அற்புதமானவை அலையே தமிழ் பேசும் மக்க ளின் நெஞ்சங்களில் விய ப்புட்ட வேண்டும் என்று வாழ் த்துகின்றேன்.

ஆர்.எஸ்.சுது, வாழைச்சேனை.

### தமிழ் அலைக்கு நன்றி!

எமது கிழக்கு ஈழ திருநாட்டின் ஒரே ஒரு தமிழ் பத்திரிகையான தமிழ் அலை வார இதழ் 26.11.2003 அன்று எங்கள் தேசிய தலைவரின் பிறந்த நாளை முன்னிட்டு அவரது வண்ணப்படம் ஒன்றும் சேர்த்து வெளியிட்டமை மிகவும் விரும்பத்தக்கது. அத்துடன் செய்திகள் விறுவிறுப்பாக அவசர அவசரமாக வெளிவருகின்றது. இதற்காக எமது . இதய பூர்வமான நன்றியைத் தெரிவிக்க வேண்டும். மேலும் தற்போது தமிழ் அலை நாளிதழ் பத்திரிகை மிகவும் நல்ல அம்சங்களுடன் வெளிவருவதையிட்டுப் பெருமிதமாய் இருக்கிறது. உதாரணத்திற்குத் திங்கள் வளம், ஆரோக்கிய குறிப்புக்கள், கிராமங்களின் அவலம், என்பன மிகவும் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய தரமான ஆக்கங்கள். வார வெளியீடான தமிழ் அலை ஞாயிறு வெளியீடும் அசத்தலாக உள்ளது. இன்னும் சொல்லப்போனால் ஈழத்திருத் தலங்களில் ஒன்றான தெய்வீக தலம் தாந்தாமலை முருகன் கோயில் பற்றியும் அங்கு தங்கியிருக்கும் எங்கள் சற்குரு முத்தையா முனிவர் பற்றியும் தமிழ் அலை வாயிலாக அறியக்கிடைப்பதையிட்டு மிக்க மகிழ்ச்சி. எனவே மீண்டும் தமிழ் அலைக்கு எமது நன்றிகள். பாராட்டுக்கள். வாழ்க! வளர்க!

என்றும் அன்புடன்
யசோதர்.

### கண்ணுக்குள் குடியிருக்கும் அலையே!

கன்னத்தில் நினைவிருக்கும் அலையே, கன்னத்தில் முத்தமிடும் அலையே, பேரின்பம் விளைந்திருக்கும் அலையே, புன்னகைத்து மயக்கிவிடும் அலையே, என்னுயிரின் உயிரான தமிழின் நன்மக்கள் நாம் வாடும் நிலையை மண்ணுலகு எங்கும் பறைசாற்றி மாண்புறவே வாழ்க தமிழ் அலையே!

செ. சின்னவன்
புதிய கல்முனை வீதி கல்லடி.

## விடுகதைகளும் விடைகளும்

01. போட்டத்தை எடுக்க முடியாது. என்றாலும் பூமிக்கது அழகாச்சு அது என்ன?

02. கண்ணீர் விட்டே கடைசி வரை ஒளி தருவான் அவன் யார்?

03. வாயிலே தோன்றி வாயிலே மறையும் பூ அது என்ன?

04. சட்டைபையில் அவன் இருந்தால் அங்கு வேறு யாரும் இருக்க முடியாது அது என்ன?

05. உயிரில்லாத நீதிபதிக்கு ஒழுங்காய் தீர்ப்புக் கூறினர் அது என்ன?

06. கல் வீட்டுத் தாத்தா மெதுவாகத் தான் நடப்பார் அவர் யார்?

07. மழைக்காலம் வந்து விட்டால் பாட்டு எடுப்பாள் அவள் யார்?

08. தீக்குளித்தாலும் திடமாக இருப்பாள் அவள் யார்?

09. வீட்டுக்கு வந்த விருந்தாளி தங்குவதே ஓர் ஆண்டு அது என்ன?

10. உனக்குச் சொந்தமானது. ஆனால் உன்னை விட அதிகமாக மற்றவர்களே உபயோகிப்பர் அது என்ன?

### விடைகள்

| | |
|---|---|
| 01. கோலம் | 06 ஆமை |
| 02. மெழுகுதிரி | 07 தவளை |
| 03 சிரிப்பு | 08 செங்கல் |
| 04 ஒட்டை | 09.கலண்டர் |
| 05 தராசு | 10 பெயர் |

இ.சதோதரன்
மட்: பெரியபோரதீவு பா.வி

## சிறுவர் சித்திரம்

### சிங்கமும் யானையும்

சிங்கம் ஒன்று ஒரு காட்டில் வசித்து வந்தது. ஒரு நாள் சிங்கத்திற்குத் திடீரென ஒரு யோசனை வந்தது. அது, எனக்கு இவ்வளவு பலம் இருந்தும், இரும்பு போன்ற நகங்களும், பற்களும் இருந்தும் என்ன பயன்? நிம்மதியாய் இருக்க முடியவில்லையே! கேவலம் இந்தச் சேவல் கூவுகின்ற சத்தம்




என்னை நடுங்க வைக்கிறது. அதை நிறுத்தும் அளவிற்குக் கூட நான் பலம் பொருந்தியவனாக இல்லை. என்னால் தாங்க முடியவில்லையே. இவ்வாறு பயந்து கொண்டே வாழ்வது ஒரு வாழ்க்கையா? என்று தனக்குள்ளேயே முணுமுணுத்து நொந்து கொண்டது.

இப்படியாக சிங்கம் கவலையுடன் ஓர் மரத்தடியில் அமர்ந்திருக்கையில் அக் காட்டின் வழியாக ஒரு பெரிய யானை ஒன்று சிங்கத்தின் அருகாக நடந்து கொண்டு வந்தது. அது மிகவும் கவலையுடன் தன் காதுகளை முன்னும் பின்னுமாக அடித்துக் கொண்டே நடந்தது. யானையைப் பார்த்த சிங்கமானது ஏனப்பா, உனக்கென்ன கவலை? உன் உடலைப் பார்த்தாலே எந்தப் பிராணியும் பயந்து ஓடுமே! உன்னை எதிர்க்கக் கூடிய பிராணியும் இருக்கிறதா? எதற்காக நீ கவலையோடு நடக்கிறாய்?" என்று யானையைக் கேட்டது.

சிங்கத்தின் வார்த்தையைச் செவி சாய்த்துக் கொண்ட யானையானது சிங்கத்தைப் பார்த்து இதோ என் காதுப் பக்கத்தில் பறக்கிற குழவிகளைப் பார்த்தாயா? என்று கூறிவிட்டு, இவை என் காதுக்குள் போய் கொட்டிவிட்டால் போதும், தாங்கமுடியாத வலி ஏற்படும். அதற்காகத்தான் குழவிகள் காதினுள் புகாதபடி காதுகளை ஆட்டிக் கொண்டே வருகிறேன்" என்று கூறி சிங்கம் இருந்த இடத்தை விட்டு நகர்ந்து அப்பால் சென்றது.

யானை சென்ற பின்னர் சிங்கம் சற்று சிந்திக்கத் தொடங்கியது. அப்போது தான் அச்சிங்கத்திற்கு ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கவலை வெவ்வேறு ரூபத்தில் இருக்கத்தான் செய்யும் என்பது தெரிந்தது. அவ்விதமான கவலைகளில் ஒன்றுதான் தனக்கும் ஏற்பட்டிருக்கின்றது என்பதையும் தெளிவாக அறிந்து கொண்டது. அத்தோடு வாழ்க்கையில் உள்ள நல்ல பல விஷயங்களை இப்படிப்பட்ட சிறுசிறு கவலைகள் மறைத்துக் கொண்டிருக்கின்றது என்பதையும் நன்கு புரிந்து கொண்டது.

அதிலிருந்து சிங்கம் ஓர் முடிவு எடுத்தது. இன்றிலிருந்து நாம் கவலைகளைப் பொருட்படுத்தாது என்றுமே ஒரே மாதிரியாக மகிழ்வுடனும், சந்தோஷத்துடனும் வாழ்வது என்று தனக்குத்தானே சமாதானப்படுத்திக் கொண்டது. அன்றிலிருந்து அச் சிங்கமானது கவலைகளை விட்டு மகிழ்ச்சியாக அக் காட்டிலே வசித்துக் கொண்டு வந்தது.

### எனது ஆசை அம்மா



ஆசை நிறைந்த அம்மாவின்
அரிய சொற்கள் கேட்க வேண்டும்.
அன்பு கொண்ட அப்பாவின்
ஆணைப்படி நடக்க வேண்டும்
பாசம் நிறைந்த தம்பிக்கு
பண்பு பல ஊட்ட வேண்டும்.
நான் பிறந்த நாட்டிற்கு
நன்மைகளைச் செய்திடவே

நல்லதொரு டாக்டராக வரவேண்டும்.
நலமாய் மக்கள் வாழ்ந்திடவே
சேவைகள் பல செய்திட வேண்டும்.

க.சஜாத்மிகா தரம் 2V
மட்/ கல்லடி வி.ம.ம.வி.

### பொன் மொழிகள்

*. அன்பும் சிரிப்பும் இல்லையேல் மகிழ்ச்சியில்லை

*. உயர்ந்த உண்மை மலர்வது ஆழ்ந்த அன்பிலேயே.

*. கடின உழைப்பு, நேர்மை, விடாமுயற்சி, உறுதியான சிந்தனைகள் வெற்றிக்கு அடிப்படை.

*. சுதிரவனொளியை நோக்கியே முகத்தை நீ வைத்துக் கொண்டால் நிழலைப் பார்க்க மாட்டாய்.

*. உனக்கு [illegible] நீ பிறருக்கு செய்ய [illegible].

*. நன்றாக [illegible] நல்லது தான். ஆனால் நன்றாக செய்வது அதிலும் நல்லது.

*. நண்பனுக்காக உயிரைக் கொடுப்பது என்பது எளிது. ஆனாலும் உயிரைக் கொடுப்பதற்குரிய நண்பன் கிடைப்பது அரிது.

*. எவருடன் வாழும் போது நண்பர்கள் உன்னை அறிவர். வறுமையில் நீ நண்பர்களை அறிவாய். [illegible] பெரிய மனிதனுக்கு முதல் அடையாளம் பணிவாக இருத்தல்.

*. எதற்கும் அஞ்சாதே, எதையும் வெறுக்காதே, யாரையும் ஒதுக்காதே. உன் பணியை ஊக்கமுடன் செய். இ.இளம்பிறை

## உலக நாடுகளும் தலை நகரங்களும்

| நாடு | தலைநகர் |
|---|---|
| 01. ஆப்கானிஸ்தான் | காபுல் |
| 02. பெல்ஜியம் | பிரசல்ஸ் |
| 03. கனடா | ஒட்டாவா |
| 04. சீனா | பீகிங் |
| 05. ஜேர்மனி | பொன் |
| 06. இந்தியா | புதுடெல்லி |
| 07. குவைத் | குவைத் சிட்டி |
| 08. ஈராக் | பக்தாத் |
| 09. இத்தாலி | ரோம் |
| 10. யப்பான் | டோக்கியோ |
| 11. பாகிஸ்தான் | இஸ்லாமாபாத் |
| 12. பிலிப்பைன்ஸ் | மணிலா |

இ.ரேக்கா
மட்/ புளியடிமுனை அ.த.க. பாடசாலை, சத்துருக்கொண்டான்.

சோ.அனுஜா
தரம்-08 கே
மட்-ஆரையம்பதி இ.மி.ம.வி



## இலங்கை பற்றிய சிறு வினாவிடை

01. இலங்கை அமைந்துள்ள கண்டம் எது?
ஆசியாக்கண்டம்

02. இலங்கை அமைந்துள்ள சமுத்திரம் எது?
இந்து சமுத்திரம்

03. இலங்கையின் தலை நகரம் எது?
கொழும்பு

04. இலங்கையின் பரப்பளவு எவ்வளவு?
65610 சதுர கிலோமீற்றர்

05. இலங்கையை முதலில் சொர்க்க பூ மி என அழைத்தவர் யார்?
ஜொண்டி மாறிஞ்ஞோலி

06. இலங்கையில் உள்ள உயரமான நீர் வீழ்ச்சி எது?
பம்பரகந்த

07. இலங்கையில் உள்ள உயரமான மலை எது?
பீதுறு தாலகால

08. இலங்கையில் நெல் ஆராய்ச்சி நிலையங்கள் எவை?
பத்தள கொட, ஹிங்குராகொடை.

09. இலங்கையில் பயிரிடப்படும் இறப்பர் செய்கையினை ஆராய்ச்சி நிலையம் எது?
அகலவத்தை

10. இலங்கையில் பயிரிடப்படும் தென்னையின் முக்கிய 3 முக்கோண பிரதேசங்கள் எவை?
குருநாகல், சிலாபம், கொழும்பு

சி.சிவரமணன், மாமாங்கம்
மட்டக்களப்பு.

## விஞ்ஞானக் கருவிகள்

அல்டி மீற்றர் - விமானம் பறக்கும் போது உயரத்தை அளக்கும் கருவி.
அமீற்றர் - மின்னோட்டம் அளக்கப் பயன்படும் கருவி.
அனிமோ மீற்றர் - காற்றின் வேகம், திசை என்பவற்றை அளக்கப் பயன்படும் கருவி.
அடியோ மீற்றர் - ஒலியின் அளவை வலிமையை அளக்கப் பயன்படும் கருவி.
பரோ மீற்றர் - காற்றின் அமுக்கத்தை அல்லது நழுவு வீதத்தை அளக்கும் கருவி.
கலோரி மீற்றர் - வெப்பத்தின் அளவை அளக்கும் கருவி.
காடியோ கிராப் - இதயத்துடிப்பைக் காட்டும் கருவி.
பைனாகுலோர் - தொலைவிலுள்ள பொருட்களை பெரிதாக்கிக் காட்டும் கருவி.
குரோனோ மீற்றா - கப்பலில் வட திசையைச் சரியாகக் காட்டும் கருவி.
எலக்ட்ரோஸ் கோப் - மின்னோட்டத்தைப் பரிசோதிக்கும் கருவி.
ரேடர் கருவி- விமானத்தின் திசை, தூரம் உட்படப் பல்வேறு தேவைகளையும் பதியுங்கருவி.
ரோபோ - இயந்திர மனிதன் தொழிற்சாலைகளில் பயன்படுத்தும் இயந்திர மனிதன்.
நொட்ஸ் - கடலில் கப்பல், படகு போன்றவற்றின் வேகத்தை அளக்கும் கருவி
கலோரிப் பேறுமான மீற்றர் - உடல் கொள்ளும் உணவுப் பொருட்களின் வெப்பத்தினளவு.

சவுந்த்ர நாயகம் - சந்தியா. குறிஞ்சாமுனை. கன்னன்குடா.

## அறிந்து கொள்ளுங்கள்

01. அண்மையில் விசா மறுக்கப்பட்டதால் நாட்டை விட்டு வெளியேறிய லண்டன் டெய்லி கிராப் பத்திரிகையின் இலங்கைக்கான நிருபர் யார்?
போல் கரிஸ்

02. நிலக்கரியைப் பயன்படுத்தி கோக் என்று அழைக்கப்படும் அனல் மின் நிலையத்தை திருமலையில் அமைக்கவுள்ள நாடு எது?
இந்தியா

03. 2002ஆம் ஆண்டில் புவி உச்சிமாநாடு நடைபெற்ற நாடு
தென்னாபிரிக்கா

04. இலங்கையின் சமாதான முயற்சிகளில் ஈடுபட்ட ஜப்பானின் விசேட தூதுவரின் பெயர் என்ன?
ய்சூசிஅகாசி

05. கடந்த 03மாத காலமாக உலகை அச்சுறுத்தி வரும் சாஸ்ஸ் நோயின் ஆரம்பம் எங்கே?
சீனா

06. அனல் மின் நிலையம் மாத்தறையில் எங்கே நிறுவப்பட இருக்கிறது?
ஓவியகொட

07. முதலாவது குளோரிங் குழந்தையின் பெயரென்ன?
ஏவாள்

08. அண்மையில் அமெரிக்க ஜனாதிபதி ஆற்றிய தனது கொள்கை விளக்க வுரையில் அணு ஆயுதத்தை உற்பத்தி செய்யும் மூன்று நாடுகளுக்கு எச்சரிக்கை விடுத்தார், அந்த மூன்று நாடுகளும் எவை?
ஈரான், ஈராக், வடகொரியா

எஸ். பிறேமினி
மட்/மகிழடித்தீவு ச.வி

# சட்டத்துறை பற்றிய வினாக்களும் விடைகளும்

**01. நீதித்துறையில் பொலிஸாரின் கடமைகள் சிலவற்றைக் குறிப்பிடுக?**

1. குற்றம் செய்தவர்களைக் கைது செய்து தடுத்து வைப்பதன் மூலம் குற்றம் புரியப்படுவதைத் தடுத்தல்.
2. போக்குவரத்து, சுகாதார மற்றும் உரிமை ஒழுங்கு விதிகளை மீறுபவர்களைத் தண்டித்தல்.
3. அரசுக்கும் அரச நிறுவனங்களுக்கும் பாதுகாப்பு அளித்தல்.

**02. சட்டத்துறையில் தாமதம் எற்படுவதற்கு சட்டத்தரணிகளும் ஒரு காரணம் என்ற அபிப்பிராயம் நிலவுகிறது. இதைத் தவிர்க்க சில வழிவகைகளைக் கூறுக?**

1. ஒரு நாளில் ஒன்றுக்கு மேற்பட்ட வழக்கை எடுப்பதைத் தவிர்த்தல்.
2. வழக்கை கூப்பிடும் போது அதனை விளக்கத்துக்கு எடுக்கத் தயாராக வருதல் வேண்டும்.
3. அவசியமற்று வழக்கை தள்ளிப் போடவைப்பது தவிர்க்கப்பட வேண்டும்.

**03. சட்டத்தரணிகளுக்கு உள்ள பொதுவான உயர்தொழில் நல்லொழுக்கங்களும் பொறுப்புகளும் சிலவற்றை குறிப்பிடுக?**

1. சட்டவாட்சியையும் தனிமனித உரிமைகளையும் மதித்து சமூகத்திற்கு அத்தியவசிய சேவை வழங்கலும் நீதியை வழங்க அரசுக்கு உத்வுதல்.
2. பொதுமக்கள் அனைவருக்கும் சேவை ஆற்ற தயாராக இருத்தல்.
3. உயர் தொழில் முடிவெடுப்பதில் சுதந்திரமா இருத்தலும் எடுக்கும் நடவடிக்கையில் பொறுப்புடன் இருத்தல்.
4. சட்டச் சேவைகளை ·ஏற்பாடு செய்வதில் தனியாதிக்கம் செலுத்தல்.
5. சொந்த மற்றும் உயர் தொழில் நடததையில் உயர்தராதரங்களைப் பேணல்.
6. இத்தொழில் தொடர்பான அரசியலமைப்பு சட்ட விதிகளுக்கு இணங்கி ஒழுகுதல்.

**04. இவை எந்த அமைப்பினால் வழி நடத்தப்படும்?**
உயர் நீதிமன்றம்

**05. நீதிமன்றத்துக்கு வெளியே பிணக்குகளைத் தீக்கும் சபைகள், நிறுவனங்கள் சிலவற்றைத் தருக?**

தொழில் நியாயசபை, வாடகைச்சபை, சுங்கத்திணைக்களம், மத்தியஸ்தசபை, மனித உரிமை ஆணைக்குழு, ஆலாட்சியாளர்(குறைகேள் அதிகாரி)

**06. நீதிமன்றத்தைப் பொறுத்தவரை சட்டத்தரணிக்கு உள்ள சில கடமைகளைக் கூறுக?**

1. நீதிபதியைத் தவறாக வழிநடத்தக் கூடாது
2. வழக்கில் ஒரு சட்டத்தரணி தோன்றும் போது அவர் நீதி நிருவாகத்துக்கு உதவ வேண்டும்.
3. ஒரு விடயம் தொடர்பில் சந்தேகம் வரும்போது தனது சேவை நாடுனரின் நலனைக் காட்டிலும் பொது நலனை முன்னிலைப்படுத்த வேண்டும்.

**07. தண்டனை சட்டக் கோவைகளின் கீழ் ஒரு விடயம் குற்றமாக இருந்த போதிலும் முழுமையான் பாதுகாப்பு அளிக்கும் 5சந்தர்ப்பங்களைத் தருக?**

1. தற்பாதுகாப்பு.
2. மனநோய்.
3. 8 வயதுக்கு உற்பட்ட சிறுவர் செய்யும் செயல்
4. 8 வயதுக்கும் 12வயதுக்கும் இடைப்பட்ட சிறுவர் செய்யும் செயல். ஆனால் செயலின் தன்மையை அறியாதவராகவும், போதிய முதிர்ச்சி அடையாதவராகவும் இருத்தல் வேண்டும்.
5. ஒரு செயலை போதிய பாதுகாப்புடன், முன் எச்சரிக்கை நடவடிக்கைகளுடன், தீய நோக்கின்றி செய்யும் போது விபத்து இடம்பெறல்.

**08. 1997 ஆம் ஆண்டு 3ம் இலக்க பிணைச்சட்டத்தின் மூலம் புகுத்தப்பட்ட முன் பிணை(Anticipatory dail)என்றால் என்ன?**

இச்சட்டத்தின் 21ஆம் பிரிவு முன் பிணை பெறுதல் தொடர்பான ஏற்பாட்டை செய்கிறது. ஈது பிணை தொடர்பாக செய்யப்பட்ட முக்கிய மாற்றமாகு[illegible]ந்த ஒரு நபரும் பிணையில் விடப்பட முடியாத தவறு ஒன்றிற்கு தாம் கைது செய்யப்படுவோம் [illegible] சந்தேகப்படும் சந்தர்ப்பத்தில் முன் [illegible]ணபெற விண்ணப்பம் செய்தல். ஈது மனுவுட[illegible] சத்தியக் கடதாசி மூலம் செய்யப்பட வேண்டும்.

**09. புதிய பிணைச்சட்டம் 1979ஆம் ஆண்டின் குற்றவியல் நடவடிக்கை முறைக் கோவையின் பிணை தொடர்பான எந்தப் பிரிவுகளை பதிலீடு செய்கிறது?**

பிரிவு 114,115,402,403,404

**10. பொலிஸ் சேவையினை மேம்படுத்தக் கூடிய சில வழிகளைக் குறிப்பிடுக?**

1. ஊழல், அரசியல் விடயங்களில் இருந்து விலக்கி வைக்கப்பட[illegible] வேண்டும். எனவே இதில் பொதுமக்களி[illegible] பங்கு முக்கியமானது.
2. பொலிஸாரின் அன்றா[illegible] பணிகள் புதிய விடயங்கள் தொடர்பில் போதிய பயிற்சி அளித்தல்.
3. பொலிசாரின் கல்வி மட்டத்தையும் உயர்த்த ஊக்குவிக்கப்படல் வேண்டும்.
4. குறிப்பிட்ட சில துறைகளில் விசேட நிபுணத்துவம் பெறவைக்கவேண்டும். (உதாரணம்-பிள்ளை துஷ்பிரயோகம், பெண்கள் கடத்தல்)

**11. கடுமையான குற்றம் ஒன்றுக்கு குற்றம் சாட்டப்பட்டவரை விளக்கம் முடியும் வரை தடுப்புக் காவலில் வைத்திருத்தல் அவசியம்?**

ஆம், ஏனெனில் அவரை வெளியில் விடுவதன் மூலம் முக்கிய சாட்சியங்களை அழிக்கலாம், சாட்சியங்களை உருவாக்கல், ஒடிமறைத்து நீதிமன்ற விளக்கத்திற்கு சமூகம் அழிக்காமல் இருக்கலாம்.

**12. பிணைகளின் வகைகள் எவை?**

1. பணப் பிணை- குறித்த பணத்தைச் செலுத்துவதன் மூலம் பிணையில் விடல்.
2. பிணை முறி- ஒருவர் தான் பிணைக்குப் பதிலாக தான் மீண்டும் தோன்றுவதாக அல்லது பிணைகளை ஏற்றுக் கொள்வதற்குப் பதிலாக ஒரு முறி ஒன்றை எழுதி நிறைவேற்றி பிணையில் வரல்.
3. ஆட்பிணை- இங்கு ஒருவரை பிணையில் விடும்போது நீதிமன்றத்தில் தேவையானபோது தோன்றுவார் என உறுதி வழங்கி தனது சார்பில் அவருக்குப் பிணை கேட்டல்.

**13. ஏன் சட்டமும் சமூகமும் ஒன்றுடன் ஒன்று மிக நெருக்கமாகப் பின்னிப் பிணைந்து காணப்படுகிறது?**

ஏனெனில் சட்டமும் சமூகமும் ஒன்றின் மீது ஒன்று ஆதிக்கம் செலுத்தி ஒன்றை ஒன்று மாற்றி விடுகிறது. ஒரு சமூக மாற்றத்திற்கு சட்டமே மிக முக்கிய பங்கு வகிக்கிறது. ஆதிகாலத்தில் இருந்து சட்டத்தரணிகளே சமூக மாற்றத்தின் முன்னணியில் இருந்தது. சட்டவாக்கப் போக்கையும் அரசியல் பாங்கையும் வழி நடத்தி இலங்கை சுதந்திரம் அடைவதற்கு மிக முக்கிய பங்கினை வகித்ததில் இருந்து அறியலாம்.

**14. சட்டவாக்கத்திலும் சட்ட சீர் திருத்தத்திலும் சட்டத்தரணிகளின் பங்கு என்ன?**

சட்டத்தரணிகள் பல்வேறு சட்டங்களைத் துணிந்து ஆராயும் நிலையில் இருப்பதுடன் நடைமுறையில் எவ்வாறு தொழிற்படுகின்றது. அதன் கருத்தமைவு, இதனுடைய ஆதாரம் அதில் உள்ள பலவீனங்கள், குறைபாடுகள், அது பொது மக்களின் தேவையைப் பூர்த்தி செய்ய வல்லனவா? எனக்கண்டறிந்து சட்ட சீர்திருத்தத்திற்குக் குறிப்பிடத்தக்க பங்களிப்பு செய்வார்கள்.
மேலும் சட்டவாக்கத்திலும் பாராளுமன்ற உறுப்பினர்கள் பெருமளவில் சட்டத்தரணிகளாக இருப்பதாலும், பல முக்கிய சட்டவாக்கங்களில் உயர் நீதி மன்றத்தின் பங்களிப்பும் சட்டத்தரணிகளை சட்ட வாக்கத்தில் பங்களிக்க செய்கிறது.

**15. மக்களால் எதிர் கொள்ளப்படும் பிரச்சினைகளை சட்டத்தின் மூலம் எவ்வாறு சட்டத்தரணிகள் தீர்த்து வைக்கலாம்?**

1. தனக்கிருக்கும் சட்ட உரிமைகள், பரிகாரங்கள் பற்றி அறியாத ஏழைகளுக்கு அவற்றை அறியப்படுத்தல்.
2. தமது தொழிலுடன் நேரடியாகத் தொடர்புபடாத சட்டத்தோடு தொடர்புபட்ட விடயங்கள் பற்றி பொதுமக்களுக்கு அறிவூட்டல்.
3. சட்டத்தை மதிக்காத அல்லது சட்டத்தை மீறுவது பற்றி அறியாத மக்களுக்கு அது பற்றி அறிவூட்டல்.
4. சட்ட உதவி பெறுவது தொடர்பில் எங்கு செல்ல வேண்டும் என்பது பற்றி அறிவூட்டல்.

**16. ஏன் பொதுமக்கள் சட்டங்கள் பற்றி அறிந்திருக்க வேண்டும்?**

பல அனர்த்தங்களில் இருந்து மக்களைப் பாதுகாப்பதற்கு பெருந்தொகையான சட்டங்களும் அதற்கான பரிகாரங்களும் உள. இது பற்றிஅவர்களுக்குத் தெரிந்திருந்தால் மட்டுமே தமக்கு இழைக்கப்படும் தீங்குகளைத் தடுக்கலாம். தம்மைச் சுற்றி நிகழும் பல பிரச்சினைகளை அவர்கள் சட்டத்தை அணுகி தீர்த்துக் கொள்ள முயும்.
உதாரணம்- வாடகைக் குடியிருப்பு பாவனையாளர் பாதுகாப்புச் சட்டம்

**17. நீதியை அடைவதற்கான பாதையைத் தடுக்கும் மிக முக்கியமான தடையாக விளக்குவது அறியாமையே. இக் கூற்றை விளக்குக?**

மக்களுக்குத் தெரியாத உரிமைகளும் கடமைகளும் சட்டத்தில் அடங்கியிருப்பதில் நன்மை இல்லை. எனவே மக்களின் அறியாமையைப் போக்குவதற்கு அவர்களுக்கு சட்ட விழிப்புணர்வை ஊட்டுவது சட்டத்தரணிகளின் கடமை. இலங்கை போன்ற நாடுகளுக்கு இது அவசியம்.

வரலாற்றுச் சிறுகதை

# நாகதேசம்

நீண்ட நெடுங்காலமாக நாக தேசத்தில் நிலைத்திருந்த சிங்கள ஆதிக்கத்தை நிர்மூலமாக்கி விட்ட கலிங்க வம்சத்தவனும், வீர சைவனுமான உக்கிர சிங்கன் அந்தத் தேசத்தின் அரசனாக மகுடம் தரித்துக்கொண்ட பெருமிதத்தில் அவனது தலை நகரம் கதிர மலையில் பட்டொலி வீசி பறந்து கொண்டிருக்கும் அரவக்கொடி 'நாங்கள் ஒரு சுதந்திர தேசம்' என்று உலகிற் கெல்லாம் சொல்லிக் கொ ண்டிருக்கிறது.

வரலாற்றுச் சிறப்பு மிக்க தனது வெற்றியின் அடையாளமாக வான் தோயப் பறந்து கொண்டிருந்த அரவக் கொடியைக் கண் குளிரப் பார்த்து நின்ற உக்கிர சிங்கத்தின் உள்ளம் நாகர் என்னும் நாகரிகம் அடைந்த திராவிட மக்க ளின் பூர்வீக வரலாற்றேட்டின் சில பக்கங்களில் அப்படியே பதிந்து விடுகின்றது.

பழம் பெருமை மிக்க பாரத பூமியின் தென் புலத்தில் இந்து சமுத்திரத்தின் ஆர்ப்பரிப்பின் மத்தியில் எவ்வித அச்சமுமின்றி எழுந்து நிற்கிறது ஈழம் எனும் சிறு தீவு. பல்லாயிரம் யுகங்க்ளுக்கு முற்பட்ட மயோசின் காலத்தில் கடல் வாய்ப்பட்ட குமரிக் கண்டத்தின் ஒரு சிறு துணிக்கை யாகத் தோன்றும் இந்த சின்னஞ் சிறிய தீவின் வடபால் மணிபல்லவத்தை மையமாகக் கொண்டு அமைந்தி ருக்கும் நாகதேசத்தின் மகாதித்த, ஜம்பு கோணம் என்னும் துறைமு கங்களில் அயல் தேசங்களின் வணிகக் கப்பல்கள் ஒன்று கூடுவதால் எழும் ஓசை இந்து மகா சமுத்திரத்தின் பேரொலியையும் அப்படியே தன்னுள் ஜீரணித்துப் போடு கின்றது.

பண்டைய தேசங்களான சீனம், `கிரேக்கம், உரோம், மகதம்

**வாகரை வாணன்**

ஆகியவற்றைச் சேர்ந்த அந்த நாவாய்கள் தாமிரப் பொருளோடு வேறு பல வணிகப் பொருட்களையும் ஏற்றி வந்து துறைமுகத்தில் இறக்கி விட்டு நாக தேசத்தின் முத்துக்கள், இரத்தினங்கள், சங்கு வளையல்கள், யானை த்தந்தங்கள், கார்னேலியன் மணிகள், மான் கொம்புகள் என்பவற்றோடு தம் தாயகம் நோக்கி நகருகின்றன.

காலையிலும், மாலையிலும் அவ்விருபெருந் துறைமுகங்களில் நிகழும் இந்தக் கண்கொள்ளாக் காட்சியை தன் கற்பனைக் கண்முன் கொண்டு வந்து நிறுத்திக் களிப்படைந்த உக்கிர சிங்கன் மனம் இன்னுமொரு முக்கிய நிகழ்வில் தோய்ந்து போகின்றது.

வட இந்தியாவின் சிங்கபுர என்ற நாட்டின் இளவரசன் விஜயன் தனது தோழர்கள் எழுநூறு பேரோடு ஈழத்தின் தெற்கில் தாமிர பரணியில் வந்திறங்கி அப்பிரதேசத்தின் இயக்கர் இனத் தலைவி குவேனியை கிறிஸ்சவத்து நகரில் திருமணம் செய்து இயக்கர்களின் அரசனாவதற்கு முன்பே நாக தேசத்தின் அரியணையில் மகோதரன் என்னும் மன்னன் அமர்ந்திருந்த பெருங்கற்காலம் அது!.

ஒரு நாள்....... மன்னன் மகோதரனுக்கும் அவன் மருமகனும் கந்த மாதனத்தின் அரசனுமான



குலோதரனுக்குமிடையே ஓர் இரத்தின சிம்மாசனத்தின் பொருட்டு ஒரு பெரும் மோதல் ஏற்பட்டு விடுகின்றது.

தம் இனத்தைச் சேர்ந்த நாக அரசர்களிடையே தோன்றிய இந்தத் தகாத பிணக்குகளைக் கேள்வியுற்ற புத்த பெருமான் மகதத்தின் தலைநகரம் பாடலிபுரத்தில் தான் தாம் ஆற்றிக் கொண்டிருந்த தர்ம போதனைகளை நிறுத்தி விட்டு விரைந்து மணிபல்லவம் வந்து சேர்கின்றார். சண்டை நின்று சமாதானம் பிறக்கின்றது. மன்னர்கள் இருவரும் மனமுவந்து, பூசலுக்குக் காரணமான இரத்தின சிம்மாசனத்தைப் புத்த பெருமானின் பாத கமலங்களில் வைத்துப் பணிகின்றனர்.

புத்தரின் தர்ம போதனை, நாகர்களின் பூமியில் நல்ல பலன் தருகின்றது. சிந்துவெளி மக்கள் போல சிவ வணக்கத்தையும், நாக வழிபாட்டையும் கைக்கொண்டிருந்த அம்மக்களில் அநேகர் பௌத்த நெறியைத் தழுவுகின்றனர். இது போல ஈழத்தின் தென்பால் அமைந்திருந்த கல்யாணி இராச்சியத்தின் நாக மன் னன் மணியக்கியனும், தனது புராதன வழிபாட்டைப் புறம் தள்ளி விட்டு 'புத்தம் சரணம் கச்சாமி' சொல்லத் தொடங்குகின்றான். இந்த மதமாற்றம் வட இந்தியாவின் சாம்ராட் அசோகன் காலத்தில் ஈழத்தின் மன்னனாக விளங்கிய தேவ நம்பிய தீசன் ஆட்சியில் இன்னும் அதிகமாகின்றது. பௌத்தத்தின் இப் பெரும் செல்வா க்கை நாக தேசத்தின் கிழக்கிலும், மேற்கிலும் எழுந்த ஸாலிப்பத விகாரை, திஸ்ஸ விகாரை ஆகியன வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன.

நாகர்களின் தொன்மை மிகு வரலாற்றைத் தனது உள்ளத்தில் நிறுத்தி, அதில் மீண்டும் மீண்டும் தோய்தெழுந்த உக்கிர சிங்கன் அந்த சிவ பூமியில் பௌத்தம் அடைந்து வரும் துரித வளர்ச்சியை எண்ணிப் பார்த்த போது அவனது மனதில் ஒரு வித வெறுப்பும், சினமும் ஏற்படவே, அந்தப் புரம் திரும்புகின்றான். அச்சமயம் அவனது தலைமை அமைச்சர் ஓடோடி வந்து அவனது காதில் ஒரு செய்தியைக் கூறுகின்றார். அது கேட்ட அரசனின் முகம் அக்கினிக் குண்டமாகின்றது. வாயில் இருந்து ஓர் ஆணை பிறக்கின்றது.

அடுத்த கணம்.... தீர்த்த யாத்திரை மேற் கொண்டு நாகதேசம் வந்த சோழ நாட்டு இளவரசி மாருதப்புரவல்லி ஒரு கைதி யாக அரசன் முன் கொண்டு வந்து நிறுத்தப்படுகின்றாள். உக்கி ரசிங்கன் கண்கள், இளவரசியின் உச்சி முதல் உள்ளம் கால்வரை ஊடுருவுகின்றன.

மாருதபுரவல்லி மகா அழகி. அந்த அபூர்வ அழகு நாக நாட்டு மன்னன் உக்கிர சிங்கனை அவளது அடிமையாக்கின்றது. சோழ இளவரசி நாக நாட்டுச் சிம்மாசனத்தின் சொந்தக் காரியாகின்றாள்....

மத்தளம் முழங்க, வரிசங்கம் ஊத, உக்கிர சிங்கன் சோழ இளவரசியின் கைத்தலம் பற்றும் அந்த இனிய காட்சியைக் கண்டு மகிழ நாக தேசம் மட்டுமின்றி, தாமிர பரணியும் கதிர மலையில் கூடுகின்றது.

மனம் கவர்ந்த மங்கை நல்லாளுக்கு மாலை சூட்டிய உக்கிர சிங்கனின் கவலை இப்போது தனது தேசத்தின் பழம் பெருமையை மீட்டெடுக்கும் பணியின் பக்கம் திரும்புகின்றது. அதனைப் புரிந்து கொண்ட, மாருதப் புரவல்லியின் விருப்பத்திற்கிணங்க, மாவிட்டபுரத் தில் கந்தனுக்கு ஒரு கோயில் எழுப்பப் படுகின்றது. நகுலேஸ்வரம் புதுப்பிக்கப் படுகின்றது. இந்தியாவில் இருந்து கொண்டு வரப்பட்ட விக்கிரகங்கள் ஆலயங்களில் பிரதிஸ்டை செய்யப்படுகின்றன. காசிப் பிராமணர்களும் பெரிய மத்துளார் அந்தணர்களும் வரவழைக்கப்பட்டு நாக தேசத்தின் குறிப்பிடப்பட்ட பகுதிகளில் குடியேற்றப்படுகின்றனர். உக்கிர சிங்கனின் இந்தச் சிவப்பணிக்கு தமிழகத்தின் பல்லவர் காலச் சூழல் பெரும் உந்து சக்தி யாக அமைகின்றது.

நாகர்களின் புராதன கலாசாரப் பாரம்பரியங்களை மீட்டெடுத்து அவர்கள் தேசத்திற்கு ஒரு புதுப்பொலி வைத் தரும் பெரும் பணியில் உக்கிர சிங்கன் ஈடுபட்டிருந்தாலும் பௌத் தத்தின் பெரும் ஆதிக்கத்திற்குட்பட்டு விட்ட தனது தலைநகரில் இருந்து அரசாள்வதை அவன் அடி யோடு வெறுக்கின்றான். அதனால், நாகதேசத்திற்குப் புதியதொரு தலைநகரை அமைக்கும் நோக்கோடு அவன் வன்னிப் பிரதேசத்தில் திக் விஜயம் மேற்கொள்கின்றான்.

அதன் விளைவு... அப்பிரதேசத்தில் அலை கடல் பாயும் ஓர் அழகிய நெய்தல் சூழலில் 'பொங்கொலி நீர்ச் சிங்கை நகர்' பிரமாண்டமான கோட்டை கொத்தளங்களோடு அமைகின்றது. அகழி ஆறு என அசைகின்றது.

நாக தேசத்தின் புதிய சிங்கை நகரின் அத்தாணி மண்டபத்தில் அமர்ந்து அரசோச்சும் உக்கிர சிங்கன் முன் வன்னிப் பிரதேசத்தின் ஏழு குறு நில அரசர்களும் கப்பம் செலுத்தி காலடி பணிகின்றனர்.

---

## மாடும் தோடும்!

ஒருவர் தன் உயிருக்கும் மேலாக நேசித்து வளர்த்த மாடு திடீரெனக் காணாமல் போயிற்று. மிகுந்த மனவேதனையோடு தேடாத இடமெல்லாம் தேடி அலுத்து, சாப்பிடக் கூட மனமில்லாமல் நாடியில் கையை ஊன்றியபடி இருந்தார்.

**நகைச்சுவை முற்றம்**

இவரது பரிதாபத்தைப் பார்க்க முடியாமல் அயல் வீட்டுக்காரர் வந்து ''தாமோதரம், நீ பாடுபட்டு வாங்கியமாடு, தொலைந்து போக நியாயமில்லை எதற்கும் நீ ஒருதரம் இவர் சாஸ்திரியாரிடம் போய், வெற்றிலை வைத்துக் கேட்டுப்பார்!" என்றார்.

அப்படியே தாமோதரம் சாஸ்திரியிடம் சென்று சாத்திரம் கேட்டார்.

சற்று நேரத்திற்கெல்லாம் சாஸ்திரியார் வெற்றிலை பாக்கை எண்ணிக் கணக்கிட்டுப் பார்த்துவிட்டு நிமிர்ந்தார்.

''நீங்கள் உங்கள் உயிரைப்போல நேசித்த பொருளைப்பற்றிக் கேக்க வந்திருக்கிறீங்க. என்ன சரிதானே?"

இப்படிச் சாஸ்திரியார் கேட்டதும் தாமோதரருக்கு 'திக்' என்றது.

''உயிருக்கு உயிராக நேசித்தது உண்மைதான். ஆனால் இவர் பொருள் என்று சொல்கிறாரே! என்று தனக்குள் எண்ணிக் கொண்டு, ''சாஸ்திரியார், அது என்ன நிறம்?" என்று கேட்டார்.

''சிவப்பும் வெள்ளையும்!" என்றார் சாஸ்திரியார்

தாமோதரத்தாரின் மாடு சிவப்பு,வெள்ளையும் கலந்த நிறம் தான். அதனால் தாமோத்தாருக்கு சாஸ்திரியாரின் மேல் நம்பிக்கை வந்தது.

''சரி சாத்திரியார் அது எனக்குக் கிடைக்குமா? கிடைக்காதா?" என்று கேட்டபடி சாஸ்திரியைப்பார்த்தார்.

''நீங்க எதற்கும் பயப்பட வேண்டாம். கண்டிப்பாக அது கிடைக்கும் எதற்கும் நீங்கள் வீட்டுக்குச் சென்றதும் குடத்தடியில் பாருங்கள். பளிச் சென்று மின்னும்'''

இதைக் கேட்டதும் சாஸ்திரியாருக்கு பளீர்! பளீர் என்று கன்னத்தில் மின்ன வேண்டும் போலிருந்தது.

அவர் சாஸ்திரம் கேட்டுப் போனது மாடு. ஆனால் வெற்றிலையில் உதித்தது தோடு.

-மேனன் கொம்மாதுறை-

## இது நமது கதை நாம் பட்ட துயரக்கதை

# ஆடித் தீ

(4)

ஓ.கே.குணநாதன்

யுத்தத்தைத் தொடர்ந்து வந்த புத்தனின் புனித நாள் பௌர்ணமியாக இருந்ததனால் வெளியே களங்கமான ஒரு நிலவு காய்ந்து கொண்டிருந்தது.

பூரண நிலவைக் காரிருள் மேகங்கள் மறைக்க அடிக்கடி இருளும் ஒளியும் மாறி மாறி வந்து கொண்டிருந்தன.

அந்த நிலவொளியின் வெளிச்சத்தில் வீட்டின் முன் வாசலில் ஓங்கி வளர்ந்து நிமிர்ந்து நின்ற வேப்பு மரம் அதன் இலைகளை உதிர்த்தி துளிர் விடா நிலையில் பட்ட மரம் போல காட்சியளிக்கின்றது. அந்த மரத்தில் இருந்து பழுத்து விழுந்த இலைகள் காய்ந்து சருகுகளாகி வளவை நிறைத்துக் காணப்படுகின்றது.

எவ்வளவு கலகலப்பாக இருந்த வீடும் வளவும்......!

இக் காட்சிகளைப் பார்க்கும் போது விழிகளைக் கண்ணீர் நிறைத்தன. அதைத் தொடர்ந்து அவனுடைய சிந்தனையும் கடந்த காலத்தை நோக்கி அசைபோட ஆரம்பித்தது.

மகேந்திரனின் அப்பா கந்தசாமி. திருகோணமலையில் நிலாவெளியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தனியார் நிறுவனம் ஒன்றில் இலிகிதராகக் கடமையாற்றிய அவர், மட்டக்களப்பிற்கு மாற்றலாகி வந்தார்.

பொது நிறமும்.... அழகும் கம்பீரமான தோற்றமுடையவர். நல்ல பண்பாளர்.

அவருடைய கவர்ச்சி யான அழகில், நல்ல குணத்தில் மயங்கிய கனகம்மா அவர்மேல் காதல் கொண்டாள்.

அதன்பயன்...

மாமாங்கப் பிள்ளையார் ஆலயத்திலே கெட்டி மேளம் முழுங்க கழுத்தில் தாலி ஏறி திருமணம் நடந்தேறியது.

காலத்தின் துரித ஓட்டம்.. திருமண உறவு தந்த பயன்.... ஒரு வருடத்தில் ஒரு ஆண் குழந்தையைப் பெற்றுக்கொடுத்தது. அக் குழந்தைக்கு மகேந்திரன் என்று பெயரிட்டனர்.

குழந்தைப் பாக்கியம் பூமியில் பெரும் பாக்கியம். அளவோடு பெத்து பெரு வாழ்வு வாழ்வது மனிதனுக்கு அதிலும் பாக்கியம். ஆணொன்று பெண்ணொன்று இருந்து விட்டாலும் மேலும் பாக்கியம்.

நாம் இருவர் நமக்கிருவர் என்று வாழ்க்கை அமைந்து விட்டால் இன்றைய பொருட்களின் மலையேறிய விலைக்குப் பொருளாதாரப் பிரச்சினை ஏற்பட இடமேயில்லை. குடும்பத்தில் எங்கும் - என்றும் சந்தோசப் பூக்கள் மலரும்.

இரண்டு வருடங்களின் பின்பு இன்னுமொரு குழந்தை. அதுவும் பெண் குழந்தை பூமியை முத்தமிட்டது. அவள் நிலவு போலவே இருந்தாள். நிவேதா என்று பெயரிட்டு 'நிவே' என்று செல்லமாக அழைத்தனர்.

ரியூசன் கல்வியானது ஒரு நாகரீகக் கல்வியாக மாறியிருந்தது. அதிலும் மட்டக்களப்பைப் பொறுத்தவரை ரியூசன் கல்வியானது கல்வி வளர்ச்சிக்கு இன்றியமையாத தேவையாக இருந்தது.

மகேந்திரனுக்குப் பதினெட்டு. இளமைத் துடிப்பு வயது.

அன்றும் வழமை போலவே அரசடியிலிருக்கும் விபுலானந்தா ரியூட்டறிக்கு 'ரியூசன்' வகுப்பிற்குச் சென்று திரும்பிக் கொண்டிருந்தான்.

அப்பொழுது அவனது பக்கத்து வீட்டு அருள்யோகம் பைசிக்கிளில் வேகமாகப் பதறியடித்துக் கொண்டு வருகின்றார். மகேந்திரனைக் கண்டதும் அவனருகே 'சடுன் பிறேக்' போட்டு பைசிக்கிலை நிறுத்தி ''தம்பி மகேந்திரன் உங்க அப்பாவிற்குச் சுகமில்லை இருந் தாப் போல 'பிரசர்' கூடி மயங்கிக் கீழ விழுந்திட்டார். மயக்கம் தெளிந்து



எழும்பினவுடனே உன்னத்தான் கேக்கிறார். நீ உடனே வீட்டுக்குப் போ. நான் ஒரு காரைப் பிடிச்சித்து வாறன். ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போவம்.''

கூறிக்கொண்டு சிட்டாக பறக்கிறார்.

அவனுடையமனம் பதறுகி றது.

என்னபுதினமான வருத்தங்கள். கைப் பிரசர்... லோ பிரசர்....

''கடவுளே என்ன சோதனை!''

கடவுளைச் சபித்த படி பலம் கொண்ட மட்டும் எழுந்து நின்று பைசிக்கில் பெடலை அழுத்தி மிதித்தான்.

பைசிக்கில் வேகமாக.... வேகமாகப் பறந்தது.

அறையொன்றினுள் போடப்பட்டிருந்த கட்டில் ஒன்றிலே அப்பா மல்லாக்கப் படுத்துக் கிடந்தார். தலைக்கு இரண்டு தலையணைகள் உயரமாக வைக்கப்பட்டிருந்தது. காற்றோட்டத்திற்காக சேட் கழற்றப் பட்டிருந்ததால் விலா எலும்புகள் எல்லாம் விம்மி விம்மிப் புடைத்தன.

அருகே அம்மாவும் தங்கையும் செய்வதறியாது குந்திக் கொண்டிருந்தனர். அம்மாவின் கையிலே ஒரு விசிறி கண்களில் கண்ணீர்.

அயலில் உள்ளவர்கள் எல்லாம் ஒன்று கூடி விட்டனர். அவர்களின் கண்களில் காரை எதிர் பார்க்கும் ஆவல். உடனடியாக ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்ற அவசரம். அந்த நேரம் பார்த்தாற் போல அமைதியைக் கிழித்துக்கொண்டு வாசலிலே ஒரு கார் வந்து நின்றது.

சுகம் விசாரிக்க வந்த ஒட்டிய உறவுக்காரர்களும் ஒட்டாத உறவுக்காரர்களும் அப்பாவைத் தூக்கிச் சென்று காரிலே ஏற்றிக் கொள்கின்றனர். அவர் ஏதேதோ பிதற்றிக் கொண்டிருந்தார். மகேந்திரன் ஒன்றுமே புரியாமல் விளித்தபடி அப்பாவையே பார்த்துக் கொண்டு நின்றான்.

கார் புறப்படுவதற்கு ஆயத்தமான வேளையில் மயக்கம் ஓரளவு தெளிந்து அறிவு வந்த அப்பா அவனுடைய பெயரை உச்சரித்துக் கொண்டு உள்ளே ஏறும்படி கையால் சைகை பண்ணினார்.

காரினுள் இருந்தவர்கள்.

''தம்பி மகேந்திரன், உன்னையும் ஏறட்டுமாம்.... உள்ளுக்க ஏறுங்க.''

என்று அவனை அழைத்தார்கள்.

அவன் காரினுள் ஏறுவதற்காக் காரை நெருங்கினான்.

''ஆரு வரா விட்டாலும் பரவாயில்லை. தம்பி மகேந்திரன் மட்டும் கண்டிப்பாக வரட்டும். என்ற வார்த்தைகள் அப்பாவினுடைய வாயிலிருந்து உதிர்ந்து கொண்டிருந்தன.

செவி வழியாய் நுழைந்த அந்த வார்த்தைகள் இதய வலியாகி அவனையும் அறியாமல் அவனுடைய கண்கள் கண்ணீரைப் பனிக்கின்றன.

யாருக்கும் தெரியாமல் புறங்கையினால் சருமத்தில் மேயும் கண்ணீரைத் துடைத்தவாறு காரில் ஏறிக் கொண்டான்.

கார் புறப்பட்டது.

அப்பொழுது எதிர் பாராத விதமாக எங்கேயோவிருந்து வந்த மாட்டுக் கூட்டமொன்று காரை மறித்துக் குறுக்கறுத்துச் செல்கிறது.

ஒரு நோயாளியைக் கொண்டு செல்லும் பொழுது மாடு குறுக்கறுக்கக் கூடாது. மாடு குறுக்கறுத்தால் அபசகுணம் என்று சொல்வார்களே! அப்படியானால் அப்பாவின் நிலைமை.....!

இதை நினைக்கையிலே அவனுடைய மனம் அவனையுமறியாமல் கண்ணீரைச் சிந்துகின்றது. எவ்வளவோ கட்டுப்படுத்த முயன்றான். முடியவில்லை. கண்ணீரைப் புறங்கையால் துடைத்து விட்டு அப்பாவையே வைத்தகண் வாங்காமல் உற்றுப் பார்த்துக் கொண்டு இருக்கின்றான்.

மனதினிலே கார் இன்னும் வேகமாகப் போகாதா என்ற ஆதங்கம்.

வேகமாகப் பறந்து சென்ற கார் ஒடுங்கிய பாதைகளால் வளைந்து-நெளிந்து சென்று டாக்டர் செல்லையாவின் பிறைவேற் நேர்சிங் கோமில் தரித்து நின்றது.

காலில் சக்கரம் பூட்டியது போன்று ஓடிச் சென்று டாக்டரின் அனுமதியைப் பெற்று விட்டு காரினுள் இருந்த அப்பாவை மெதுவாகத் தூக்கி ஸ்ரெச்சரில் வைத்து அவசர அவசரமாகத் தள்ளிக் கொண்டு டாக்டரின் அறையினுள் நுழைந்தார்கள்.

அவசரமாக எழுந்து கொண்ட டாக்டர் அப்பாவைக் கட்டிலில் கிடத்தி செதெஸ்கொப்பின் உதவியுடன் பல நிமிடங்கள் போராடினார். இறுதியில் காதிலே பொருத்தி இருந்த செதெஸ் கோப்பைக் கழற்றிக் கையிலே எடுத்தவாறு ஒரு பெருமூச்சை விட்ட வண்ணம் அவனைப் பார்த்தார்.

அந்த அனுபவப் பார்வை ஏதோ சொல்ல முடியாத ஒன்றை சொல்லத் துடித்தது.

''தம்பி இவரை ஜெனரல் கொஸ்பிட்டலுக்குக் கொண்டு போய் வோட்ல அட்மிட் பண்ணுங்க...''

அவ் வார்த்தையைக் கேட்டதும் மகேந்திரன் செய்வதறியாது திகைத்து நின்றான்.

மௌனம் இடைவெளியாகின.

மட்டக்களப்பிலே மிகச்சிறந்த ஹாட் ஸ்பெசலிஸ்ட் டாக்டர் செல்லையாவே இப்படிச் சொன்னால்.....! அவனுடைய தலையில் யாரோ சம்மட்டியால் அடிப்பது போல ஒரு பிரமை.

அவனுடன் வந்தவர்கள் ஸ்ரெச்சரைத் தள்ளிக் கொண்டு காரை நோக்கிப் போகின்றனர். அப்பொழுது டாக்டர் மெதுவாக அவனை அழைத்து,

''தம்பி உங்கட அப்பாவுக்கு பிளட் பிரசர்.... நிலம கொஞ்சம் மோசமாகத் தான் இருக்குது. அதனால கொஞ்சம் கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்க''என்றார்.

அவன் வார்த்தைகளைத் தொலைத்தவனாக காரை நோக்கி கால் போன போக்கில் நடந்தான். கால்கள் பலமிழந்து தள்ளாடின.

(தீ தொடரும்....)

# அழிந்து போன தமிழ் பொக்கிசங்கள்

**நம்** முன்னோர் நமக்காகத் தேடிச் சேமித்த செல்வங்கள் பற்பல. அவற்றில் பல்வேறு சோதனைகளின் பின் நமக்குக் கிடைத்தவை சில கிடைக்காதவை பல கிடைத்தவற்றில் காட்டப்பட்ட மேற்கோள் பாடல்களைக் கொண்டு மறைந்த தமிழ் நூல்களை நாம் தெரிந்து கொள்ள முடிகிறது. அவற்றில் தான் எத்தனை எத்தனை கருத்துக் கருவூலங்கள் அடங்கி இருந்தனவோ யாரறிவர். நாமறி யோம் பராபரமே! தமிழ் நூல்கள் மறைந்து போனதற்குப் பற்பல காரணங்கள் கூறப்பட்டாலும். முக்கியமாக ஐந்து காரணங்கள் மிகமிகப் பொருத்தமாக இருக்கின்றன.

01. முக்கியமாக தமிழ் பிறந்து- வளர்ந்த தாயகமாம் குமரிக்கண்டத்தைக் குமுறி எழுந்த கொடுங் கடல் உட்கொண்டதாலும்.

02. தமிழகத்தில் அடிக்கடி ஏற்பட்ட மாற்றார் படைஎடுப்புகளாலும்.

03. அச்சக வசதி இல்லாமையும்.

04. அறியாமை சமயப்பகை காரணமாகவும்.

05. கரையானால் அரித்தவை தமிழ் நூல் மறைந்தன. மறைக்கப்பட்டன. முதற் சங்க, இடைச்சங்க காலத்தில் பாண்டி நாட்டின் தென்பகுதியில் இருந்த சில நிலப்பகுதிகள் இரண்டு பெரிய கடற் கோள்களினால் மறைந்து விட்டன. அந்நிகழ்வால் ஏராளமான ஏட்டுச் சுவடிகள் அழிந்தன அமிழ்ந்தன. இதை 'ஏரண முருவம் யோகம் இசை கணக்கிரதம் சாலம் தாரண மறவே சந்தம் தம்ப நீர் நிலமுலோகம் மாரணம் பொருளென்றின்ன மான நூல் யாவும் வாரி வாரணம் கொண்ட தந்தோ வழிவழிப் பெயருமான-"

எனக் கூறுகிறது.

அடுத்து ஆரியர் படையெடுப்பால் தமிழர்களின் சிந்துவெளி நாகரிகம் தீவைத்து அழிக்கப்பட்டது. காண்டாவன அழிப்பு- திரிபுர எரிப்பு- மதுரை அழிப்பு- அனுமானால் இலங்கைக்கு வைக்கப்பட்ட தீ சுட்டு எரித்தன, தமிழர் அறிவுக் கருவூலகங்களை! ''கி.பி. 5ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஹணர்கள் இந்தியாவின் உள் புகுந்தார்கள்- இவர்கள் மிகவும் கொடூரமானவர்கள். இவர்கள் இன்றைய ஆரியர்களாகும்- இவர்கள் ஒரு பிரதேசத்தில் புகுவதானால் தீப்பந்தமும் வாளும் ஏந்திச் செல்வார்கள். தீவைத்தே கிராமங்களை அழித்தார்கள்" என D.H. குண்டராவ் தானெழுதிய இந்திய வரலாற்றில் கூறியுள்ளார்.

அடுத்து அச்சகமில்லாததால் ஒரு சில பிரதிகளே கையால் எழுத முடிந்தது. அது ஒரு சிலரிடமே கிடைத்திருந்தது. அப்பிரதிகளைப் பெற்றவர்கள் இறந்த பின் அந்த ஏட்டுச் சுவடியின் முக்கியம் தெரியாதவர்களால்- அது தேடுவாரற்று- செதில்களால் அரித்து அழிக்கப்பட்டன. அச்சகமிருந்திருந்தால் பல பிரதிகள் அச்சாகி பலரிடம் கிடைத்திருக்கும். ஒருவரிடம் இல்லாவிட்டாலும் யாரிடமிருந்தாலும் பெற்று மீள்பதிவு செய்து பாதுகாக்க முடியும். அந்த நிலையுமில்லாது போய் விட்டது. சமய மறுமலர்ச்சி காரணமாக ஏற்பட்ட இலக்கியங்கள் சமயப்பகை காரணமாக எரித்து அழிக்கப்பட்டன. மூடக் கொள்கைகளால் பழம்பெரும் ஏட்டுச் சுவடிகள் அழிக்கப்பட்டன. பதினெட்டாம் பேருக்கு கலைமகள் விழா சரஸ்வதி விழா- மாசி மகம் போன்ற காலங்களில் ஏட்டுச் சுவடிகளைக் கடலிலும் ஆற்றிலும் விடும் வழக்கம் இருந்து வந்தது. அவ்வாறும் பல விலை மதிக்க முடியாத கலைக் கருவூலங்கள் கடலிலும் ஆற்றிலும் கலந்தன.

பல ஏட்டுச் சுவடிகள் கவனிப்பாரற்று- ஆலயங்கள் அடைக்கப்பட்டு பல ஆண்டுகள் கவனிக்கப்படாததால் கரையான் அரித்து அழிந்தன. இலங்கையில் யாழ்ப்பாணத்தை ஆரியச் சக்கரவர்த்திகள் என்ற பெயரில் அரசாண்டவர்கள் தமிழரசர்கள். அவர்கள் பாண்டியரோடு தொடர்புடைய மன்னர்கள். தமிழ் சங்கங்கள் வைத்துத் தமிழ் வளர்த்தார்கள். சிங்கள மன்னன் படை எடுத்து- தமிழ் சங்கங்களையும் நூல்களையும் அழித்தான்- ஸ்ரீலங்காவின் சுதந்திரத்தின் பின் யு.என்.பி. ஆட்சியாளர்கள் யாழ்ப்பாண நூல் நிலையத்தை எரித்தார்கள்- தென்னிந்தியாவில் நாளாந்த புத்தகக் கடைகள் எரிக்கப்பட்டது. அதனால் நூல்கள் அழிந்தன. மறைந்த தமிழ் நூல்கள் அகத்தியம்- அடிநூல்- அபி நாபம்- அபிநந்தமாலை, ஆரியமாலை,- ஆசிரிய முறை, ஆசிரிய முறி ஆன்மயியல் ஆட்சி நூல் இந்திரம்- இந்திரகாவியம்- இளந்திரையம்- எதிர் நூல் ஐந்திரன்- ஒப்பு நூல்- கச்சபுடம்- கடகண்டு- கணக்கியல்- கலியாணக்கதை, கலைக்கோட்டுக் கண்டு கலிப்பாடல்- கவிமயக்கிறை களரியாவிரை- களவுநூல்- காலகேசி கார்கலிசப் பாடினியம்- குருகு- குண்டல கேசி கேயன்நூல்- (வானநூல்) சங்கயாப்பு- சுபந்தம் சதாவாகனம் சிந்தம் சிற்ப நூல் சிறு குரீகியுரை- செயன்முறை தந்திரவுரை, தகடூர் யாத்திரை- தும்பிப்பாட்டு- தேகிமாலை நாகமாரம்- நீலகேசி- பஞ்சமரவு- பதினாறு படலம்- பரிநூல்- பழைய பரிபாடல், பல்காப்பியம்- பல்காயம்- பன்மணிமாலை- பன்னிருபாடல்- பறவைப்பாட்டு- பாண்டியன் மரபு- பாட்டு மடை- பாண்டியன் பாரதம்- புணர்பாவை- புதையல் நூல்- பூத புராணம் பெரியபம்மம்- பெருபாரதம்- வெருவல்வம் பெருவஞ்சி-

**பூ.ம.செல்லத்துரை**

போக்கியம்- மணியாரம்- மந்திரநூல்- மச்ச சுரயாப்பு- மாபுராணம்- மார்க்கண்டகஞ்சி- முதுநாரை- முதுகுருகு- முத்தொள்ளாயிரம் முப்பெட்டுச் செய்யுள்- மூவடி முப்பது- வஞ்சிப்பாட்டு- வளையாபதி- வாய்ப்பியல்- வியாளமாலை- விசாகன்- பாரதம்- வீரமாலை- வீரவிளக்கம்- வீர வணுக்கம்- வெட்டானி- வேந்தியன் முறை- வைப்பியம்- வைரமாலை- வச்சம் தொள்ளாயிரம் முதலியன.

## அழிந்து போன நாடக நூல்கள்

கூத்துவரி- உளநூல்- சயந்தம்- செயிற்றியல் கூத்து நூல்- பரதம்- பரத சேனாதிபதியம்- மதிவாணர் நாடகத்தமிழ் நூல்- முறுவல்- விளக்கத்தார் கூத்து- அடிவைப்பு- அடிவரிசை- உறுப்பாட்சி- முத்திரை விளக்கம்- மொய்ப்பாட்டியல்- முகக் குறிமுறை- கைகூறி முறை- இன்னுரைக் குறிமுறை- நிருத நூல்- தாளக்கட்டு- நாட்டிய விளக்கம்- முதலியன-

## அழிந்து போன இசை நூல்கள்

சிற்றிசை- பேரிசை- இசைநூல்- இசைநுணுக்கம், இசை விளக்கம்- பஞ்ச மரவு- பஞ்சமா பாரதியம்- பண் அமைதி- பண்வரி விளக்கம்- பாட்டும் பண்ணும்- இசைக் கூறு- பாடற் பண்பு- தளவகையோத்து- தாள சமுத்திரம் கருவி இலக்கணம்- ஆளத்தி அமைப்பு- முதலியன-

## அழிந்து போன வைத்திய நூல்கள்

தமிழரிடையே இருந்த மாபெரும் பொக்கிசம் சித்தவைத்தியமாகும்- நவீன யுகத்தில் பல்வேறு ஆய்வுகளை- மலிந்த நேரத்திற் காணமுடியாத- வைத்திய முறைகளைக் கண்டவர்கள் தமிழர்கள்- பதினெண் சித்தர்களும்- கண்டெடுத்த முத்து- சித்த வைத்தியம்- உலகுக் கோள் அழியாத சொத்தாகும்- அவற்றில் நாம் பெற்றவை சொற்பம்- பெறாதவை ஏராளம். அவ்வாறு அழிந்த சித்தவைத்திய நூல்களை நினைத்தால் சித்தம் கலங்குகின்றது. சித்ததை அடக்கி சித்தர்கள் அதாவது இன்றைய விஞ்ஞானிகளான- அன்றைய சித்தர்கள்- தந்த நூல்களில் நாம் இழந்தவை-

01. அகத்தியர் பன்னிரு காண்டம்
02. போகர் எண்ணாயிரம்
03. கோரக்கர் மூலிகைப்பயன்- ஆயிரம்-
04. கொங்கணர் மூவாயிரத்து நூறு,
05. கோரக்கர் வெண்பா.
06. மச்சமுனி- ஏழு காண்டம்.
07. சிவவாக்கியம்- ஐந்து காண்டம்.
08. காசியர் வண்ணம்.
09. வீராமுனி வடகம்.
10. இராம தேவர் சந்தப்பா.
11. நந்தீசர் சந்தம்.
12. சங்குமாமுனி கரித்துறை.
13. திருமூலர் திருமந்திரம் எண்ணாயிரம்.
14. பதஞ்சலி- 7 காண்டம்.
15. சட்டமுனி நிகண்டு.
16. சட்டமுனி இரண்டாயிரத்து எழுநூறு,
17. காங்கிநாகர்- நாலு காண்டம்,
18. போகர் எழுநூறு என்பன

இவை மட்டுமல்லவான சாத்திரம் கட்டிடக்கலை நூல்கள்- சிற்ப ஓவியக் கலை நூல்கள்- பொறியியல் நூல்கள் பலதையும் இழந்தோம்.

---

போட்டியில் பங்குபெற விரும்புவோர் விடைகளை இடமிருந்து வலம், மேலிருந்து கீழ் என வகைப்படுத்தி ஒரு தபாலட்டையில் எழுதிக் கீழே காணப்படும் முகவரியை வெட்டி ஒட்டி அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை அனுப்பும் வாசகர்களில் அதிஸ்டசாலிக்கு 100 ரூபா பணப்பரிசும், பாராட்டுப்பெறும் மேலும் 10 பேரின் பெயர் விபரங்கள் அலையிலும் வெளியாகும். விடைகள் வந்து சேரவேண்டிய கடைசித் திகதி 23-12-2003 ஆகும். எங்கே முயற்சி செய்யுங்கள் பார்ப்போம்.

***முகவரி***

**குறுக்கெழுத்துப்போட்டி-24**
**தமிழ்அலை**
**பிரதானவீதி, கொக்கட்டிச்சோலை**

## குறுக்கெழுத்துப் போட்டி -24

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | ■ |
| 5 | | | | ■ | 6 |
| | ■ | 7 | | 8 | |
| 9 | 10 | ■ | 11 | | |
| 12 | | 13 | | ■ | |
| 14 | | | ■ | 15 | |
| 16 | | | ■ | | ■ |
| ■ | 17 | | | | ■ |

### இடமிருந்து வலம்

(01) அவலட்சணம்
(05) கவர்ந்திழுப்பது (குழம்பியுள்ளது)
(07) எதிரியானவன் (குழம்பியுள்ளது)
(09) உயிர்ப்பின் மூலகர்த்தா.இறுதி எழுத்தை இழந்து திரும்பி நிற்கிறார்.
(11) உருவத்தில் சிறிது எனினும் உறைப்பில் பெரியது (குழம்பியுள்ளது)
(12) செய்தியை இப்படியும் சொல்லலாம்
(14) உறைப்பு (குழம்பியுள்ளது)
(15) நேரத்தின் ஆங்கிலச் சொல்லை சிலர் தவறாக இப்படியும் உச்சரிப்பதுண்டு.
(16) கை (குழம்பியுள்ளது)
(17) அலங்கார நடை நடப்பவர்களை இந்தப் பறவைக்கு ஒப்பிடுவர்.(குழம்பியுள்ளது)

### மேலிருந்து கீழ்

(01) அரண்மனையில் மகளிர் மட்டும் வாசம் செய்யும் பகுதி.
(02) யாத்திரைக்குப் பெயர் போன தென்னிந்தியத் தலம் (தலைகீழ்)
(03) தம்பியின் எதிர்ப்பால் (குழம்பியுள்ளது)
(04) நாட்டுத் தலைவர்களுக்கு சிவப்பு நிறத்தில் இதை விரித்து வரவேற்பது கௌரவிப்பதன் குறியீடாகும்.
(06) பெருமை. மட்டக்களப்பின் பெருமையைக் கூறும் ஒரு நூலை நினைத்தால் சட்டென்று ஞாபகம் வரும்.
(08) பிரி.
(10) இது கையில் இருக்கின்றது என்ற மமதையில் மனம் போன போக்கில் செயற்பட்டால் இதன் காரம் தானாகவே குறைந்து விடும். நம் ஜனாதிபதிக்கு ஏற்பட்டது போல.
(13) இங்கே முத்தமிடுவது அன்பின் அடையாளம். (குழம்பியுள்ளது.)
(15) உள்ளே ஒளிந்து கொண்டு இரத்தத்தை உறிஞ்சுவது. (தலைகீழ்)

## குறுக்கெழுத்துப் போட்டி 22ற்கான விடைகள்

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| (01) வர்க்கம் | (01) வல்வெட்டித் துறை |
| (05) பாரதம் | (02) பாக்(கு) |
| (07) வெகு | (03) கரவடம் |
| (09) வசதி | (04) சதம் |
| (10) பாட்டம் | (06) தி(ட)ம் |
| (12) தம்பதி | (08) பாகு |
| (15) (தே)மல் | (11) வைகுந்தம் |
| (16) குசலம் | (13) பல்லவி |
| (17) வைகறை | (14) நிம்மதி |
| (18) விநி(தி) | |

## பரிசு பெறும் அதிஸ்டசாலி

**கே.எஸ். சிவமூர்த்தி**
**நீர்ப்பாசன திணைக்களம்**
**.செங்கலடி**

## பாராட்டுப் பெறும் அதிஸ்டசாலிகள்

01. செல்வி.சி. கலைமதி, வைத்தியசாலை வீதி, மண்டூர்-03.
02. T.தமிழ்வாணன், பிரதேச செயலகம்,ஆரையம்பதி.
03. சி.யோகேஸ்வரன், சம்பந்தர் வீதி, பெரியபோரதீவு.
04. நா. அனிதன், எஸ். பி. நாதன், கிராமசபை வீதி, தம்பிலுவில் -02.
05. கு. திலீபன், பிரதான வீதி, களுவன் கேணி -2
06. பொ. வசந்தகுமாரி, கி. ப. க, வந்தாறுமூலை.
07. கோ. யௌவனி, வேலாயுதம் வீதி, சித்தாண்டி -04.
08. சி. சித்திரா, கிரான்குளம்- தெற்கு.
09. செல்வி. கு.பவதாரினி, தரம்-6, மட்/வின்சன் மகளீர் தேசிய உயர்தரப் பாடசாலை,
10. வே.நமசிவாயம் தேசிய நீர் வழங்கல் சபை, மன்னார்.

# பொது நலவாயத்தில் பிளவு மீண்டும் தலை தூக்கும் நிறவெறி?

சண்-தவராஜா

உலகிலே இரண்டாவது பெரிய சர்வதேச நாடுகளின் அமைப்பான பொதுநலவாய நாடுகள் அமைப்பில் பிளவு ஏற்படுமோ என்ற அபாயம் தற்போது தோன்றியுள்ளது. பிரித்தானியாவின் குடியேற்ற நாடுகளாக முன்னர் விளங்கிய நாடுகளின் ஒரு அமைப்பே பொதுநலவாயம். இப் பொதுநலவாய அமைப்பு என்பது முன்னைய குடியேற்றவாதக் கொள்கையை நவீன முறையில் செயற்படுத்தும் ஒரு வாய்ப்பை பிரித்தானியாவுக்கு வழங்குவதற்கான ஒரு அமைப்பே என முற்போக்கு வாதிகளால் தொடர்ந்து குற்றச்சாட்டு வைக்கப்பட்டு வருகின்றமையைக் காணமுடிகின்றது.

54 நாடுகள் அங்கம் வகிக்கும் இந்த அமைப்பில் தற்போதும் பிரதான பாத்திரத்தை பிரித்தானியாவே வகித்து வருகின்றது. பெரும்பாலும் ஆபிரிக்க, ஆசிய நாடுகளை அங்கத்தவர்களாகக் கொண்ட இந்த அமைப்பில் அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, கனடா ஆகிய வெள்ளையினத்தவர்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் நாடுகளும் உள்ளன.

புதிதாக விடுதலை பெற்ற நாடுகள் பெரும்பாலும் ஒடுக்குமுறைக்கு எதிரான சோசலிச முகாமின் ஆதரவுடனேயே விடுதலை பெற்றன- இதனால் அத்தகைய நாடுகளும் முற்போக்குச் சிந்தனையுடையனவாக சமதர்மக் கோட்பாடுகளின் அடிப்படையில் தமது நாட்டில் சீர் திருத்தங்களை அறிமுகஞ் செய்து வருகின்றன.

கம்யூனிச முகாமுக்கு எதிராகவும், சோசலிசக் கருத்துக்களைப் பின்பற்றும் நாடுகளுக்கு எதிராகவும் திட்டமிட்ட முறையில் சீர்குலைவு நடவடிக்கைகளை மேற்கொண்டு ஆட்சியைக் கைப்பற்றித் தமது அடிவருடிகளை நியமித்து அந்த நாடுளின் தேசிய வளங்களைத் தொடர்ந்து கொள்ளை யடிக்க நினைக் கும் குடி



யேற்ற நாடுகளும் ஏகாதிபத்திய நாடுகளும் தமது கைங்கரியத்தை இந்த நாடுகளில் செயற்படுத்திய வண்ணமேயே உள்ளன.

இதனால் புதிதாக விடுதலைபெற்ற நாடுகள் நிம்மதியாக ஆட்சியை நடாத்த இயலாத நிலையில் தடுமாற வேண்டி உள்ளன. இன்று ஆபிரிக்காவின் அநேக நாடுகளில் நடைபெற்றுவரும் உள்நாட்டு யுத்தங்களின் காரண காரியத்தை ஆராய்ந்தால் இந்த உண்மை எமக்கு விளங்கும்.

1980இல் சுதந்திரம் பெற்ற முன்னாள் சொடீஷியாவான சிம்பாவே பிரித்தானியாவிடமிருந்தே






சுதந்திம் பெற்றது. த[illegible]போதைய ஜனாதிபதி ரொபட் [illegible]காபே தலைமையில் மிக[illegible]விரமான ஒரு விடுதலைப் போராட்டத்தினூடாகவே இந்நாடு விடுதலைபெற்றது. இந்த மக்களின் விடுதலைப் போராட்டத்தை முறியடிக்க பிரித்தானியா வும், அதன் கூட்டாளிகளும் மேற்கொண்ட நடவடிக்கைகள் பயனளிக்காத நிலையிலேயே சிம்பாவே மக்கள் விடுதலையைப் பெற்றுக் கொண்டனர்.

தென்னாபிரிக்காவில் எத்தகைய நிலமை நிலவியதோ அத்தகைய நிலையே இங்கும் நிலவியது. இங்கும் கறுப்பர்களே பெரும்பான்மையாக இருந்த போதிலும் அதிகாரம் யாவும் சொற்ப எண்ணிக்கையான வெள்ளையர் வசமே இருந்தது. (இதனை இன்றைய சிம்பாவேயின் சர்வதேச கிரிக்கட் அணியில் இடம் பெற்றுள்ள வீரர்களை வைத்தே புரிந்து கொள்ள முடியும்.)

சிம்பாப்வே விடுதலைப் போராட்டத்தில் கறுப்பின மக்களுடன் கைகோர்த்து வெள்ளையினத்தவர்களும் ஒடுக்குமுறைக்கு எதிராக போராடியிருந்த[illegible] ஆனாலும் குடியேற்றவாத[illegible]கள் இந்த உண்மையைத் திட்டமிட்ட வகையில் மறைத்தே வந்தன. இந்த நாட்டில் ஆட்சியதிகாரம் முன்னர் வெள்ளையர்களின் கைகளில் இருந்த காரணத்தினால், நாட்டின் பெரும்பாலான வளமான நிலங்களும் அவற்றில் அமைக்கப்பட்டிருந்த பண்ணைகளும் வெள்ளையருக்கே சொந்தமாக இருந்தன.

இந்நிலையில் சுதந்திரம் பெற்று இரு தசாப்தங்களின் பின்னர் தற்போது நாட்டில் நிலவும் பொருளாதாரச் சிங்கல்களைச் சமாளிக்கவும், வேலையில்லாப் பிரச்சினைக்குத் தீர்வு காணவும் வெள்ளையருக்குச் சொந்தமான பண்ணைகளை அரசுடமையாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதில்த்தான் வில்லங்கமே ஆரம்பமானது.

ஒரு சில வெள்ளையர்கள் தாமாகவே முன்வந்து தமது பண்ணைகளை ஒப்படைத்த போதிலும் கணிசமானோர் அரசின் திட்டத்துக்கு இணங்கவில்லை.

எனினும் அரசு பலாத்காரத்தைப் பாவிக்க உத்தேசித்திராத நிலையில் பொதுமக்களே சட்டத்தைத் தம் கையில் எடுத்துக் கொண்டு வெள்ளையர்களின் பண்ணைகளைத் தம்வசப்படுத்தினர் இதன் போது எதிர்ப்புத் தெரிவித்த வெள்ளையர்கள் சிலர் கொல்லப்பட்டனர்.

சிம்பாவே மக்களின் விடுதலைப் போராட்டத்தின் போது ஆயிரக்கணக்கான மக்கள[illegible]க் கொன்று குவித் வேளை தோன்றாத மனிதாபிமானம் வெள்ளைப் பண்ணையாளர்கள் சிலர் கொல்லப்பட்ட சமயம் சற்று அதிகமாகவே பிரித்தானியாவிடமிருந்து வெளிப்பட்டது.

இந்த விவகாரம் தொடர்பாக உருவான சிக்கலே கடந்த வருடம் சிம்பாவேயை பொதுநலவாய அமையத்திலிருந்து இடைநிறுத்தக் காரணமானது. தற்போது இத்தடையை மேலும் நீடிக்க பிரித்தானியா எடுத்த முடிவே சிம்பாப்வே இந்த அமைப்பிலிருந்து வெளியேறக் காரணமாகின்றது.

குடியேற்றாத எசமானர்களின் நிதிக்குக் காத்துக்கிடக்கும் சக நாடுகளால் கூட சிம்பாவேக்கு ஆதரவாகக் குரல் தரமுடியாத நிலமை. எனினும், பல நாடுகள் உள்ளூர் சிம்பாவேக்கு ஆதரவாகவே உள்ளன. இது பொதுநலவாயம் பிளவு பட்டுவிடுமோ என்ற அச்சத்தைத் தோற்றுவிப்பதாக உள்ளது.

1970,1980 களில் தென் னாபிரிக்கா விவகாரத்தைப் பிரித்தானியா உள்ளிட்ட வெள்ளையின மக்கள் வாழும் நாடுகள் கையாண்ட முறைமை காரணமாக பொது நலவாய அமைப்புக்குள் கறுப்பு- வெள்ளை என்ற பிளவு ஏற்பட்டது. அத்தகைய ஒரு பிளவு தற்போது ஏற்பட்டுள்ளது.

சிம்பாவேயில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ரொபட் முகாபே முறைகேடான முறையில் வெற்றி பெற்றதாகக் கூறப்படுவதே சிம்பாவேயைப் பொதுநலவாய நாடுகள் அமைப்பிலிருந்து விலக்கிவைப்பதற்கு வெளிப்படையாகக் கூறப்படும் காரணமாகும்.

ஈராக்கில் நாசகார ஆயுதங்கள் உள்ளமை தொடர்பாக தமக்குப் புலனாய்வு அறிக்கைகள் கிடைத்திருப்பதாகப் பொய் சொல்லி ஈராக்கிற்குள் படைகளை அனுப்பி ஆக்கிரமிப்பு யுத்தத்தில் ஈடுபடும் ரொனிபிளேயருக்கு சிம்பாவேயைக் குற்றஞ் சாட்டும் தகுதி உண்மையிலேயே இருக்கிறதா?

ஆதிக்குடிகளான அபாருஜன்ஸ் மக்களை இரண்டாந்தரப் பிரஜைகளாக நடாத்திவரும் அவுஸ்திரேலியர்களுக்குத் தான் அதனை ஆமோதிக்கும் தகுதி உள்ளதா?

வல்லான் வகுத்ததே வாய்க்கால் எனும் நிலை இருக்கும் வரை இத்தகைய நிலை தொடரவே செய்யும். பொது நலவாயத்தில் உள்ள மூன்றாம் உலக நாடுகள் தமக்கிடையேயான பேதங்களைக் களைந்து ஒற்றுமைப்படாவிடில் இத்தகைய நிலைக்குத் தீர்வு காண்பது கடினமே.

# சச்சினை விட லாராதான் சிறந்த துடுப்பாட்ட வீரர்

டெண்டுல்கரைவிட லாராதான் சிறந்த துடுப்பாட்ட வீரர் என்று ஆஸ்திரேலிய அணியின் துவக்க ஆட்டக் காரர் ஹெய்டன் கருத்துத் தெரிவித்துள்ளார். அடிலெய் டில் வெள்ளிக்கிழமை நடை பெற்ற இந்திய அணிக்கு எதிரான 2-வது போட்டிக்காக தீவிர வலைபயிற்சியில் ஈடுபட் ட ஹெய்டன் பயிற்சியின் முடிவில் செய்தியாளர்களைச் சந்தித்தார். லாரா ஆடும் முறை சற்று நேர்த்தியாக இருப்பதாக எனக்குத் தோன் றுகிறது. அவரும் என்னை ப்போலவே இடதுகை ஆட்டக் காரர். பந்தை அவர் எதிர் கொள்ளும் விதமும் பீல்டிங் கை அவர் கணித்து ஷாட்டு களைத் தேர்ந்தெடுக்கும் வித மும் அவைகளில் அவர் காட்டும் சுறுசுறுப்பும் என்னை மிகவும் கவர்கின்றன. கிட்டத் தட்ட நானும் அவரும் ஒரே முறையில் ஆடுகிறோம் என்று நான் நினைக்கிறேன். அதனால் லாராவின் ஆட்டம் எனக்குப் பிடித்திருக்கலாம்.

டெண்டுல்கர் வலது கை ஆட்டக்காரராக இருந்து கொண்டு அதையேதான் செ ய்கிறார். ஒரு பந்து வீச்சாளரைக் குறிப்பிட்ட தனக்கு வசதியான இடத்தில் பந்து வீசும்படி டெண் டுல்கர் நிர்பந்தப்படுத்திவி டுவார். அவரிடம் உள்ள அபா யம் அதுதான்... என்னைப் பொறுத்தவரை நான் ஆடும் விதமும் ஓட்டங்கள் சேகரிக்கும் விதமும் எனக்கு டெண்டுல் கரை விட லாராதான் சிறந்த துடுப்பாட்டவீரர் என்று ஆஸ்தி ரேலிய அணியின் துவக்க ஆட்டக்காரர் ஹெய்டன் கருத்து



தெரிவித்துள்ளார். அடிலெய்டில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற இந்திய அணிக்கு எதிரான 2-வது க்கு மிகுந்த திருப்தியளி க்கிறது. ஆடும் முறை சரியாக இருந்தால் ஓட்டங்கள் தானாக வரும் என்று ஹெய்டன் செய்தியாளர்களிடம் கூறினார்

# கவிதைக் களம்

## ஈழத்தாய் சபதம்

### பிரபாகரன் எழுச்சி (வேறு)

வீரம் விளைந்ததடா தமிழ் ஈழமண் மிதினிலே -வரி
வேங்கை எழுந்ததடா வல்வெட்டித் துறையினிலே

ஆரத்தில் ஆல விடத்தினைக் கட்டிய
ஆண்மைக் குமரனடா -பெரும்
ஆபத்தையே பனியாக மதித்திடும்
ஆதித்திய சோதியடா
சீலத்தில் வாய்மையில் போர்ப்படை கட்டிய
சிந்தனையாளனடா -எங்கள்
செந்தமிழன் பிரபாகரன் என்கின்ற
செல்வக் குமரனடா

இந்தியச் சூதினை எட்டியுதைத்திட்ட
எங்கள் தலைவனடா -தமிழ்
விந்தியந் தொட்டு குமரி வரையெனும்
விதியை மறுத்தவன்டா
செந்தமிழ் ஈழ மணித்திரு நாட்டைச்
செதுக்கிய சிற்பியடா ரத்தம்
சிந்திச் சிந்தித் தமிழ் மானத்தைக் காத்திடச்
சீறிடும் வேங்கையடா

குட்டக் குனிந்த தமிழன் நிமிர்ந்து
குதறிட வைத்தவன்டா -அட
எட்டுத் திசையிலும் ஈடிணையற்ற -எம்
ஈழத்தலை மகன்டா
துட்டகெமுனு தொடக்கி வைத்திட்ட
துயரை ஒழித்தவன்டா -நாம்
பட்டது போதுமென்றார்த்து எதிரியில்
பாய்ந்த புலியவன்டா.

(யுகசாரதி)
எஸ்.கருணானந்தராஜா

## ஆளுவோம் வா!

அடிமைத் தமிழனா நீ!?
அன்று தொடக்கம்
அடிபட்டே வந்தாய்
அடிமைத் தமிழனா நீ?



அடிப்பவர்கள் கைகளை
அடித்து முறி!
இடியென முழங்கு
இனத்தை வாழவை!

புறப்படு இன்றே
புதுயுகம் காண்போம்!
அறுபடும் விலங்கு
ஆளுவோம் வா!

தமிழன் தனக்கு
தனித்துவம் உண்டென
தமிழர் பெருமையை
தரணிக்கு உணர்த்து!

e. ,sq;fPud;
mk;gpshe;Jiw.

## சலனங்கள் இல்லை

மூன்று காக்கைகள்
முகத்தோடு முகம் உரசி
முக்காலிபோல் வளைந்த
முள்முருங்கையில் அமர்ந்திருக்க
அக்கா அதைப் பார்த்தாள்.
அத்தானின் நினைவு வந்து
அவள் நெஞ்சை வாட்டிற்று

ஒவ்வொரு நாளும்
ஒன்றாக இருக்குமந்த
ஒற்றுமைக் குடும்பத்தை
உற்று உற்றுப் பார்த்தாள்.



இந்தக் காக்கைகளுக்குள்
என்னதான் உறவு இருக்கிறது?
இரவெல்லாம் சிந்தித்தாள்
தாய் தந்தை பிள்ளையா?
தாரம் இரண்டான
தனிக்குடும்பமா?

அல்லது
மூன்று இனங்களின்
ஒன்று கூடலா?
தனக்குள்ளே வினாவுகையில்....
நீருக்குள் நிற்கும் முள்முருங்கை
நீரின் சலனத்தால்
நெட்டுயிர்த்து அசைகிறது.

ஆனாலும் அந்தக் காக்கைகள்
நீரோட்டம் பற்றியோ
நெடுடுயிர்ப்பு பற்றியோ
நினைவுகள் ஏதுமின்றி
நாளெல்லாம் அக்கொப்பில்
நடைபழகி வாழ்கின்றன.

வாசுகி குணரத்தினம்

## நேற்றைய நினைவுகள்......

### கலிங்கன்

''தொட்டா முள்ளு
துலையிதில்லே......''



சொல் உதிர்ந்து
வாய்க்குள் அடங்கிட
ஒற்றைப் பாதையில்
அவன் நடக்கிறான்.
இன்று பயமில்லை
புயல் ஓய்ந்ததாய்
பேசிக் கொள்கிறார்கள்.
நேற்றைய நினைவெழ
நெஞ்சுள் வலியெழுந்தது.
உருட்டி வதைபட்ட
ஈறல் காடு தாண்டுகையில்
உயிர்வரை தொட்டு
உள்ளத்தில் வலி.
ஓரக்கண்ணால்
நீர் வற்றி நிலம்வெடித்த
குட்டையைப் பார்க்கையில்
அந்த... நினைவெழுந்தது.
''ஆடு மேச்சி வந்த
அந்தப் பெட்டய
இதுக்க தானே
இழுத்துப் போனவனுகள்''
அன்று சிதைந்த
அவன் இதயம்,
இன்று புயல் ஓய்ந்ததாய்
செய்திகள் வந்தும்
இரத்தம் வடிக்கிறது.
அந்த வடுக்கள்
அவனுக்குள் இருக்கும்.

## தமிழன்னை சிரிப்பாள



நம்புங்கள் தமிழ் ஈழம்
நாளை பிறக்கும்!
நாட்டின் அடிமை
விலங்கு தெறிக்கும்!
வீரர்கள் தோள்களில்
மாலை துலங்கும்!
வெற்றி முரசங்கள்
எங்கும் ஒலிக்கும்!
பூபாளம் பாடியே
காலை பிறக்கும்!
பூமியில் தமிழன்னை
பூத்துச் சிரிப்பாள்!

திருமதி.சி.இராமநாதன்
துறுமண்வெளி.

## எப்போது உணர்வாய்?



நீ கரையேற நினைக்கும் போது
என்னைப் படகாக்கிக் கொள்கிறாய!
நீ என்னை அழைத்தது
ஏமாற்றவே என்பதை
நான் உணரவில்லை
நீ நட்சத்திரங்களை
இரசிப்பதற்கு
என்னை இருட்டாக்கிப் பார்க்கிறாய்
ஆனால்
நான்தான் உன்வானம்
என்பதை
நீ எப்போது
உணரப்போகிறாய்?

செ. தாமரைச்செல்வி
ஆரையம்பதி.

# மலைக் குகை

-மணலாறு விஜயன்-

**சென்றவாரத் தொடர்ச்சி.....**

இதைச் சரிவரப்புரியாவிடில் வம்பில் மாட்ட நேரிடும். முத்துலிங்கண்ணனுக்கு இந்த ஆறு அத்துப்படி இருட்டில் கூட நிதானமாக சரியான பாதையில் எங்களை அழைத்துச் செல்வார். நாங்கள் படும் கஸ்டம் அவருக்கு மன வேதனையைக் கொடுத்திருக்க வேண்டும். ஊருறங்கும் சாமத்தில் வண்டில் பூட்டிக் கொண்டு வரத் தொடங்கினார்.

பாசறையில் நாம் சுடும் ரொட்டியையும் சுவையற்ற சாப்பாட்டையும் பார்த்து விட்டு வீட்டிலிருந்து சாப்பாட்டுப் பார்சல்களைக் கொண்டு வரத் தொடங்கினார்.

முத்திலிங்கண்ணனின் மறக்க முடியாத அற்புதங்களைச் சொல்லிக் கொண்டிருந்த அந்த மூத்த போராளி சில கணம் மௌனமாக இருந்தார். குரலில் சற்று தள தளப்பாய் இருந்தது. சில கண மௌனத்தில் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு மீண்டும் சொல்லத் தொடங்கினார்.

முத்துலிங்கண்ணன் பாசறைக்குள் வந்ததும் கொட்டிலுக்குள் வரமாட்டார். ''நீங்கள் இவ்வளவு உதவி செய்தும் உரிமையோடு பழகியும் ஏன் கொட்டிலுக்குள் வர மறுக்கிறியள்'' எனக் கேட்டோம். ''நீங்கள் ஆயுதங்களுடன் பழகுபவர்கள், கட்டுப்பாடுகளை உடையவர்கள் சில வேளை ஏதாவது தவறுகள் நடந்து விட்டால் அல்லது பொருட்கள் காணாமல் போய் விட்டால் அதுக்குப் பாத்திரவாளியாக நானிருக்கக் கூடாதல்லவா'' என விளக்கமளித்தார். பீடி பத்தும் பழக்கம் அவரிடமிருந்தது. ஆனால், எங்களுக்கு முன்னால் இருந்து பத்த மாட்டார். மறைவாகப் போயிருந்து பத்தி முடியவே வருவார். குடிப்பழக்கமும் இருந்ததால் அதனை நிறுத்தி விடும்படி அடிக்கடி கேட்டோம். இயன்றளவு குறைத்துக் கொள்கிறேன். நாளடைவில் நிறுத்தவும் முயற்சிக்கிறேன் எனக் கூறினார். ஒரு நாள் குடியை நிறுத்திவிட்டதை அறிந்து நாங்கள் சந்தோசப்பட்டோம். நீண்ட நாள் துப்பாக்கி சுடும் திறன் பரீட்சிக்கவில்லை. இதனால் பாதுகாப்பான இடம் தேடி காட்டில் நடந்து கொண்டிருந்தோம்.ஒவ்வொரு இடங்களைப் பற்றியும் அவற்றின் வரலாறுகளைப் பற்றியும் சுவாரசியமாக வேட்டைக்கதைகளைப் பற்றியும் கூறிக் கொண்டே நடந்தார் முத்துலிங்கண்ணன். நடுக்காடு புதர் நிறைந்த மலையொன்று. அந்த மலையில் ஆதிவாசிகள் வாழ்ந்தகுகையொன்றைக் காட்டினார். அதற்குள் இருந்த சிறிய கிணற்றில் பாசியை நீக்கி விட்டு தண்ணீர் குடித்தோம். அந்த இடத்திலேயே மனித உருவமொன்றை வரைந்து விட்டு சுடும் பயிற்சியைத் தொடங்கினோம். மனித உருவத்தின் நெஞ்சினைக் குறி பார்த்துச் சுட்டுக் கொண்டிருந்தோம்.

முத்துலிங்கண்ணரிடம் ஜீ.3 துப்பாக்கியைக் கொடுத்து சுடும்படி கூறினோம். ''வேட்டைத் துப்பாக்கியில் சுட்டுப் பழகின நான் இதில சுட குடுத்து வைக்கோணும்'' எனக் கூறிக்கொண்டே குறி பார்த்துச்சுட்டார். தலையில் குண்டு துளைத்தது. ''எதுக்கு குறிபாத்தனீங்க'' எனக் கேட்டோம். தலைக்குக் குறி பாத்துத்தான் எனக்குப் பழக்கம். அதால தலைக்குக் குறிவைத்துச் சுட்டன்'' எனக் கூறினார். எடுத்த எடுப்பில் பயிற்சியற்ற துப்பாக்கியால் குறி தவறாமல் சுட்டத்தை நினைத்தால் இன்னும் வியப்பாகவே இருக்கிறது. மாதங்கள் சில நகர்ந்தன. வந்த நாளிலிருந்து தலைவரிடம் தொட ர்புகள் ஏற்படவில்லை. தொலைத் தொட ர்பு சாதனங்கள் இல்லாததால் கடிதங்கள் மூலமே தலைவருடன் தொடர்புகள் வைத்திருந்தோம். இதனால் பணக்கஸ்ரம் ஏற்பட்டிருந்தது. முத்துலிங்கண்ணன் தனது வறுமையை மறந்து எங்கேயோ கடன்பட்டு ரூபா 3,000 கொண்டு வந்துதந்தார். அந்த நேரம் இந்த உதவி மலையளவு உயர்ந்ததாகவேயிருந்தது.

திருமலை மாவட்டத்தில் முதலில் துரோகிகளை அழிக்கும் படலத்தை ஆரம்பித்தோம். சாம்பல் தீவில் எமது பணி ஆரம்பமானது. இதற்குப் பல வழிகளில் உதவினார். சண்முகராசா, ராசு, ரங்கா என்ற மூன்று துரோகிகளுக்கு மின் கம்பத் தண்டனை வழங்கினோம். இது பற்றிய மக்கள் கருத்தை முத்து லிங்கண்ணனே திரட்டி வந்தார். யாரோ சில குழுக்களுடைய பார்வை இவர் மீது விழுந்து விட்டது. 1985ம் ஆண்டு ஆரம்பகாலம் இராணுவத்தினர் திடீரென இவர் வீட்டுக்கு வந்தனர். வேட்டைக்குச் செல்ல வேண்டுமென அழைத்துச் சென்றார்கள். ஆனால் காட்டுக்குச் செல்லாமல் நேரே திருகோணமலைக் கோட்டைக்குக் கொண்டு சென்றனர். சித்திரவதைகள் எதுவும் செய்யவில்லை. ஆனால் முத்துலிங்கண்ணனுக்குச் சந்தேகம் ஏற்படத் தொடங்கியது. ஒரு நாள் அவரைச் சீருடை அணியும்படி கட்டளை பிறப்பித்தனர். தனது சந்தேகம் உறுதியாவதை முத்துலிங்கண்ணர் உணந்து கொண்டார்.

ஜீப்வண்டி கும்புறுப்பிட்டி நோக்கி விரைந்தது. முத்துலிங்கண்ணரின் வீட்டு வாசலில் வந்து நின்றதும் அவரை உள்ளே சென்று மனைவியுடன் ஏதும் கதைக்கவிருந்தால் கதைத்துவிட்டு வரும்படி கட்டளை பிறப்பித்தனர். வீட்டுக்குள் வந்த முத்துலிங்கண்ணர் மனைவியிடம் இரகசியமாக சில வார்த்தைகளைக் கூறினார். ''மலர் மாஸ்ரரை இருக்கிற இடத்தில் இருக்கச் சொல்லு. என்ட உயிர் போனாலும் இந்த இடத்தைக் காட்டிக் குடுக்க மாட்டானாம் எண்டு சொல்லு. பிள்ளைகளை எனக்கு ஏதும் நடந்தால் பயப்பட வேணாமெண்டு சொல்லு. கவனமாய் அவர்களைப் பார்த்துக் கொள். எனக்கேதும்நடந்தாலும் புலிகள் உங்களைக் காப்பாற்றுவார்கள்'' என்று கூறி மறுகணமே வெளியே வந்தார். ஜீப் வண்டி இவரை ஏற்றிக் கொண்டு விரைந்தது. மறு நாள் மேலும் இருவர் கைதாகினர். மூவருக்கும் சித்திரவதை ஆரம்பமானது.

கண், கை, கால் அனைத்தும் கட்டப்பட்டு மூர்க்கத்தனமாகத் தாக்கப்பட்டனர். புலிகள் இருக்கும் இடத்தைக் காட்டுங்கள்! இல்லையேல் சுட்டு விடுவோம் என்று மிரட்டினர். முத்துலிங்கண்ணர் ஊமையாகினார். கூட இருந்தவர்களில் ஒருவன் தான் காட்டித் தருவதாகக் கூறினான் வேலப்பன். ஜீப் வண்டிகள் வந்து நின்றன.அங்கே நாம் ஆரம்ப காலத்தில் பாவித்த சில பொருட்களை தேடி எடுத்துக் கொண்டனர். மலைக்கு முன்னே மூவரையும் நிரையாக நிறுத்தினர். துப்பாக்கிகள் குண்டுகளைப் பொழிந்தன. மலைக்குகை முன்னே இரத்த வெள்ளத்தில் கிடந்தார் முத்துலிங்கண்ணன்.

''எங்களை சோறூட்டி வளர்த்த இவரை மறந்து விட முடியுமா?'' கடைசி வார்த்தைகளைச் சொல்லும் போது அந்த மூத்த போராளியின் கண்கள் குளமாய் நிறைந்தது. கிழக்கில் முதல் அடைக்கலம் கொடுத்து காத்த மனித தெய்வத்தின் வரலாற்றை நீங்கள் அறியலாம். இன்று அவரது மனைவியும் பிள்ளைகளும் ஈழத்தில் வாழ்கின்றார்கள். உறவுகள் பலர் களத்தில் நிற்கின்றனர். தம்பி நிதி ஆனையிறவு பெரும் சமரில் காவியமாகி விட்டான்.

முற்றும்

-நன்றி- போரும் வாழ்வும்







# சிங்களப்படையின் ஆதிக்கத்தை அழிக்க எழுந்தான் எழிலன்

மட்டக்களப்பிலுள்ள கதிரவெளி எனும் இயற்கை எழில் கொஞ்சும் சிறிய கிராமத்தில் விஸ்வலிங்கம் பாக்கியம் தம்பதிகளுக்கு அருந்தவப் புதல்வனாய் வந்துதித்தான் 2ம் லெப் எழிலன். இவனுக்கு பெற்றோர் இட்ட பெயர் சிறிஸ்கந்தராசா. சிறி என செல்லமாக அழைக்கப்படும் இவன் இவர்களுக்கு இரண்டாவது புதல்வனாவான். இவன் சிறுவயதிலேயே மிகவும் துடிப்புத் தனம் மிக்கவன். இவனது வளர்ந்து வரும் குறும்புச் செயல்களையும் வீர சாகசங்களையும் காண இவனது பெற்றோர் கொடுத்து வைக்கவில்லை. ஏனெனில் அவர்கள் இவ்வுலகை விட்டு நீங்கி விட்டனர்.

பின்பு இவனும் இவனது ஏனைய இரு சகோதரர்களும் தமது அம்மம்மாவின் அரவணைப்பில் வாழ்ந்து வந்தனர். நாளடைவில் இவர்களது கல்விக்காக இவனது இரு சகோதரர்களும் கதிரவெளி கிராம சேவகரின் உதவியுடன் மட்டக்களப்பிலுள்ள இராமகிருஷ்ணமிசனில் சேர்க்கப்பட்டனர். இவன் மட்டும் மட்/ சிவானந்தா வித்தியாலயத்தில் சேர்க்கப்பட்டு தனது ஆரம்பக் கல்வியை முன்னெடுத்துச் சென்றான். விளையாட்டு, கல்வி, கலை நிகழ்ச்சி என பல துறைகளிலும் திறமை சாலியாக விளங்கிய இவன் சங்கீதம் பாடுவதில் மிகவும் திறமை சாலி. தான் ஒரு சங்கீத கலா பூசணமாகவோ அல்லது ஆசிரியராகவோ வர வேண்டும் என்ற உறுதி படைத்தவன். இவனது இந்தத் திறைமையைக் கண்டு இவனுக்கு கல்வி கற்பித்த அனைத்து ஆசிரியர்களும் பாராட்டாத நாளே இல்லை எனலாம். ஆசிரியர்கள் மனதில் இடம் பிடித்த இவன் தன் அன்பாலும் அரவணைப்பாலும் தன் சக மாணவர் மனங்களில் இடம் பிடித்தான். ஆனால் இவனது இந்த நட்பு நீடிக்காத ஒன்று என்பதை எவரும் அறிந்திருக்கவில்லை. ஏனெனில் இவனது துடிப்புத் தனம் காரணமாக 1994ம் ஆண்டு சிவானந்தா வித்தியாலயத்தில் இருந்து விலகினான்.

மேலும் இவனது கல்வியை தனது சொந்த ஊரான கதிரவெளியில் உள்ள மட்/ விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் தொடர்ந்தான். அங்கும் ஒரு சிறந்த மாணவனாக விளங்கியதோடு சங்கீதப் பாடத்தில் திறமை சாலியாக விளங்கினான். இவ்வாறு கல்வியை முன்னெடுத்துக் கொண்டிருந்த போது இவன [illegible]னைத்து ஆசைகளையும் குழி தோண்டிப் புதைக்கப்பட வேண்டிய கால கட்டம் ஆரம்பமானது. அதாவது சிங்கள அரக்கப்படைகளின் ஆட்சி வலுப் பெற்று தமிழ் மக்கள் அவர்களால் சீரழிந்து சிதைக்கப்படுவதை தனது பிரதேசத்தில் கண்ட இவன் எரியும் மலைக் குழம்பாய் குமுறி எழுந்தான். இந்த சிங்களப்படையினரின் ஆதிக்கத்தை அடக்கி எமது நாட்டையும், மக்களையும் பாதுகாக்க வேண்டும் எனத் துணிந்தான். 1995.06.05 அன்று விடுதலைப் புலிகளில் தானும் ஒருவனாக இணைந்து கொண்டான்.

தொடர்ந்து மட்டு 27ம் பாசறையி[illegible] பயிற்சியை முடித்துக் கொண்டு [illegible]ிலன் எனும் எழிலான புனைப் [illegible]ருடன் வெளியேறினான். பயிற்சிப் பாசறைகளிலும் திறமைசாலியாக விளங்கி தளபதிகளின் மனங்களிலும் ஏனைய சகாக்களின் மனங்களிலும் நீங்காத இடத்தைப் பெற்றான். மேலும் கனரக ஆயுதப் பயிற்சியை முடித்து கனரக இயக்குனராக வெளியேறினான். பல தாக்குதல்களிலும் முன்நின்று முகம் கொடுத்து எதிரியுடன் போராடிய இவன் மூத்த தளபதி கேணல் கருணா அம்மானின் வேண்டுகோளுக்கு இணங்க இராணுவப் புலனாய்வுத்துறைக்கு மாற்றப்பட்டான். மாற்றப்பட்டதும் அங்கு உள்ள போராளிகளை தனது அன்பாலும் வழிநடத்தலாலும் ஒரு சகோதரன் போல கவனித்தான். இதனால் அனைவர் மனங்களிலும் ''பசுமத்தாரணி போல'' நீங்காத ஓர் இடத்தைப் பிடித்தான். போராளிகள் கவலையுற்ற இடத்து அவர்களுக்கு ஆறுதல் கூறியும் ஆடிப் பாடியும் அவர்களை மகிழ்விப்பான்.

இவ்வாறாக இருக்கும் நாளில் இவனை ஒரு நாள் மஞ்சள் காமாளை எனும் கொடிய நோய் பீடித்தது. பின்பு மருத்துவப் பிரிவினர் மருத்துவமனைக்கு இவனை ஒப்படைத்தனர். சிகிச்சைகள்

**போராளி:- எழில்மன்னன்**

வழங்கப்பட்டு ஓரளவு குணமடைந்தான். எனினும் ஒரு சில மாதங்களுக்கு இவனுக்கு ஓய்வு தேவை என மருத்துவப்பிரிவின் பொறுப்பாளர் கூறியிருந்தார். இதனை எண்ணி இவன் மிக்க வேதனை அடைந்தான். தனது ஆசைகள் கனவுகள் எல்லாம் மழுங்கடிக்கப்பட்டு விடுமோ என நினைத்து. கண்ணீர் வடித்தான். எப்படியாவது தேசியத்தலைவரைப் பார்க்க வேண்டும் அவருடன் புகைப்படம் எடுக்க வேண்டும் என்பதே இவனதுநீண்ட நாள் கனவும் கூட. இதைவிட தென் தமிழீழத்தில் பல தாக்கு[illegible]ல்களில் ஈடுபட வேண்டும். என்பதும் இவ[illegible]து எல்லை கடந்த ஆசையாகும். அ[illegible]பாழுது 1996.11.30 அன்று லெப் கேணல் [illegible]ீவனின் தலைமையில் தென்தமிழீழம் செல்ல மகளிர் அணியும், மகனார் அணியும் தயாராகிக் கொண்டு இருந்தது. இதை அறிந்த இவன் தன்னையும் இந்த அணியுடன் அனுப்பி வைக்குமாறு மருத்துவப் பொறுப்பாளரிடம் கெஞ்சிக் கேட்டான். ஆனால் அவர்கள் உனது நோய் குணமடையட்டும் அடுத்து செல்லும் அணியுடன் அனுப்பி வைக்கிறோம். எனக் கூற இவனும் பொறுமையுடன் அதனை ஏற்றுக் கொண்டான். எப்படியாவது தான் தென் தமிழீழம் செல்வேன் என எண்ணிய இவனது ஆசையில் சிங்கள அரக்கர்கள் மண்ணள்ளிப் போடப் போகிறார்கள் என்பது அப்போது அவனுக்குத் தெரியாது.

1997.01.03 அன்று அதிகாலை இவர்கள் தங்கியிருந்த மருத்துவமனையைச் சுற்றி வளைத்தனர் வெறிபிடித்த சிங்கள இராணுவத்தினர். காவலில் நின்ற போராளிகள் சுட ஆரம்பித்தனர். பின்னர் அந்த அரக்கர்களும் சுட ஆரம்பித்தனர். இருதரப்பினருக்குமிடையில் சுமார் 30நிமிடம் வரை மோதல் இடம் பெற்றது. இதில் அந்த முகாமில் இருந்த 21 போராளிகள் வீரச்சாவைத் அடைந்தனர். அந்த21 பேரில் 2ம் லெப் எழிலனும் ஒருவனாக வீரச்சாவை தழுவிக் கொண்டான். இவன் இவ்வுலகைவிட்டு நீங்கினாலும் இவனது படைப்புக்கள் எம்மை விட்டு நீங்காது. இவனின் வழியில் நின்று நாமும் இனி வரும் இளம் சமூகம் இணைந்து இவர்களது கனவை நனவாக்கி நாட்டை மீட்போம்.

## "தமிழீழத்தைத் தெரிந்து கொள்வோம்"

280. கேணல் கிட்டுவுடன் வீரகாவியமான தோழர்களுக்கும் நடந்தை விளக்கும் கிராமிய மணம் கமழும் மெட்டுக்களுடனான பாடல்கள், ஆடல்கள் நிறைந்த போரிலக்கியப் படைப்பு எப்பெயரால் அறியப்பட்டது?

''சதியை வென்ற சாவுகள்''

281. 1987 ஜுன் 04ல் இலங்கைத் தீவின் வான்பரப்பில் நுழைந்த இந்திய வான்கலங்கள் உணவு, மருந்துப் பொதிகளைப் போட்ட நடவடிக்கையின் சங்கேதப் பெயர் என்ன?

''பூமாலை நடவடிக்கை''

282. ''பசுமை'' எனும் சஞ்சிகை மட்டு-அம்பாறை தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் வெளியிடப்படுகின்றது. 1990 களில் இருந்து தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் வெளியிடப்பட்ட சஞ்சிகை எது?

''ஆதாரம்''

283. 16.04.1985ல் யாழ் நகரில் தவறுதலாக கைக்குண்டு ''கிளிப்'' கழன்ற போது, தன் தோழர்களைக் காப்பாற்ற குண்டின் மேல் படுத்து தன்னுயிரை ஈகம் செய்த மாவீரரின் பெயர் என்ன?

வீரவேங்கை அன்பு

284. 2003 அக்டோபரில் நடந்த வடக்கு கிழக்கு மாகாணத் தமிழ் இலக்கிய விழாவில் மூத்த பெண் போராளி ஒருவர் எழுதிய ''இனிவானம் வெளிச்சிடும்'' என்ற நாவலுக்கு விருது வழங்கப்பட்டது. பன்முக ஆற்றல் கொண்ட அப்பெண் படைப்பாளி யார்?

''தமிழ்க்கவி''

285. சிறிலங்காக் கடற்படையின் ''அபிதா'' என்ற பெயருடைய கட்டளைக் கப்பல் மீது 04.05.1991ல் கடற்கரும்புலித் தாக்குதலைக் கடற்கரும்புலி கப்டன் சிதம்பரத்துடன் சேர்ந்து மேற்கொண்ட தென் தமிழீழத்தைச் சேர்ந்த முதற்கரும்புலி யார்?

கடற்கரும்புலி கப்டன் ஜெயந்தன் (சம்புக்குட்டி பத்மநாதன், சோதிபுரம், மட்டக்களப்பு)

286. யாழ் பொது நூலகம் சிறிலங்காக் காவல்துறையின் துணையுடன் எரியூட்டப்பட்ட 10வது நினைவு நாளான 01.06.1991ல் தமிழீழத் தேசத்திற்கான முக்கிய பிரிவு ஒன்றின் முதற் தொகுதி உறுப்பினர்களுக்கான தொடக்கப் பயிற்சிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. தமிழீழத்திற்குப் பெருமை தேடித்தரும் அவ்வமைப்பு எது?

தமிழீழக் காவல் துறை

287. படைநகர்த்தல் ஒன்றின் போது, மட்டக்களப்பு-கொழும்பு முதன்மைச் சாலையில் 06.12.2001ல் சிறிலங்காப் படையினருடனான சமரின் போது, வீரச்சாவடைந்த விடுதலைப்புலிகளின் மட்டு-அம்பாறை மாவட்ட துணைத் தளபதி யார்?

லெப்.கேணல் ஜீவன் அல்லது எழிலவன் (பிள்ளையான் சந்திரமோகன், சந்திவெளி, மட்டக்களப்பு)

288. தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப காலத்தில் சிங்களப் படையினரின் உலங்கு வானூர்தி ஒன்று சுட்டு வீழ்த்தப்பட்ட சம்பவம் 1985 செப்டம்பர் 15 இல் எந்த மாவட்டத்தில் நடந்தது?

திருகோணமலையில்

289. பூனகரி, நாகதேவன்துறையில் இருந்த சிங்களக் கடற்படைத் தளத்தின் வலுமிகு நீரூந்து விசைப் படகுகள் (வோட்டர் ஜெட்) பலவற்றைக் கடற்புலிகள் அணி கைப்பற்றக்காரணமான புலிகளின் படை நடவடிக்கை எது?

''தவளை நடவடிக்கை'' (பூனகரிச் சமர்)

290. யாழ் பல்கலைக்கழக மாணவர்களின் பாரிய பங்களிப்புடன் 1990 முற்பகுதியில் ''யாழோசை'' கண்ணனின் இசையமைப்பில் வெளியான பாடல் ஒலிப்பேழை எது?

''விடியலைத் தேடும் பறவைகள்''

291. 27.07.2003ல் கப்டன் அன்பரசியின் நினைவுநாளில் ''மீனகம்'' அரங்கில் அரங்கேறிய தென் தமிழீழத்தின் பெண் போராளிகளின் இசைக்குழுவின் பெயர் என்ன?

''ஞானி இசைக்குழு''

292. மன்னார் மாவட்டத்தில் முதற் தரைக்கரும்புலித் தாக்குதல் 19.03.1991ல் சிலாபத்துறை இராணுவ முகாம் மீது மேற்கொள்ளப்பட்டது. இத்தாக்குதலில் தற்கொடையாற்றிய கரும்புலி யார்?

கரும்புலி மேஜர் டாம்கோ (காசிப்பிள்ளை தயாபரன், முழங்காவில், மன்னார்)

293. தமிழீழ விடுதலைப்போராட்டத்தின் இயங்கு சக்தியை அழிக்கும் நோக்குடன் இந்திய வன்கவர்வுப் படையினர் 1988.05.29ல் மேற்கொண்ட படை நடவடிக்கையின் பெயர் என்ன?

''செக்மேற்-1''



(து.கோமளமைந்தன)

294. தேசிய இன ஒடுக்குமுறை, விடுதலைப்போராட்டம் சார்ந்த வாழ்பனுபவங்களை வெளிப்படுத்தும் வெவ்வேறு 51 கவிஞர்களின் கவிதைகள் கொண்ட கவிதைத் தொகுதி ஐப்பசி 1994ல் தமிழ்த் தாய் வெளியீட்டகத்தால் வெளியிடப்பட்டது. அக்கவிதைத் தொகுதி எது?

''காலம் எழுதிய வரிகள்'' (தொகுதி -01)

295. இந்திய சிறிலங்காக் கூட்டுச் சதிக்குப் பலியான குமரப்பா, புலேந்திரன் உள்ளிட்ட பன்னிரு வேங்கைகள் பயணம் செய்த கடற்கலத்தின் பெயர் என்ன?

''கடற்புறா''

296. வரலாற்றுப் புகழ்பெற்ற ''திம்புப்பேச்சுவார்த்தை'' யின் போது இந்திய இராஜதந்திரி ஒருவரின் வகிபாகம் (பணி) பெரும் சந்தேகத்தை உண்டு பண்ணியது. நடுவு நிலமை நழுவிய அவ்விராஜதந்திரி யார்?

''றொமேஷ் பண்டாரி''

தொடரும்.......

# காத்திரன் பதில்

கே) காத்திரனே! இலங்கைக்கு வருகை தந்திருக்கும் இந்திய வெளியுறவுச் செயலாளர் இடைக்கால நிருவாக சபை தொடர்பாக புலிகள் சமர்ப்பித்த யோசனைகளை முற்றாக நிராகரிப்பதாகக் கூறியதன் காரணம் என்ன?

கே.என்.நிரஞ்சன்- அரசடித்தீவு.

ப) இந்தியாவின் வெளியுறவு, சிறிலங்காவின் உள்ளுறவு, எமக்கு சதியுறவு இதுதான்.

கே) காத்திரனே? சந்திரிக்கா பெண்ணாக இல்லாமல் ஆணாக இருந்திருந்தால் எப்படி இருக்கும்?

எம்.மகிழ்நங்கை- கதிரவெளி.

ப) சந்திரிகா பெண்ணா,ஆணா,பேயாஎன்ற அந்தரங்கம் கதிர்காமருக்கு மட்டுந்தான் தெரியும்.

கே) காத்திரனே? புலியும் சிங்கமும் பேசும் போது நாயார் நடுவில் கிடந்து குரைக்கிறது?

நா.ஷாந்தினி மண்டூர்சேனை சங்கம்கண்டி.

ப)குரைக்கிற நாய் கடியாது தானே. எலும்புத்துண்டைக் கேட்டுத்தான் இவ்வாறு செய்கிறது போலும்.

கே) காத்திரனே! மண்ணாசை, பொருளாசை,பொன்னாசை இருப்பது ஆண்களிடமா? பெண்களிடமா?

த.மகேஸ்.சி.துரை-பண்டாரியாவெளி.

ப) மண்ணாசை இருந்ததால் தானே மாவீரர்கள் வித்தானார்கள். தாய் மண்ணில் ஆசை வைப்பதில் இருவருமே வல்லவர்கள் தான்,அடுத்த ஆசைகள் இதற்குப் பின்பு தான்.

கே) காத்திரன் அண்ணா தாய் மண்ணின் விடியலுக்காய் குருதி சிந்தி சரித்திரம் ஆகிவிட்ட மாவீரர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

சி.பார்த்தீபன். குறிஞ்சாமுனை

கன்னன்குடா.

ப) அந்தச் சிரஞ்சீவிகளை சிரம் தாழ்த்தி வணங்குகின்றேன். அவர்களின் தியாகத்தால் தான் தமிழனாக தலை நிமிர்ந்து வாழ்கின்றோம்.

கே) காத்திரனே! அயல் வீட்டுக் காரர்களை நாம் உறவினர்களாய் நினைக்கும் போது அவர்கள் திடீரென வெறுப்பதற்கு என்ன காரணம்?

கு.சித்திரா.குமாரவேலியார்கிராமம்

செங்கலடி.

ப) உறவினராய் இல்லாமல் நண்பர்களாய் நினைத்துப் பாரும். வெறுக்க மாட்டார்கள்.

கே) வானத்தை விட விசாலமானது எது காத்திரனே?

ந.போஷன் கடற்கரை வீதி- கதிரவெளி.

ப) போராளியின் ஆற்றல்,துணிவு,விவேகம்.

கே) காத்திரனே! கீரிக்கும்,பாம்புக்கும் ஏன் பொருந்துவதில்லை?

உ.லொஷான் கன்னன்குடா.

ப)கீரியும்,பாம்பும்,கறையான் புத்துக்குள் வாழ்வதால் வதிவிடப் பிரச்சினை.

கே) காத்திரனே! கணவன், பிள்ளைகள், உறவினர்கள் இறந்தால் இந்துமதப் பெண்கள் சுடுகாடுவரை செல்லாமல் வாசலுடன் வழியனுப்பிவிட்டு திரும்புவது ஏன்?

சிவலிங்கம் சுமதி.ஏறாவூர்- 04

ப) பெண்கள் தான் வீட்டின் கண்கள் என்பதால் வீட்டுடன் பெண்களை அர்த்தமுள்ள இந்துமதம் வைத்துள்ளது.

கே) காத்திரன் அண்ணா சிகல உறுமய கட்சிக் காரர்கள் எல்லா விடங்களிலும் புலிகளைத் "தப்புக்கணக்கு" போடுகிறார்களே ஏன்?

க.மனோகரன் கோவில் குளம்

ப) புலியின் உறுமல் புரிந்தும் புரியாததும் போல் நடிப்பதால்.

**உங்கள் கேள்விகளை:**

**காத்திரன் பதில்**
**தமிழ் அலை**
**கொக்கட்டிச்சோலை**
எனும் முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்




# அதிகார துஷ்பிரயோகம்

அமைச்சர்கள் நியமனமும்
அவர்களின் பதவி நீக்கமும்
பிரதமரைக் கலந்து
கொண்டே
ஜனாதிபதி செய்ய வேண்டும்.
அதுவே அரசியல் நாகரிகம்
ஆனாலும்
பிரதமர் நாட்டில் இல்லாத
வேளையில்
பிரதமரைக் கலந்து
கொள்ளாமல்
பிரதமருக்குத் தெரியாமல்
மூன்று அமைச்சர்களைப்
பதவி நீக்கம் செய்ததும்
அப்பதவிகளைத் தானே
ஏற்றுக் கொண்டதும்
எந்த வகையில்
நியாயமாகும்?
ஒரு அமைச்சரைப்
பதவி நீக்குவதென்றால்
அதற்கு வலுவான காரணம்
இருக்க வேண்டும்
குற்றச்சாட்டுகள்
முன்வைக்கப்பட்டால்
அவை நிரூபிக்கப்பட
வேண்டும்.
இவை எதுவுமேயில்லாமல்
தன்னிச்சையாக மூன்று
அமைச்சர்களைப்
பதவிநீக்கம் செய்து
தானே அவற்றை
ஏற்றுக் கொண்டது
எந்தவகையில் நியாயம்?
பொறுப்பேற்றது என்ற
கதை
வெறும் புருடா, ஏன்?
அமைச்சில் வழக்கமான
பணிகளை
தனி ஒருவரால் செய்ய
இயலாதே
எனவே இது அப்பட்டமான
அதிகார துஷ்
பிரயோகம்!

-அன்பன்-

# நெருக்கடிகளை எதிர்நோக்கும்....

3ம் பக்கத் தொடர்ச்சி...

அதற்கு மக்கள் அவதானமாக நடக்க வேண்டும் என அக்கறைப்படுகின்றனர். அது நன்மையையே தந்துள்ளது. அதுபோல சட்டத்திற்கு உட்பட்தாக செயற்படுவது விபத்துக்களைத் தடுப்பதோடு மட்டுமல்லாது சட்டத்திற்குப் பயந்து நடப்பதே சமூகத்திற்குப் பாதுகாப்பைத் தரும் என்ற எண்ணத்தை மக்களின் மனங்களில் வேரூன்றச் செய்யும்.

மேலே கூறப்பட்ட சில, பல விடயங்கள் யாருடைய தனிப்பட்ட பயனடைதலுக்குமானதான கருத்துக்கள் அல்ல.இது பொது நலனுடையதாகும். ஆகவே இந்த விடயங்களைக் கவனத்தில் கொண்டு திட்டமிட்டு நடவடிக்கைகளை முன்னெடுப்பது மட்டுமே பாராட்டுக்குரிய தாகும்.

மக்கள் நலன் சார்ந்ததான செயற்பாடுகளிற்கு மக்களும் ஆதரவு கொடுக்க வேண்டும். குறிப்பிட்டுக் கூறுவதென்றால் கட்டாக்காலிகளைப் பட்டிகளில் அடைக்கவேண்டியது அதனை வளப்பவர்களுடைய பொறுப்பு. அதேபோல் வீதியை ஆக்கிரமித்து கடையொன்றுள்ளதென்றால் அந்தக் கடையை நடத்துபவர் மக்களில் ஒருவர். ஆகவே ஒட்டுமொத் தமாகக் கூறுவதெனில் மக்களும் சில தவறுகள் தொடர்வதற்குக் காரணமாகின்றனர்.

நகரத்தில் நடக்கும் அபிவிருத்திப் பணிகளைத் தடுப்பது போலஅரசியல் வாதிகள் தமது செல்வாக்கைப் பயன்படுத்தக் கூடாது வவுனியா மாவட்டத்தில் நகர அபிவிருத்தியைத் தடுக்கும் நடவடிக்கையாக அரசியல் சக்திகள் தலையிடுவது, சில பிரச்சினைகளை நீண்ட காலத்திற்கு இழுத்துச் செல்கின்றது. அமைச்சர் பௌசி பாலம் கட்ட கல் நட்டு திறந்து விழாநடத்தினார். வவுனியா குளத்து வான் தண்ணீர் பாயும் பூந்தோட்டப் பகுதியில் ஆனால்... பாலம் கட்டவில்லை.

நீர் வழிந்தோடக் கூடிய தடுப்பொன்றே கட்டப்பட்டது. இது குளக்கட்டை உடைக்கவோ அல்லது குளக்கட்டால் நீர் வழிந்தோடி வெள்ளத்தை வீடுகளிற்குள்ளும், கடைகளிற்குள்ளும் கொண்டு செல்லக்குடியதாக அமைந்திருக்கின்றது. இந்தப் பாலத்தைக் கட்டாதவர் ஹொறொவப்பொத்தான வீதி புனரமைப்பைத் தடுத்துள்ளார். இது போன்றவை அவர்களின் அரசியல் சாணக்கியத்தை வெளிப்படுத்துகின்றது. இவற்றைப் பத்திரிகைகளில் எழுதி பகிரங்கப்படுத்த வேண்டும் என்பதல்ல எனது நோக்கம். உங்களை நீங்களே உணர்ந்து சுயவிமர்சனம் செய்து நீதியாக நடவுங்கள். அதன் மூலம் மக்கள் சேவையை நிலை நிறுத்துங்கள்.

வவுனியாவில் விபத்துக்களைத் தடுக்கும் நோக்கத்துடன் நடைபெற்ற கூட்டம் வரவேற்கக் கூடியது. மேலும் பல கூட்டங்களை நடாத்தி வவுனியா நகரின் குறிப்பிடப்பட்ட விடயங்களைச் சீர்செய்வதும் சம்மந்தப்பட்டவர்களின் கடமை என்பதைக் கவனத்திலெடுங்கள்.

# நோய் தீர்க்கும் துளசி

குழந்தைகள் மார்பில் சளிகட்டிச் சுவாசிக்க முடியாமல் அவதியுறும் போது துளசியிலைச் சாற்றை தாய்ப்பால் அல்லது பசுவின் பாலில் கலந்து கொடுக்க சளி கரைந்து குணமாகி நாளடை வில் சிறிது சிதாக சளி வெளியே றியும் விடும்.

மேலும் சிறு குழந்தைக ளுக்கு உண்டாகும் அஜீரணக் கோளாறுகளும் நீங்கி விடும்.

துளசியில் சளியைக் கரைத்து வெளியேற்றும் தன்மை யுள்ளதால் ஆஸ்மா நோயால் அவதியுறுவோர்களுக்கு நோயின் தீவிரத்தைக் குறைத்துப் பயன ளிக்கிறது.

கண்கள் தொடர்பான குறைபாடுகள் போக்கி, கல்லீரல், இதயம், குடல், இரைப்பை, சிறுநீர கப் பகுதி போன்ற முக்கியமான உடலுறுப்புக்களை நலமாக வைத்துக் கொள்வதற்கும் துளசி உதவுகிறது.

துளசி இலைகளையும், வேப்பம் துளிர்களையும் சிறிது மஞ்சள் சேர்த்து அரைத்து உட்கொண்டு வர குடல் புண் குணமாகி, குடல் கீரைப்பூச்சிக ளையும் அளித்து வெளியேற்றி விடும். சரும நோய்களான சொறி, சிரங்குகளையும் குண[illegible] வல்லது.

[illegible]ச் சாறெடுத்து சிறிது கிர[illegible]புத்தூள், கற்பூரமும், சேர்த்து வலியுள்ள பல்லில் வைத்து அழுத்திவிட பல்வலி [illegible]ங்கும்.

மண்சட்டியில் ஒருபிடி துளசியிலையை இட்டு நீர் விட்டு மூடி இரவு முழுவதும் வைத்திருந்து காலையில் வெறுவயிற்றில் துளசியை மென்று தின்று நீரையும் குடித்து வர உடல் நலம் பெறும்.

# வாதம் மூட்டுவலிக்கு முடக்கொத்தான்.

உடலில் ஏற்படும் வாதம், கடுப்பு சம்மந்தப்பட்ட நோய்களுக்கு முடக்கத்தான் கை கண்ட மருந்தாகும்.

முடக்கத்தான் இலையை சிறிது வெங்காயமும் நெய்யும் விட்டு வதக்கியும், சுண்டல், ரசம் முதலியன தயாரித்தும் சோற்றோடு கலந்து உண்ணலாம்.

ஆனால் இவைகளுக்கு ஒரு போதும் எலுமிச்சம் பழச்சாறு சேர்த்துக் கொள்ளவே கூடாது.

முடக்கத்தான் உண்ணும் வேளையில் எலுமிச்சம் பழச்சாறு உபயோகித்துச் சமைத்த எந்த உணவு வகைகளையும் உண்ணலாகாது.

மேலும் பாவற்காய், திராய், தயிர் போன்றவைகளையும் தவிர்த்தல் நன்று. ஏனெனில் முடக்கத்தானின் நோய் தீர்க்கும் குணங்களை இவைகள் தடை செய்து விடுமென ஆயுர்வேத வைத்தியர்கள் மூலம் அறியக் கூடியதாகவுள்ளது.

முடக்கத்தானின் வேர், தண்டுகளும் பயன்படுத்தக் கூடியதே. இவைகளை துப்பரவு செய்து வெயிலில் நன்றாக உலர்த்தி இடித்து பொடியாக்கி கோப்பியுடன் கலந்தோ அல்லது கொத்தமல்லி, வேர்க்கொம்பு இவைகளோடு கலந்து வறுத்து இடித்துப் பொடி செய்து கோப்பி தேனீருக்குப் பதிலாக அருந்தலாம். மிகுந்த நலன் கிடைக்கும்.

Regd. as a News Paper at the G.P.O.(QD/101/NEWS/2003)

# அலையின் பார்வையில்

## திருமலை தமிழீழ நீதிமன்று ஓராண்டு நிறைவு





திருமலை மாவட்டத்தில் தமிழீழ மாவட்ட நீதிமன்று ஆரம்பிக்கப்பட்டதன் ஓராண்டு நிறைவு விழா அண்மையில் மிக எழுச்சியுடன் நடைபெற்றது. திருமலை தமிழீழ மாவட்ட நீதிமன்று நீதியாளர் யோகன் பாதர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் திருமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பதுமன், திருமலை மாவட்ட காவற்துறைப் பொறுப்பாளர் தமிழரசன் ஆகியோர் அழைத்து வரப்படுவதையும், நிகழ்வில் திருமலை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திலக், கட்டளைத் தளபதி கேணல் பதுமன், நீதியாளர் யோகன்பாதர் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.





அண்மையில் வன்னிப் பெரு நிலப்பரப்பில் நடந்த மாவீரர் நாள் நிகழ்வுகளில் பெண் கடற்புலிகள் அணிவகுப்பு மரியாதை செலுத்துவதையும், கடற்கலத்தினை ஓட்டிக்காட்டுவதையும் படத்தில் காணலாம் (படம்:கனகரவி)



## கைவிரல் நகத்தில் தாஜ்மகால்

நமது ஊரைச் சேர்ந்த நவீன ஷாஜகான் ஒருவர் கைவிரல் நகத்தில் தாஜ்மகாலை எழுப்பி இருக்கிறார். நமது உடல் உறுப்புகளில் வளர வளர வெட்டி வீசப்படும்போது மீண்டும் மீண்டும் தளிர்த்துக் கொள்வதில் இரண்டு உண்டு. ஒன்று முடி. இன்னொன்று நகம். இவை இரண்டுமே உடல்களில் ஒட்டிக் கொண்டு இருக்கும்போது சீவி சிங்காரிக்கப்படுபவை. வண்ணம் பூசி அலங்கரிக்கப்படுபவை. ஆனால் வெட்டி வீசப்படும்போது துச்சமாக மதிக்கப்படுபவை. உடலின் இந்த மிச்சத்தில் (நகம்) இருந்து உலகின் உச்சத்தில் இருக்கும் தாஜ்மகாலை ஒருவர் உருவாக்கி இருக்கிறார். இந்த நவீன தாஜ்மகாலைச் செதுக்கி இருக்கும் நம்ம ஊர் ஷாஜகான் யார் தெரியுமா? அவரது பெயர் சேகர். சென்னை வண்ணாரப்பேட்டையைச் சேர்ந்தவர். 8-வது வரை மட்டுமே படித்த அந்த இளைஞர் நகைகள் செய்யும் தொழிலாளியாக இருந்து வருகிறார். தங்க ஆபரணங்கள் செய்யப் பயன்படும் கருவிகளைக் கொண்டு பொழுது போக்காக, விரல்களை நோண்டிக் கொண்டு இருந்தபோது இப்படி ஒரு வித்தியாசமான சிந்தனை அவருக்குள் உதயமானது.

உடனே தனது இடது கை பெருவிரல் நகத்தில் தாஜ்மகாலை எழுப்புவது என்று முடிவு செய்தார். அன்று இரவு 8 மணிக்கே அதற்கான அடிக்கல்லையும் நாட்டினார். கூர்மையான கருவிகளால் நுட்பமாகச் செயல்பட்டு இரவு 12 மணிக்கு எல்லாம், தனது பெருவிரலில் தாஜ்மகாலை எழுப்பி விட்டார். கடைசி நிமிட பணியாக, வண்ணப் பேனாக்களால் ('ஸ்கெச்') தாஜ்மகாலுக்கு வர்ணம் பூசினார். இதற்காக அவர் எடுத்துக் கொண்டது சுமார் 4 மணி நேரம் மட்டுமே. சாதனை நகையில் மட்டும் என்ன, நகத்திலும் கூட சாதிக்க முடியும் என்பதை நிரூபித்து இருக்கும் சேகர், தாஜ்மகாலை விரலோடு வைத்துக் கொள்ள விருப்பப்படுகிறார். இருந்தாலும் வேலை பார்க்க வேண்டி இருப்பதால், விரைவில் வெட்டி வீச வேண்டி இருக்கிறதே என்று வேதனையும் படுகிறார்.

தகவலும் படமும் : கரன்



கடந்த வாரம் கோயில்போரதீவு வித்தியாலயத்தில் இடம்பெற்ற போரதீவுப் பற்று கலாசார விழாவின் போது கௌரவிக்கப்பட்ட கலைஞர்களான வை.கந்தையா, பூ.ம.செல்லத்துரை க.நல்லரத்தினம், மு.நாராயணப்பிள்ளை ஆகியோருடன் நடுவில் பிரதேச செயலாளர் க.கருணாகரன் காணப்படுகின்றார்.



சக்கரங்களின் கடவுள் என்னும் இசைத் தட்டில் கண்கள் புடைத்த குகை வாசியாகத் தோற்றமளிக்கும் பிரிட்டிஸ் நடிகர் அன்டி சேர்கிஸ்ஸின் தோற்றமே இது. இப்பாத்திரத்தில் நடிப்பதற்கான அசைவுகளையும், ஒலி எழுப்பும் முறையையும் தான் வளர்க்கும் வீட்டுப் பூனைகளிடமிருந்து கற்றுக்கொண்டதாக அன்டி ஊடகவியலாளருக்குத் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை கொக்கட்டிச்சோலை பிரதான வீதியில் உள்ள நித்திபதிப்பகத்தில் அச்சிட்டு 14-12-2003 அன்றுவெளியிடப்பட்டது.

F:\TAMILALAI Weekly\Tamilalai - 37.cdr